# சமூக அறிவியல்

## ஏழாம் வகுப்பு

### மூன்றாம் பருவம்

# 1. விஜயநகர மற்றும் பாமினி அரசுகள்

## விஜயநகர, பாமினி அரசுகளின் எழுச்சி

முகமது பின் துக்ளக் ஆட்சிக்குப் பிறகு டெல்லி சுல்தானிய வீழ்ச்சியினால் வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் ஏராளமான மாகான ஆளுநர்களும், திரை செலுத்தும் குறுநில அரசர்களும் சுதந்தர அரசுகளை அமைத்து ஆள முற்பட்டனர். டெல்லி ஆட்சியின் பிடியிலிருந்து முதலில் வங்காளமும், முல்தானும் வெளியேறின. தொடர்ந்து, குஜராத், மேவார், மாளவம், மார்வார், காஷ்மீர் ஆகியன தமது சுதந்திரத்தை அறிவித்துக் கொண்டன.

இதன் தொடர்ச்சியாகத் தக்காணம் மற்றும் தென் இந்தியாவிலும் விஜயநகரம், பாமினி பேரரசு ஆகிய இரு பெரும் அரசுகள் எழுந்ததோடு அவை அரசியல் முக்கியத்துவமும் பெற்றன.

## விஜயநகரப் பேரரசு (கி.பி.1336–1672)

ஹொய்சாள அரசர் மூன்றாம் வீர பல்லாளரிடம் ஹரிகரர், புக்கர் ஆகியோர் பணியாற்றினார்கள். முகமது பின் துக்ளக்கினால் ஹொய்சாள மரபு வீழ்ச்சியடைந்த பிறகு, ஹரிகரர் மற்றும் புக்கர் துறவி வித்யாரண்யர் மற்றும் அவரது சகோதரர் சாயனா உதவியுடன் கி.பி.1336 இல் துங்கபத்ரா ஆற்றின் தென்கரையில் விஜய நகர அரசினை உருவாக்கினர். இதன் தலைநகரம் ஹம்பியாகும். பின்னர் இந்தப் பேரரசு, சங்கம, சாளுவ, துளுவ, அரவீடு எனும் நான்கு முக்கிய மரபினர்களால் ஆளப்பட்டது.

கி.பி. 1336 இல் ஆட்சிப்பொறுப்பேற்ற முதலாம் ஹரிகரர், முதலாவதாக மைசூரையும், பின்னர் மதுரையையும் வென்றார். அவரைத் தொடர்ந்து முதலாம் புக்கர் (கி.பி. 1356 ) ஆட்சிக்கு வந்தார். இவரது காலத்தில் பேரரசின் பரப்பானது துங்கபத்ரா ஆறு முதல், தெற்கில் இராமேஸ்வரம் வரையில் விரிவடைந்தது. விஜயநகரப் பேரரசின் சிறப்புக்குரிய மன்னர்கள், இரண்டாம் ஹரிஹரர், முதலாம் தேவராயர், இரண்டாம் தேவராயர், கிருஷ்ண தேவராயர் ஆகியோராவார்.



கிருஷ்ண தேவராயர்

## கிருஷ்ணதேவராயர் (கி.பி.1509 – 1529)

துளுவ மரபைச் சேர்ந்தவர் கிருஷ்ண தேவராயர். இவர் விஜயநகரப் பேரரசை ஆட்சி செய்தவர்களில் குறிப்பிடத் தக்கவராவார். 'கிருஷ்ண தேவராயர் முழு நிறைவான அரசர்' என்று வரலாற்று அறிஞர் டோமிங்கோபயஸ் குறிப்பிட்டுள்ளார்.

## படையெடுப்புகள்

கிருஷ்ணதேவராயர் மாபெரும் வீரராவார். இவர் கி.பி. 1510 இல் சிவசமுத்திரத்தையும், கி.பி. 1512 இல் ரெய்ச்சூரையும், கி.பி. 1523 இல்

வாரங்கலையும், ஒடிசாவையும் வென்றார். மேலும் தக்காணத்தின் பெரும் பகுதியையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே காவிரி வரையிலும், மேற்கே அரபிக்கடல் முதல் கிழக்கே வங்கக்கடல் வரையிலுமாகப் பரந்த பேரரசை நிறுவினார்.

கிருஷ்ணதேவராயர் மிகச்சிறந்த நிர்வாகத் திறமை உடையவர். நீர்ப் பாசன வசதிக்காகப் பெரிய ஏரிகளையும், வாய்க்கால்களையும் ஏற்படுத்தினார். அயல்நாட்டு வணிகத்தின் சிறப்பை உணர்ந்த இவர் கப்பல் கட்டுமானத்தையும் மேம்படுத்தினார். போர்ச்சுக்கீசிய, அரேபிய வணிகக் குழுவினரை நட்புறவோடு நடத்தி, நாட்டின் வருவாயைப் பெருக்கினார்.

கிருஷ்ணதேவராயர் சிறந்த கல்விமான்ஆவார். இவரது அவையில் அஷ்டதிக்கஜங்கள் எனப்படும் எட்டு அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர். கட்டடங்களைக் கட்டுவதிலும் கலைகளை வளர்ப்பதிலும் இம்மன்னர் ஆர்வம் கொண்டிருந்தார். அழகிய ஆலயங்கள் பலவற்றையும், அரண்மனைகளையும் எழிலுறக் கட்டினார். இவரது காலத்தில் விஜயநகரப் பேரரசின் புகழ் உச்ச நிலையை அடைந்தது.

**அஷ்டதிக்கஜங்கள்**

அல்லசாணி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தெனாலிராமன், பட்டு மூர்த்தி, புனவீரபத்திரன், துர்ஜதி, மல்லண்ணா, மற்றும் பனாஜி சூரானா ஆகியோர்.

### தலைக்கோட்டைப் போர் (கி.பி.1565)

கிருஷ்ணதேவராயருக்குப் பின் வந்த அரசர்கள் திறமையற்றவர்களாக இருந்தனர். இராமராயர் ஆட்சியின் போது, பாமினி அரசுகளான, அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா, பீடார் ஆகிய முஸ்லீம் நாடுகள் கூட்டாக விஜயநகர் மீது படையெடுத்தன. கி.பி.1565இல் தலைக்கோட்டை என்னுமிடத்தில் நடைபெற்ற பெரும் போரின் போது விஜயநகர மக்கள் இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். விஜயநகரம் சூறையாடப்பட்டு நாசமாக்கப்பட்டது. இராமராயர் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

### நிர்வாகச் சிறப்புகள்
### மைய, மாகாண, கிராம நிர்வாகம்.

விஜயநகர ஆட்சியாளர்கள் ஒரு சிறந்த கட்டமைப்பு கொண்ட நிர்வாக முறையைப் பின்பற்றினர். நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் அரசர் பெற்றிருந்தார். அவருக்கு உதவிட அமைச்சர்கள் பலர் இருந்தனர்.

பேரரசு ஆறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நாயக் எனப்பட்ட ஆளுநர்கள் மாகாணங்களை நிர்வகித்தனர். மாகாணங்கள் பல மாவட்டங்களாகவும், மாவட்டங்கள் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கிராமமும் 'கிராமசபை' என்னும் குழுவினரால் ஆளப்பட்டது. அக்குழுவில் தலைமுறை வழிவந்த, கணக்காளர், எடையாளர், காவல்காரர், குற்றேவலர் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். மகாநாயக்காச்சாரியார் என்னும் மைய அரசின் அதிகாரியால் கிராம நிர்வாகங்கள் அனைத்தும் கண்காணிக்கப்பட்டன.

### இராணுவம்

படைப்பிரிவில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகியன பெரும்பங்கு வகித்தன. தலைமைத் தளபதியின் நேரடி நிர்வாகத்தில் படைகள் இருந்தன.

### நிதித்துறை

நாட்டின் வருவாயானது வேளாண்மையைச் சார்ந்திருந்தது. நிலங்கள் முறையாக அளக்கப்பட்டு அதன் மண் வளத்திற்கேற்ப வரி விதிக்கப்பட்டது. வேளாண்துறை மீது தனிக் கவனம் செலுத்தப்பட்டு புதிய அணைகளும், வாய்க்கால்களும் ஏற்படுத்தப்பட்டன.

### நீதித்துறை

மன்னர், நாட்டின் தலைமை நீதிபதியாகவும் விளங்கினார். வழக்குகள் இந்து நெறிமுறைகளின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டன. குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. நீதிக்குப் புறம்பாக நடப்போரிடம் அபராதமும் வசூலிக்கப்பட்டது.

### பெண்களின் நிலை

பெண்களின் நிலை மேம்பட்டிருந்தது. அரசியல், சமுதாயம், இலக்கியம் போன்றவற்றில் பங்கு கொண்டனர். ஆயுதமேந்துதல், மல்யுத்தம் உள்ளிட்ட தற்காப்பு கலைகளிலும் ஆர்வம் காட்டினர். இசையிலும், நுண்கலைகளிலும் ஈடுபாடு கொண்டிந்தனர். பெண்களில் சிலர் கல்வியில் தேர்ச்சி பெற்று விளங்கினர். நியுனஸ் தனது நூலில் பெண் சோதிடர்கள், எழுத்தர், கணக்காளர், காவலர், மல்யுத்த வீராங்கனைகள் ஆகியோர் அரசவையில் இடம் பெற்றிருந்தனர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

### சமூக வாழ்க்கை

மக்களது வாழ்க்கை முறையின் விவரங்களை வெளிநாட்டுப் பயணியர் எழுதிய குறிப்புகளின் மூலமாக நாம் அறிகிறோம். குழந்தைத்திருமணமும், வரதட்சணை முறை, பலதார மணமும், உடன்கட்டை ஏறுதலும் நடைமுறையில் இருந்தன. மன்னர், சமயங்களைப் பின்பற்றுவதில் முழு உரிமையை மக்களுக்குக் கொடுத்தார்.

### பொருளாதார நிலை

விஜயநகரப் பேரரசு வளமும், செழுமையும் மிக்கதாகக் காணப்பட்டது. அரசின் வேளாண்மைச் சீர்த்திருத்தங்களால் விளைச்சல் அதிகரித்தது. நெசவு, சுரங்கம், உலோகம், வாசனை திரவியம் சார்ந்த பல தொழிற்கூடங்கள் இயங்கின. இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவுகள், மலேய தீவுக் கூட்டங்கள், பர்மா, சீனா, அரேபியா, பாரசீகம், தென்னாப்பிரிக்கா, அபிசினியா மற்றும் போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். வெளிநாட்டுக்கப்பல் போக்குவரத்துக்கு கோவா, டையூ, கொல்லம், கொச்சி முதலியன முக்கிய துறைமுகங்களாக விளங்கின. பேரரசிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் வாசனைப் பொருள்கள், தானியங்கள், பட்டு, பருத்தி, அபின், சாயப்பொருள்கள், முத்து, குங்குமப்பூ. இஞ்சி, சர்க்கரை, தேங்காய் போன்றவை குறிப்பிடத்தக்கவை. அதே வேளையில், குதிரைகள். பாதரசம், சீனப்பட்டு, மிருதுவான வெல்வெட் துணி, யானைகள் மற்றும் தாமிரம் போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

### கலை, இலக்கியக் கொடைகள்

கலை, கல்வி ஆகியவற்றிற்கு விஜயநகர மன்னர்கள் பெரும் ஆதரவு தந்துள்ளனர். கோயிற்கட்டுமானக் கலைக்கு, ஹசரா ராமசாமி கோயிலும், விட்டலசாமி ஆலயமும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். உலோக உருக்குக்கலைச் சிறப்பிற்குக் கிருஷ்ணதேவராயர் சிலையே ஒரு மகுடமாகும்.

மன்னர்களால் பல அறிஞர்கள் ஆதரிக்கப்பட்டனர். சமஸ்கிருதம்,

தெலுங்கு, தமிழ், கன்னட இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன. வேதங்களுக்கான உரையைச் சாயனா எழுதினார். கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் அமுக்த–மால்யதா என்னும் நூலை எழுதினார், மேலும் அவர் உஷாபரிநயம், ஜாம்பவதி கல்யாணம் ஆகிய சமஸ்கிருத நூல்களையும் எழுதியுள்ளார்.



விட்டலசாமி கோயில்

**விட்டலசாமி கோயில்**

விட்டலசாமி கோயில் கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. இக்கோயிலின் முன் பக்கத்தில் ஒரே பாறையால் செதுக்கப்பட்ட ரதம் ஒன்று உள்ளது. இக்கோயிலின் தூண்கள் தட்டினால் இசை எழுப்பும் இயல்பு இதன் சிறப்பு அம்சமாகும். இத்தூண்கள் இசைத் தூண்கள் அல்லது 'சரிகம' தூண்கள் என்று அழைக்கப்படுகின்றன.

### விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சி

அரவீடு வம்சத்தின் ஆட்சியாளர்கள் திறமையற்றவர்களாய் இருந்ததால் அதனைப் பயன்படுத்திக்கொண்ட மாகாண ஆளுநர்கள் தங்களது சுதந்திரத்தை அறிவித்துக்கொண்டனர். பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டா ஆட்சியாளர்கள் விஜயநகரின் சில பகுதிகளை இணைத்துக்கொண்டனர். தென் பகுதி நாயக்கர்கள் சுதந்திரத்தை அறிவித்துக்கொண்டனர். இதனால் கிபி 1614 இல் விஜயநகரப்பேரரசு வீழ்ச்சியடைந்தது.

### பாமினி அரசு (கி.பி.1347–1526)

கி.பி.1347 முதல் கி.பி.1526 வரையில் தக்காணத்தில் பாமினி அரசு வலிமையுடன் செயல்பட்டது.

### அரசியல் வரலாறு

ஹசன்கங்கு பாமினி என்பவர் கி.பி.1347இல் இவ்வரசைத் தோற்றுவித்தார். இவர் தேவகிரியைச் சேர்ந்த துருக்கிய அலுவலர் ஆவார். வடகிழக்கில் மாகூர் முதல் தெற்கே தெலுங்கானா வரையில் உள்ள அனைத்துப் பகுதிகளையும் கைப்பற்றினார். வாரங்கலை ஆண்ட இந்து மன்னரை வென்று, கொல்காப்பூர், கோவா, மாண்டு, மாளவம் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். இதனால் இவரது பேரரசு, அரபிக்கடல் முதல் வங்கக்கடல்வரையும், தக்காணத்தின் பெரும் பகுதியாகக் கிருஷ்ணா நதிவரையிலும் அமைந்தது. இவரது தலைநகரம் குல்பர்கா ஆகும்.

### முதலாம் முகமது ஷா (கி.பி.1358– 1377)

இவர் சிறந்த போர் வீரரும், நிர்வாகியுமாவார். விஜயநகர மன்னர் முதலாம் புக்கரையும், வாரங்கலின் கபயா நாயக்கர்களையும் போரில் தோற்கடித்தவராவார்.

### இரண்டாம் முகமது ஷா (கி.பி. 1378– 1397)

இவர் அமைதியை விரும்பினார். அண்டை நாடுகளுடன் நட்பை வளர்த்தார். பல மசூதிகளையும், மதரஸா என்ற கல்விக்கூடங்களையும், மருத்துவமனைகளையும் கட்டினார்.

### பெரோஸ் ஷா பாமினி (கி.பி.1397– 1422)

இரண்டாம் முகமது ஷா இறப்புக்குப் பிறகு பெரோஸ்ஷா பாமினி ஆட்சிக்கு வந்தார். சிறந்த போர் வீரராக விளங்கிய இவர் விஜயநகர மன்னர் முதலாம் தேவ ராயரை வென்றார். தமது நிர்வாகத்தில்

இந்துக்களுக்கும் இடமளித்தார். தமது ஆட்சியின் இறுதியில், விஜயநகர அரசர்களினால் தோற்கடிக்கப்பட்டு, நாட்டின் வட, தென் பகுதிகளை இழந்தார்.


### அகமது ஷா (கி.பி.1422 – 1435)

இவர் பெரோஸ்ஷா பாமினியை அடுத்து பட்டமேற்றார். இவர் கொடுங் கோலராகவும், இரக்கமற்றவராகவும் இருந்தார். இவர் வாரங்கல் பகுதியை வென்றதால் தமது தலைநகரைக் குல்பர் காவிலிருந்து பீடாருக்கு மாற்றினார். இவர் கி.பி.1435இல் மரணமடைந்தார்.

**முகமது கவான்**

ஆற்றலும், அறிவு நுட்பமும் கொண்டவர் கவான். சிறந்த நிர்வாகியான இவர், நிதித் துறையைச் சீரமைத்தார். கல்விக்கு ஊக்கம் கொடுத்தார். வரிமுறையில் மாற்றங்களை உண்டாக்கினார். படைத்துறையில் ஊழலை ஒழித்து ஒழுங்கு செய்தார்.

**பாமினி, விஜயநகரப் பேரரசு**



தக்காண முஸ்லீம்களின் பொய்யான குற்றச்சாட்டை நம்பிய மன்னர் முகமது ஷா, கவானுக்கு மரண தண்டனையளித்தார். அதன்படி கி.பி.1481இல் கவான் கொல்லப்பட்டார், கவான் கொல்லப்பட்ட ஒரே ஆண்டுக்குள் முகமது ஷாவும் குற்ற உணர்வில் மரணமடைந்தார்.

### மூன்றாம் முகமது ஷா (கி.பி.1463 –1482)

கி.பி.1463இல் மூன்றாம் முகமது ஷா பட்டமேற்ற போது அவருக்கு வயது ஒன்பது. எனவே அவருக்கு முகமது கவான் பாதுகாவலராக இருந்து ஆட்சி செய்தார். நிர்வாக ஆற்றல் கொண்ட முகமது கவானின் வழிகாட்டுதலால் பாமினி அரசு மிக வலிமை மிக்க நாடானது. முகமது கவானால், கொங்குநாடு, சங்கமேஸ்வர், ஒரிஸ்ஸா, விஜயநகர் ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இக்காலத்தில் பாமினி அரசின் எல்லையாக இரு கடல்களும், தபதி, துங்கபத்ரா நதிகளும் இருந்தன.

### பாமினி அரசு சிதறுதல்


கி.பி.1482இல் முகமது ஷா இறந்தார். அவருக்குப் பின்பு பதவிக்கு வந்த வாரிசுகள் வலிமையற்று இருந்தனர். அதனால் பாமினி அரசு ஐந்து சிறு நாடுகளாகச் சிதறுண்டது. அவை பீஜப்பூர், அகமதுநகர், பீரார், பீடார், கோல்கொண்டா ஆகியனவாகும்.

### நிர்வாகம்

பாமினி அரசின் நிர்வாகம் நிலமானிய முறையில் அமைந்தது. நாடு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை தராஃபுகள் எனப்பட்டன. தராஃப் ஒவ்வொன்றையும் தராஃப்தார் அல்லது அமீர் நிர்வகித்தார். ஆளுநர்கள் போர்க்காலங்களில் மன்னருக்குப் படைவீரர்களையும், போர் தளவாடங்களையும் அனுப்பி உதவினர். ஆளுநர்கள் வலிமை பெற்றவர்களாக இருந்தார்கள்.

### பாமினி அரசின் கொடைகள்

பாமினி அரசர்கள் கல்விக்காகச் சிறப்பு கவனம் செலுத்தினர். குறிப்பாக அரபு, பாரசீக மொழிகளைக் கற்க ஊக்கமளித்தனர். உருது மொழி வளர்ச்சியுற்றது. எண்ணற்ற மசூதிகள், மதரஸாக்கள், நூலகங்கள் கட்டப்பட்டன. முகமது கவான் கட்டிய மதரஸா மற்றும் சுல்தான்களால் கட்டப்பட்ட குல்பர்கா ஜும்மா மசூதி, கோல்கொண்டா கோட்டை, பீஜப்பூரில் உள்ள கோல்கும் பாஸ் கட்டடம் ஆகியன அவர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.



கோல்கும்பாஸ்
கோல்கொண்டா கோட்டை

**கோல்கும்பாஸ்**

பீஜப்பூரில் உள்ள கோல்கும்பாஸ் கட்டடம் ‘முணுமுணுக்கும் அரங்கம்’ என்ற சிறப்பைப் பெற்றது. ஏனெனில், இங்குள்ள அரங்கத்தின் ஒரு மூலையில் நின்று மெல்லப் பேசினாலே அதன் எதிரொலியை எதிர்முனையில் தெளிவாகக் கேட்க முடியும்.

சமூக அறிவியல்



கோல்கொண்டா கோட்டை

### கோல்கொண்டா கோட்டை

கோல்கொண்டா கோட்டை மிகப் பெருமை வாய்ந்த ஒன்றாகும் இக்கோட்டையின் நுழைவாயிலில் எழுப்பும் கரவொலி மலையின் மேல்பகுதி வரை தெளிவாகக் கேட்பது இதன் தனிசிறப்பாகும்.

## பாமினி அரசின் வீழ்ச்சி

பாமினி அரசின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. விஜயநகர அரசர்களுடன் தொடர்ச்சியாகப் போர்கள், மூன்றாம் முகமது ஷாவுக்குப் பின்னர் திறமையற்ற அரசர்களின் ஆட்சி, அயல்நாட்டுப் பிரபுக்களின் கலகங்கள் போன்றவை பாமினிஅரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. விஜயநகரப் பேரரசு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ______________ .

அ) கி.பி. 1337 ஆ) கி.பி. 1336 இ) கி.பி. 1338

2. ஹரிகரர், புக்கர் சகோதரர்கள் பணியாற்றிய ஹொய்சாள அரசர் ______________ ஆவார்.

அ) மூன்றாம் வீர பல்லாளர் ஆ) இரண்டாம் நரசிம்மர் இ) ஆறாம் பில்லம்மா

3. விஜய நகரப் பேரரசின் புகழ்மிக்க அரசர் ______________ ஆவார்.

அ) ஹரிகரர் ஆ) புக்கர் இ) கிருஷ்ண தேவராயர்

4. 1347 இல் தக்காணத்தில் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம் பேரரசு ______________ ஆகும்.

அ) அடிமை ஆ) விஜயநகர இ) பாமினி

5. ______________ வின் பாதுகாவலராக முகமது கவான் இருந்தார்.

அ) மூன்றாம் முகமது ஷா ஆ) ஹசன்கங்கு இ) அகமது ஷா

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கிருஷ்ண தேவராயரின் அவையை அலங்கரித்த எட்டு அறிஞர்கள் ________________ என அழைக்கப்பட்டனர்.
2. ________________ காலத்தில் விஜயநகரப் பேரரசின் புகழ் உச்சநிலையை அடைந்தது.
3. இராமராயர் ________________ போர்களத்தில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.
4. பாமினி பேரரசை நிறுவியவர் ________________ ஆவார்.
5. பாமினி அரசர்கள் அரபு மற்றும் ________________ மொழிகளைக் கற்க ஊக்கமளித்தனர்.

## III) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. விஜயநகரம் | – | பிஜப்பூர் |
| 2. தலைக்கோட்டைப் போர் | – | உஷாபரிநயம் |
| 3. கிருஷ்ண தேவராயர் | – | குல்பர்கா |
| 4. ஜிம்மா மசூதி | – | துங்கபத்திரா நதியின் தென்கரை |
| 5. கோல்கும்பா | – | கி.பி. 1565 |

## IV) சுருக்கமாக விடையளி.

1. விஜயநகரப் பேரரசுசின் வீழ்ச்சிக்கான காராணங்கள் யாவை ?
2. விஜய நகரப் பேரரசின் முக்கிய அரசர்கள் யாவர் ?
3. தலைக்கோட்டைப் போர்ப்பற்றி சிறுகுறிப்பு வரைக.
4. பாமினிப் பேரரசு யாரால், எப்போது நிறுவப்பட்டது ?
5. பாமினிப் பேரரசிலிருந்து இறுதியில் பிரிந்த ஐந்து தக்காண முஸ்லீம் அரசுகளின் பெயர்களை எழுதுக.

## V) விரிவான விடையளி.

1. விஜயநகரப் பேரரசின் சிறப்புகளை விரிவாக எழுதுக.
2. பாமினிப் பேரரசின் அரசியல் வரலாற்றை விரிவாகக் கூறுக.

## உருவாக்க மதிப்பீடு

1. ஒப்பிடுக

விஜயநகரப் பேரரசு காலத்திலிருந்த கிராம நிர்வாக முறையை இன்றைய தமிழக கிராம நிர்வாக முறையோடு ஒப்பிடுக.

2. திறன் வெளிப்பாடு

அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான தெனாலிராமன் அறிவுக் கூர்மையை விளக்கும் கதை ஒன்றினை நயம்படக் கூறுக.

3. கலந்துரையாடுக

டோமிங்கோ பயஸ் என்பவரின் கூற்றுப்படி “கிருஷ்ண தேவராயர் முழு நிறைவான அரசர்” என்பதை விவாதி.

4. நியாயப்படுத்துக

வரலாற்றுச் சுற்றுலா செல்ல சிறந்த இடம் விஜய நகரப் பேரரசா ? பாமினிப் பேரரசா ? என்பதைக் குழு விவாதம் செய்க. எந்தக் குழு சிறப்பான கருத்துகளைக் கூறியது ? என்பதை வகுப்பறை மாணவ, மாணவியர் முடிவு செய்க.

5. வெளிக்கொணர்க

விஜயநகரப் பேரரசு காலத்தில் பெண்களின் நிலை மேம்படிருந்தது. இன்றைய நிலையில் கீழ்க்கண்ட துறைகளில் சிறந்து விளங்கும் பெண்மணிகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

அரசியல் , சமூகம் , விளையாட்டு.

6. செய்து காண்பிக்க

அ. விஜய நகர மற்றும் பாமினி பேரரசுகள், கலைக்கும் கட்டடக் கலைக்கும் ஆற்றிய பங்களிப்பு பற்றிய படங்களைச் சேகரித்து படத்தொகுப்பு ஒன்றைத் தயாரிக்கவும்.

ஆ. இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

பீரார், பீடார், கோல்கொண்டா, அகமது நகர், விஜய நகர்

## 2. பக்தி மற்றும் சூஃபி இயக்கங்கள்

இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இயக்கமானது இந்தியா முழுவதும் பரவி, பல நூற்றாண்டுகளுக்கு இம்மண்ணில் நின்று நிலவியது, பக்தி இயக்கத்தைப் பரப்பிய துறவிகள் பொதுவாக இறைப்பற்றையே முன்னிலைப் படுத்தினர். அதுமட்டுமின்றி இறைவனை வழிபடுவதன் குறிக்கோளே முக்தி அடைவதற்காகத் தான் என்பதை அறிவுறுத்தினர். மேலும் இந்துக்களின் மனதில் நல்ல மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தொடங்கப்பட்ட பக்தி இயக்கம், இந்து–முஸ்லீம் நட்புறவையும் வலியுறுத்தியது. பக்தி இயக்கங்களைப் பரப்பியவர்கள் பல்வேறு இடங்களையும், பல்வேறு காலகட்டங்களையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

### தென்னிந்தியாவில் பக்தி இயக்கம்

தென்னிந்தியாவில் ஆட்சி செய்த பண்டைய அரசுகளான, பல்லவர், சோழர், பாண்டியர் காலத்தில் மக்கள் சைவம், வைணவம் ஆகிய சமய வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். அதனை அன்றைய காலகட்டத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தழைத்தோங்கிடச் செய்தனர்.

**பக்தி இயக்கத்தைப்பற்றிய பொதுவான கருத்து.**

பக்தி இயக்கம் முதலில் தென் இந்தியாவிலேயே தொடங்கப்பட்டது. பின்னர் இராமானந்தர் அதனை வடஇந்தியாவில் கொண்டுபோய் சேர்த்தார். கபீர் அதனை மக்களிடையே பிரபலமடையச் செய்தார்.

### நாயன்மார்கள்

63 நாயன்மார்கள் சைவ சமயத்தை நாடெங்கும் பரப்பினார்கள். இவர்களில் திருநாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் முதன்மையானவர்களாவர்.

திருநாவுக்கரசர் என்கின்ற அப்பர் கி.பி.600ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் பிறந்தார். முதலில் சமண சமயத்தைச் சார்ந்திருந்த அப்பர் தனது தமக்கை திலகவதி அம்மையாரின் தாக்கத்தினால் சிவபக்தரானார். இவர் 49,000 க்கும் மேற்பட்ட பதிகங்களை எழுதியுள்ளார் எனினும் 311 பதிகங்களே இதுவரை கிடைத்துள்ளன.

ஒரே கடவுள் என்ற கோட்பாட்டையுடைய மாணிக்கவாசகர், கடவுளை அடைய ஒரே வழி ‘அன்பு’ மட்டுமே தவிர, சடங்குகள் இல்லை என உறுதியாக அறிவுறுத்தினார். இவருடைய நூல் திருவாசகம் ஆகும்.

சம்பந்தர் 16,000 பதிகங்களைப் பாடினார் எனக் கூறப்படுகிறது, எனினும் 384 பதிகங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. தென்னாற்காடு மாவட்டத்தில் எட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிறந்தவர் சுந்தரமூர்த்தி ஆவார். 38,000 பதிகங்களைப் பாடினார் என அறிகிறோம். இருப்பினும் 100 பதிகங்கள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன. 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்று நூலான, சேக்கிழாரின் பெரியபுராணத்துடன், தேவாரம், திருவாசகம் அடங்கிய பன்னிரு திருமுறைகள் இக்காலகட்டத்தில் இயற்றப்பட்ட சிறந்த நூல்கள் ஆகும். இந்நூல்களில் தத்துவம், இலக்கிய நயம், பக்திச் சுவை ஆகியன நிறைந்து காணப்படுகின்றன.

## ஆழ்வார்கள்

விஷ்ணுவின் புகழினைப் பரப்பியோர் ஆழ்வார்கள் எனப்பட்டனர். ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவர்களில் நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். ஆழ்வார்கள் பாடிய சுமார் 4000 பாடல்களை நாதமுனி என்பார் நாலாயிரத் திவ்யபிரபந்தம் என்னும் நூலாகத் தொகுத்துள்ளார்.

## பழங்காலப் பக்தியியக்க வரலாறு

பழங்காலத்தில் தென்னிந்தியாவில் பக்தி இயக்கத்தைத் தொடங்கி வைத்தவர்களில் சங்கராச்சாரியரும் ஒருவர். இவர் கேரளாவில், காலடி என்ற இடத்தில் பிறந்தார். ஒரே கடவுள் எனும் அத்வைதக் கொள்கையை இவர் பரப்பினார். பிரம்மம் என்ற தலையாய சக்தியே உண்மை என உரைத்தார். சங்கராச்சாரியார் தமது சீடர்களுக்கு, அன்பு, உண்மை, மதிப்பளித்தல் போன்ற வாழ்க்கையின் அடிப்படைக் கோட்பாடுகளை உணரச் செய்தார்.

## பக்தி இயக்கத்தைப் பரப்பியோர்

இறைவனை வழிபடுவதனால் முக்தி அடையலாம் என்ற கருத்து, பல்வேறு பக்தி இயக்கப் பரப்புரையாளர்களை உருவாக்கியது.



இராமானுஜர்

இராமானுஜர் பக்தி இயக்கத்தைப் பரப்பியவர்களில் குறிப்பிடத்தக்கவர். இவர் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தவர். இவர் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவப்பெரியார் ஆவார். பக்தியின் மூலம் முக்தியைப் பெறலாம் என்பது இவரது கொள்கை வைணவ மார்க்கத்தைப் பின்பற்றுவதில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேறுபாடில்லை என்றுரைத்தார்.

இராமானுஜரின் சீடர் இராமானந்தர் ஆவார். இவர் கடவுள் நம்பிக்கையைப் பெரிதும் போற்றினார். மக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாகக் கருதியதோடு அவர்கள் அனைவரையும் சகோதர, சகோதரிகளாக எண்ணினார். எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும், எல்லா சாதியைச் சேர்ந்தவர்களும் இவரது சீடர்களாயினர். வட இந்திய மக்கள் பேசும் மொழியிலேயே இவர் போதனை செய்தார்.

வல்லபாச்சாரியார், (கி.பி.1479–1531) கிருஷ்ணரை வழிபட்டார். மக்கள் ஒவ்வொருவரும் பக்தியின் மூலம் இறைவனை அடையலாம் என்று போதித்தார்.

பசவர், வீரசைவம் என்ற பிரிவைத் தொடங்கினார். சிவனை வழிபட்ட இவரைப் பின்பற்றியோர் வீரசைவர் அல்லது லிங்காயத்துகள் எனப்பட்டனர். சாதிமுறை, மறுபிறப்பு ஆகியவற்றை இவர் எதிர்த்தார்.

## வடஇந்தியாவில் பக்தி இயக்கம்



சைதன்யர்


சைதன்யர், கி.பி. 1485 இல் வங்காளத்தில் பிறந்தார். கிருஷ்ண வழிபாட்டைப் பிரபலப்படுத்தினார். அன்பும், பக்தியுமே இறைவனை அடையும் நல்வழி என்று போதித்தார்.

கபீர், (கி.பி. 1425 – 1518) இராமானந்தரின் சீடராவார். இந்து முஸ்லீம் ஒற்றுமையை முதன்முதலாக வலியுறுத்தியவர். ஆன்மீகத் துறவிகளுள் இவர் சிறப்பிடம் பெற்றிருந்தார். இவரைப் பின்பற்றியோர் கபீர்பந்த் எனப்பட்டனர். இவரது போதனைகளின் தொகுப்பு பிஜகா எனப்படுகிறது. இவரது பாடல்களில் தோகா வகைப் பாடல்கள் மக்களிடையே தாக்கத்தையும், ஈர்ப்பினையும் ஏற்படுத்தின. மக்களின் வழிபாட்டுப் பாடல்களாகவும் அவை அமைந்தன. இவர், இராமனும், இரகீமும் ஒருவரே என்றார். சிலை வழிபாட்டையும், சாதிமுறைகளையும் இவர் கண்டித்தார்.

**கபீர் எழுதிய கவிதை**

ஒ மனிதனே!
என்னை நீ எங்கு தேடுகிறாய்?
உன்னருகே இருக்கிறேன்.
என்னைக் கோயிலில் தேடாதே,
மசூதியிலும் தேடாதே,
நான் காபாவிலும் இல்லை,
கைலாயத்திலும் இல்லை,
சடங்கின் அருகிலோ
சம்பிரதாயத்தின் அணைப்பிலோ
உன் படையலின் பக்கத்திலோ
பக்தியின் யோகா விரிப்பிலோ நான் இல்லை.
உண்மையாக நீ என்னைத் தேடினால்
நீ என்னை உடனே காண்பாய்.
நொடிப்பொழுதில்
என்னை நீ சந்திப்பாய்.

**கபீரின் பதில்;** ஒ துறவியே !
அனைவரது மூச்சிலும்
இறைவனது மூச்சும் கலந்திருக்கும்.


கபீர்

## குரு நானக் (கி.பி.1469–1538)


குரு நானக்

பக்தி இயக்கத்தின் மற்றுமொரு மகான் குருநானக் ஆவார். இவர் சீக்கிய மதத்தை நிறுவினார். இவர் கபீரின் உற்ற சீடர் ஆவார். லாகூர் அருகில் தால்வாண்டி என்னும் ஊரில் கி.பி.1469 இல் பிறந்தார். கடவுள் ஒருவரே என்பது இவர் கருத்து. இந்து, முஸ்லீம்களிடையே, நம்பிக்கையையும், நட்புறவையும் வளர்க்க முற்பட்டார். உருவ வழிபாட்டினையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்தார். உண்மை, நேர்மை, அன்பு ஆகியவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தினார்.

## மீராபாய்



மீராபாய்

மேவார் நாட்டு மன்னர் ரதோர் ரத்தணாசிங் என்பவரின் மகளும், உதய்பூர் மன்னரின் மனைவியுமான மீராபாய் கி.பி. 1498 இல் பிறந்தார். கிருஷ்ணரின் பக்தையான இவர் பக்தியியக்கத்தின் முக்கியத் துறவியாக விளங்கினார். பஜன் என்னும் வகையிலமைந்த இவரது பாடல்கள் இராஜஸ்தான் பகுதியில் மிகவும் புகழ்பெற்றவையாகும். மீரா பாய்க்காக ஒரு பெரும் கோயில் மேவாரின் தலைநகர் சித்தூரில் கட்டி அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

## மகாராட்டிரத்தின் துறவிகள்

இக்காலக்கட்டத்தில் பல துறவிகள் மகாராட்டிரப் பகுதியில் உருவாயினர். ஞானதேவர், நாமதேவர், ஏக்நாத், துக்காராம், துளசிதாசர், ராமதாசர் ஆகியோர் அதில் குறிப்பிடத் தகுந்தவர்கள். ஞானதேவர் பகவத்கீதைக்கு எழுதிய உரை நூலானது ஞானேஸ்வரி எனப்பட்டது. சொக்கமேளா என்பவர் இவ்வரிசையில் இடம்பெற்ற, தாழ்த்தப்பட்டவர்களில், முதன்மையானவர் ஆவார். ஏக்நாத் சாதிமுறையை எதிர்த்தார். குருராமதாசர், தசபோதா என்ற நூலையும், துளசிதாசர், இராமசரி தமானஸ் என்ற நூலையும் எழுதினர்.

## சூஃபி இயக்கம்

பாரசீகத்தில் தொடங்கப்பட்ட இஸ்லாமிய சீர்திருத்த இயக்கம் இந்தியாவில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் பரவியது. இவ்வியக்கத்தைப் பின்பற்றியோர் சூஃபிக்கள் என அழைக்கப்பட்டனர்.

சூஃபி இயக்கமானது கலிபாவின் போக்கினைக் கண்டித்தது. அரசியலையும், தத்துவத்தையும், இன்பங்களைத் தரும் பொருள்களையும் பயன்படுத்திக் கொள்ளும் கலீபாவின் செயல்களை எதிர்த்தது. முகமது நபியே உண்மையானவர் அவரது கோட்பாடுகளே முழுமையானது என்று சூஃபி இயக்கம் கருதியது. மேலும் தியானமும், பக்தியும் மட்டுமே இறைவனை அடையும் வழிகளெனப் போதித்தது. சடங்குகளை எதிர்த்ததோடு சகிப்புத்தன்மையைப் போற்றியது. சூஃபி இயக்கத்தினர் தம்மை பல குழுக்களாக வகுத்துக் கொண்டனர். குழுவின் தலைவர் (அரபு மொழியில்) ஷேக் (பாரசீக மொழியில்) பீர் அல்லது முர்ஷித் எனப்பட்டார். இக்குழுக்கள் 12 தொகுப்புகளாகச் செயல்பட்டனர் இத்தொகுப்பு 'சில்சிலா' எனப்பட்டது. சில்சிலா என்றால் தொடர் சங்கிலி என்று பொருள். இதுகுருவுக்கும் சீடருக்கும் உள்ள இணைப்பைக் குறிப்பதாகும். சிஸ்டிசில்சிலா குழு முறையானது இந்தியாவில் மிகுந்த செல்வாக்கு பெற்றதோடு, உள்நாட்டுச் சூழலுக்கேற்ப தன்னை வகுத்துக் கொண்ட ஒரு பக்திமார்க்கமாக வளர்ந்தது.

### சூஃபி இயக்கம் – பெயர் வரலாறு

சூஃபி என்றால் முரட்டுக் கம்பளி ஆடையை அணிந்து, எளிமையை வெளிப்படுத்தும் துறவி என்பது பொருள். அதாவது உலகத்தின் பகட்டு வாழ்க்கையை அமைதியாக வெறுப்போர் எனலாம்.

**சூஃபா** என்றால் தூய்மையான என்பது பொருளாகும்.
**சூஃபா** உண்மையையறிய குழுமிய கூட்டத்தினருடன் முகமது நபி நின்று கொண்டிருந்த இடமான, மசூதியின் வெளிப்புற நடைபாதையை இச்சொல் குறிக்கும்.

## இந்திய சூஃபி இயக்கத்துறவிகள்

இந்திய சூஃபி இயக்கத்துறவிகளில் குறிப்பிடத்தக்கவர்கள் குவாஜா மொய்ன்–உத்–தீன்–சிஸ்டி, பாபா ஃப்ரீத், நிஜாம் – உத்– தீன் அவுலியா ஆகியோராவர்.

## குவாஜா மொய்ன் –உத்– தீன்– சிஸ்டி

இவர் கி.பி.1192 இல் இந்தியாவுக்கு வந்து ஆஜ்மீரில் தங்கியிருந்தார். மனிதர்களுக்குச் செய்யும் சேவையே சிறந்த இறைபக்தியாகும் என்றார். மக்கள் இவரை ஏழைகளின் காப்பாளர் என்ற பொருளில் 'கரிப் நவாஜ்' என்று அன்புடன் அழைத்தனர். குழுவாகச் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடுவதையும், கவாலிப் பாடல்களைப் பாடுவதையும்இவர் ஊக்கப்படுத்தினார். கி.பி.1235இல் இவர் இறந்தார். இவரது உடலை அடக்கம் செய்த, ஆஜ்மீரில் உள்ள தர்காவானது முஸ்லீம்களின் புனிதத்தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தேங்காய் உடைப்பது, விளக்குகள் ஏற்றிவைப்பது போன்ற இந்துக்களின் முறைகள் இங்குப் பின்பற்றப்படுகிறது.

## பாபா ஃபரீத்

குவாஜா மொய்ன்–உத்தீன்–சிஸ்டியின் சீடர் பாபாஃபரீத் ஆவார். புகழ்பெற்ற சூஃபி துறவிகளுள் ஒருவராக இவர் விளங்கினார்.

கடவுள் ஒருவரே என்றும், மக்கள் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும் என்ற கொள்கை உடையவராக இருந்தார். மக்கள் எளிமையான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பஞ்சாபி



மொழியில் பாடல்கள் பலவற்றை எழுதினர். அவை இந்துக்களாலும், முஸ்லீம்களாலும் விரும்பிப் பாடப்பட்டன. டெல்லி சுல்தானாக விளங்கிய பால்பன், பாபாஃபரீத்தின் பக்தர் ஆவார்.

## நிஜாம் –உத்–தீன்– அவுலியா

படாயீன் என்ற பகுதியிலிருந்து இந்தியாவுக்கு வந்த இவர் டெல்லியில் தங்கினார். இவர் ஒரு புகழ்பெற்ற இஸ்லாமியத் துறவியாவார். இவரும் பாபாஃபரீத்தின் சீடராக இருந்தவர். சாதி முறைகளையும் வகுப்புப் பிரிவினையையும் வெறுத்தார். இவரை, கடவுளின் அன்பைப் பெற்றவர் என்று பொருள்படும் 'மெஹபூம் – இ– இலாஹி' என மக்கள் புகழ்ந்தனர். இவரது கல்லறை டெல்லியில் உள்ளது. இங்கு முஸ்லீம்கள் மட்டுமின்றி இந்துக்களும் வழிபடுகின்றனர்.

## நாகூர் ஆண்டவர்

நாகூர் ஆண்டவர் கி.பி.16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் ஆவார். இவர், மீரான் சாகிப் என்றும் குவாதிர் வாலி என்றும் மக்களால் புகழப்பட்டார். தமிழகத்தில், நாகூரில் இவரின்

சமூக அறிவியல்

கல்லறை உள்ளது. கட்டட அமைப்பிலும், இங்கு இடம்பெறும் வழிபாட்டு முறைகளிலும், இந்துக்களின் தாக்கம் காணப்படுகின்றன. மேலும் இந்துக்களின் சடங்குகளான, சந்தனம் பூசுதல், பிரசாதம் வழங்குதல். மொட்டையடித்தல். ஆகியனவும் நடை பெறுகின்றன. இங்கு நடைபெறும் கந்தூரி உருஸ் என்னும் விழாவில் அனைத்து மதத்தினரும் பங்கேற்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தர்கா அல்லது கல்லறை

ஷேக் அல்லது துறவியின் கல்லறை யானது (தர்கா) இவரைப் பின்பற்றுவோரது வழிபாட்டுத் தலமாக விளங்குகிறது. காரணம், துறவியர் மரணமடைந்த பின்னர் இறைவனுடன் கலப்பர். இறைவனுடன் நெருக்கமானவர் என எண்ணுவதால் இவர்களது தர்காவை வழிபடுவதன் மூலமாக உலக இன்பத்தையும், ஆன்மீகப் பலன்களையும் பெறமுடியும் என நம்பப்படுகிறது.

### பக்தி மற்றும் சூஃபி இயக்கத்தின் விளைவுகள்

பக்தி மற்றும் சூஃபி இயக்கங்கள், மதவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மக்களைப் பிரித்து எளிமைப்படுத்தின. மதநம்பிக்கையில் மறைந்து கிடந்த மூடநம்பிக்கைகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துக்கூறின. மக்கள் அனைவரும் சமமாகவும், சகோதரத்துவத்துடன் வாழ வழிசெய்தன.

பொதுவாகப் பக்தி இயக்கத் துறவிகள், சடங்குகள், உருவ வழிபாடு, சாதிமுறை, மதகுருவின் அதிகாரம், மத வேறுபாடு ஆகியவற்றுக்கு எதிராக போதனை செய்தனர். அன்பும், பக்தியுமே தனியொருவரைக் கடவுள் தன்மையினை உணரச்செய்யும் என நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்துக்களும், முஸ்லீம்களும், சகோதரத்துவத்துடனும், நல்ல நம்பிக்கையுடனும், ஒத்துழைப்புடனும் வாழ ஊக்கமளித்தனர்.

சூஃபி இயக்கத் துறவிகள், கடவுள் ஒருவரே என்றும், மக்கள் அனைவரும் அவரது பிள்ளைகள் என்றும் போதித்தனர். வாழ்க்கையில் தூய்மையும், ஏழைகளுக்குத் தொண்டு செய்வதையும் வலியுறுத்தினர். சடங்குகளையும், இவைபற்றிய நடைமுறைகளையும் வெறுத்த இவர்கள் மக்கள் நன்னடத்தையுடன் வாழ வேண்டுமென்பதில் அக்கறை கொண்டனர்.

பக்தி, சூஃபி இயக்கத்துறவிகளால், இந்தி, பஞ்சாபி, வங்காளம், தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய வட்டார மொழிகளின் இலக்கியங்கள் மேலும் வளர்ச்சியடைந்தன.

## பயிற்சி

I) சரியான விடையை எழுதுக.

1. _______________ தோன்றிய பக்தி இயக்கமானது இந்தியா முழுவதும் பரவியது.

அ) இடைக்காலத்தில் ஆ) பழங்காலத்தில் இ) இக்காலத்தில்

2. சங்கராச்சாரியார் கேரளாவில் ______________ என்ற இடத்தில் பிறந்தார்.

அ) காலடி ஆ) தால்வண்டி இ) மேவார்

3. குருநானக் நிறுவிய மதம் ____________ .

அ) சீக்கியமதம் ஆ) வீரசைவம் இ) வைணவம்

4. துளசிதாசர் எழுதிய நூல் ____________ .

அ) தோகா ஆ) தசபோதம் இ) இராமசரிதமானஸ்

5. சூஃபி இயக்கம் ஆரம்பமான இடம் __________ .

அ) ஈராக் ஆ) துருக்கி இ) பாரசீகம்

## II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சங்கராச்சாரியர் ______________ கோட்பாட்டினைப் பரப்பினார்.
2. பக்தி இயக்கத்தைப் பரப்பிய இராமனுஜர் சென்னைக்கு அருகில் __________ என்ற இடத்தில் பிறந்தார்.
3. பசவர் தோற்றுவித்த பிரிவு ______________ ஆகும்.
4. ஞானதேவர் பகவத் கீதைக்கு எழுதிய உரை நூல் ______________ . எனப்பட்டது.
5. நாகூர் தர்காவில் ______________ என்னும் விழா கொண்டாடப்படுகிறது.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. நாயன்மார்கள் | தலித் எழுத்தாளர் |
| 2. மாணிக்கவாசகர் | வைணவர்கள் |
| 3. ஆழ்வார்கள் | திருவாசகம் |
| 4. மீராபாய் | சைவர்கள் |
| 5. சொக்கமேளா | கிருஷ்ணனை வழிபட்டார். |

## IV) கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்கவும்.

1. பக்தி இயக்கத்தின் முக்கிய குறிக்கோள்கள் யாவை ?
2. தென்னிந்தியாவில் பக்தி இயக்கத்தின் தாக்கங்கள் யாவை ?
3. கபீர் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
4. பக்தி இயக்கத்தின் மராட்டியத் துறவிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
5. சூஃபிக்கள் எதனை வலியுறுத்தினார்கள் ?

## V) விரிவான விடையளிக்கவும்.

1. இந்தியாவில் பக்தி இயக்கத்தைப் பரப்பியவர்களைப் பற்றி விரிவாக எழுதவும்.
2. இந்தியாவின் சூஃபி இயக்கத்தைப் பற்றி விரிவாக எழுதவும்.
3. இந்தியாவில் பக்தி மற்றும் சூஃபி இயக்கங்களின் விளைவுகள் யாவை ?

## உருவாக்க மதிப்பீடு

1. குழுவிவாதம்

பக்தி இயக்கத் துறவிகளால் கண்டிக்கப்பட்ட சமுதாயச் சீர்கேடுகள் இப்போதும் தொடர்கிறதா ? – விவாதி. அவ்வாறிருப்பின் அவற்றைத் தடுக்கத் தக்க தீர்வினைக் கூறுக.

2. நடித்துக் காண்பிக்க

உனது பள்ளித் தமிழாசிரியர் துணையுடன் தமிழக பக்தி, சூஃபி இயக்கத் துறவிகள் வாழ்வில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை வகுப்பில் நடித்துக் காண்பிக்கவும்.

3. பாடிக் காண்பிக்க

தமிழக பக்தி, சூஃபி இயக்கத் துறவிகளின் பாடல்கள், தோகாக்களைப் பாடவும்.

4. தகவல் சேகரிக்க

பக்தி, சூஃபி இயக்கத் துறவிகளின் கதைகளை இதழ்கள் / நாளிதழ்கள் இவற்றிலிருந்து சேகரித்து வகுப்பறையில் வாசிக்கவும்.

5. செய்து காண்பிக்க

   1. பக்தி, சூஃபி இயக்கத் துறவிகள் படங்களைச் சேகரித்து படத்தொகுப்பு ஒன்று தயாரித்துக் காட்டவும்.
   2. 12 ஆழ்வார்களின் பெயர்கள் மற்றும் அவர்களது இலக்கியப் படைப்புகள் குறித்த தகவல் அட்டை தயாரிக்கவும்.

# 1. பேரிடர் மற்றும் பேரிடர் மேலாண்மை

அண்மைக் காலங்களில் இந்தியா அதிகமாக வெள்ளம், நிலச்சரிவு, சுனாமி மற்றும் புவி அதிர்வு போன்ற இயற்கையினால் ஏற்படும் பேராபத்துகளைக் கண்கூடாகச் சந்தித்தது. இத்தகைய பேரிடர்கள் நாச அழிவுகளையும் ஏற்படுத்துகின்றன. பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களைச் சீரமைக்க மற்றும் புணர்வாழ்வளிக்க பெருமளவு நேரமும் பணமும் தேவைப்படுகிறது. இப்பாடத்தில் பேரிடர், பேரிடர்கள் மேலாண்மை மற்றும் இடர்களினால் துன்பப்படுவதைத் தணித்தல் வழிகளையும் நீங்கள் கற்றறிவீர்கள். சமுதாயத்தையோ சுற்றுப்புறச் சூழலையோ எந்த ஒரு எதிர்மறை நிகழ்வும் பாதிப்படையச் செய்யுமாயின் அது பேரிடர் என அழைக்கப்படுகிறது.

ஐக்கிய நாட்டின் விளக்க உரையில், பேரிடர் என்பது கீழ்க்கண்டவாறு வரையறை செய்யப்பட்டுள்ளது. "சமூகத்தின் பணிகள் தொடர்ந்து தடைபடுதல், மட்டுமின்றி பாதிப்படைந்த சமூகத்தில் உள்ள வளங்களையும் போராடி பயன்படுத்த முடியாத அளவிற்கும் மேல் மனிதர்கள், பொருள்கள் அல்லது சுற்றுச் சூழல் ஆகியவற்றின் இழப்புகள் ஏற்படின் அதுபேரிடர் எனப்படும்". எதற்காக இப்பேரிடர்கள் நிகழ்கின்றன? இந்நிகழ்வுகளில் சில மனிதனால் கட்டுப்படுத்த முடியாத இயற்கையால் ஏற்படுகிறது. மற்ற நிகழ்வுகள் நாம் இயற்கை வளங்களை அதிகமாகச் சுரண்டுவதால் ஏற்படுகிறது என்பதே உண்மை. சுரண்டுவதின் விளைவுகள் வெள்ளம், நிலச்சரிவு, மண் அரிப்பு, உலக வெப்பமயமாதல், வறட்சி மற்றும் இன்னபிற. நாமும்கூட பேரழிவு ஏற்பட காரணமாக இருப்பதால் பேணத்தகு வளங்களைப் பயன்பாடு உடையதாக பயன்படுத்த அறிந்துகொள்வதைக் கடமையாக்கிக்கொண்டால், பேரிடர்களின் மோசமான விளைவுகளிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள முடியும்.

இடர் எனப்படுவது அபாயங்களுக்கு நம்மை உட்படுத்துவது. ஆனால் பேரிடர் என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கையையும் சொத்துகளையும் அழிக்கும் அச்சுறுத்துதல் ஆகும். புயல் என்பது இடராகும். அதுவே அதனால் உயிரிழப்பு, சொத்துகள் இழப்பு ஏற்படின் அது பேரிடராகக் கருதப்படுகிறது.

**பேரிடர்கள்**

| இயற்கைப் பேரிடர்கள் | மனிதனால் உருவாக்கப்படும் பேரிடர்கள் |
|---|---|
| நிலநடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள் நிலச்சரிவுகள், பனிப்பாறை வீழ்ச்சி, புயல், வெள்ளப் பெருக்குகள், வறட்சிகள், சூறைக்காற்றுகள் மற்றும் பிற. | போர், தீ விபத்துகள், சாலை விபத்துகள், கப்பல் மூழ்குதல், அணுகுண்டு வெடிப்புகள், மின்சார விபத்துகள் மற்றும் பிற. |

பேரிடர்கள், இயற்கைப் பேரிடர் (Natural Disaster) மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் பேரிடர் (Man Made Disaster) என இரண்டு வகைப்படுத்தப்படுகின்றன. இயற்கையின் செயலினால் இயற்கைப் பேரிடர் ஏற்படுகின்றன. அதேசமயம் மனிதனின் கவனக்குறைவு, அலட்சியப்போக்கு மற்றும் அறியாமையினால் மனிதப் பேரிடர்கள் ஏற்படுகின்றன.

## இடர் தணித்தல்

இடர் தணித்தல் என்பதை "விளைவின் தீவிரத்தைக் குறைக்கலாம்" என வரையறுக்கலாம். இயற்கையில் ஏற்படும் புயலினைத் தவிர்க்கமுடியாது; ஆனால் புயலினால் ஏற்படும் துன்பங்களைத் தணிக்க முன் கூட்டியே நடிவடிக்கை எடுக்கும்போது மக்களின் உயிரையும், சொத்துகளையும் பாதுகாக்க முடியும்.

## நிலநடுக்கம்

நாம் அறிந்தது போல் பூமியினுடைய மேலோட்டில் ஏற்படும் அதிர்வே நிலநடுக்கம் ஆகும்.

புவித்தட்டு நகர்வுகள், எரிமலை வெடிப்புகள், பருப்பொருள் சிதைவு, நிலச்சரிவுகள் மற்றும் நிலப்பிளவுகள் ஆகிய காரணங்களால் நிலநடுக்கம் ஏற்படுகின்றன.

ஒரு வருடத்தில் நூற்றுக் கணக்கான நில நடுக்கங்கள் ஏற்படினும் சீஸ்மோகிராஃப் எனப்படும் கருவி மூலம் மட்டுமே அவற்றை அறிய முடியும். பேராபத்தை ஏற்படுத்தும் ஒன்று அல்லது இரண்டு நில நடுக்கங்கள் உலகின் ஏதோவொரு பகுதியில் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. நிலநடுக்கம் எந்தப் புள்ளியில் ஆரம்பிக்கின்றதோ அவ்விடம் 'நிலநடுக்க மையம்' எனவும் இம்மையத்திற்கு நேர் எதிரே புவியின் மேற்பரப்பில் அமைந்திருக்கும் புள்ளி

| அதிர்வலை மண்டலங்கள் | அதிர்வலை ஏற்படும் பகுதிகள் | வகைகள் |
|---|---|---|
| ஐந்து | காஷ்மீர், பஞ்சாப், மேற்கு மற்றும் மத்திய இமயமலைப் பகுதிகள், வட கிழக்கு இந்தியப் பகுதி மற்றும் ராணாப் கட்ச் பகுதிகள். | மிக அதிக அபாய நேர்வு மண்டலம் |
| நான்கு | சிந்து கங்கைச் சமவெளி வடிநிலப் பகுதிகள், டெல்லி, ஜம்மு மற்றும் பீகார். | அதிக அபாய நேர்வு மண்டலம் |
| மூன்று | அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் மேற்கு இமயமலைப் பகுதிகள் | மிதமான அபாய நேர்வு மண்டலம் |
| இரண்டு | தக்காணப் பீடபூமி பகுதிகள் மற்றும் தமிழ்நாடு | குறைவான அபாய நேர்வு மண்டலம் |





நிலநடுக்கத்தினால் சேதமடைந்த பலஅடுக்குக் கட்டடங்கள்

வெளிமையம் எனவும் அழைக்கப் படுகிறது.

பொதுவாக நிலநடுக்கம் என்பது மற்ற இயற்கையின் விளைவுகளைவிட அதிக அழிவுகளையும் பயத்தையும் ஏற்படுத்துவது எனக் கருதப்படுகிறது. ஒரு நிலநடுக்கத்தின் பலத்தையும், வெளிமையத்தின் அருகாமையையும் சார்ந்து அந்நில நடுக்கத்தின் பாதிப்புகள் அமையும். பலம்வாய்ந்த நிலநடுக்கங்களினால் கட்டடங்கள், சாலைகள், பாலங்கள் மற்றும் அணைகள் சேதமடையலாம். வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு, பனிப்பாறை வீழ்ச்சிகள், தீப்பிடித்தல், நீர்அளிப்பு தட்டுப்படுதல் மற்றும் மின்சாரத்தடை மட்டுமின்றி உயிரிழப்புகளும் ஏற்படலாம். ஒரு நிலநடுக்கம் ஆற்று பாதையைக்கூட மாற்றமடைய வைக்கும். ஒரு தீவிரமல்லாத நிலநடுக்கத்தினால் கட்டடங்களில், சாலைகளில் மற்றும் பாலங்களில் விரிசல்கள் ஏற்படும்.

ஜனவரி 26, 2001 இல் 51 ஆவது குடியரசுத் தின விழாவின் போது குஜராத்தில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்ப்பட்டது. ரிக்டர் அளவுகோளில் 7.6 மற்றும் 8.1 ஆகியவற்றிற்கு இடைப்பட்ட அளவில் பதிவாகியது. நிலநடுக்க அலைகள் 700 கி.மீ. தூரம் வரை பரவி 21 மாவட்டங்களைப் பாதித்தது. மற்றும் 6,00,000 மக்கள் வீடுகளை இழந்தனர். 19,727 மக்கள் உயிரிழந்தனர். 1,66,001 மக்கள் இடிபாடுகளில் சிக்கி காயமடைந்தனர், 90 சதவீதம் வீடுகள், எட்டுப் பள்ளிகள், இரண்டு மருத்துவமனைகள் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க சுவாமி நாராயணன் கோவில் ஆகியன சேதமடைந்தன.




இந்தியாவில் நிலநடுக்கம் ஏற்படும் பகுதிகளை நான்கு அதிர்வலை மண்டலங்களாகப் பிரிக்கலாம். அவை மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

### இடர் தணித்தல்

சேதங்களின் கடுமையைக் குறைக்க என்ன செய்ய வேண்டும் ?

உயிர் மற்றும் சொத்துகளின் சேதங்களின் கடுமையைக் குறைக்க நிலநடுக்கப் பகுதிகளில் வாழும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நிலநடுக்கத்தைத் தாங்கக்கூடிய கட்டடங்களையும் வீடுகளையும் கட்டுமாறு அறிவுறுத்தப்படுதல் வேண்டும். வீடுகள் கட்டுவதற்கு முன்னர் மண்ணின் தரத்தைப் பரிசோதனை செய்ய உதவி செய்ய வேண்டும். மக்கள் நிலநடுக்கத்தின் போது செய்ய வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிய விழிப்புணர்வு பெற்றிருத்தல் வேண்டும். விழிப்புணர்வு சம்பந்தப்பட்ட செயல்முறைகளைப் பள்ளிகளில்

அளிக்க வேண்டும் அவ்வாறு அளிக்கும் பொழுது சிறிய வயதிலிருந்தே நிலநடுக்கத்திலிருந்துத் தன்னை காத்துக்கொள்ளக் கற்றுக்கொள்கின்றனர்.

நிலநடுக்கத்தின் பொழுது ஒருவர் எடுக்கவேண்டிய படிநிலைகள் என்னென்ன ?

மிகமுக்கியமான நடவடிக்கை யாதெனில் பதட்டப்படாமல் அமைதியாக இருப்பது. நீங்கள் கட்டிடத்தின் உள்ளே இருந்தால் கதவிற்கு அருகாமையிலும் அல்லது ஒரு மேசையின் கீழே குனிந்து அமர்ந்துக்கொள்ளவோ வேண்டும். ஆனால் சன்னல்கள் அல்லது கண்ணாடி பொருத்தப்பட்ட இடங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

திறந்த வெளிப்பகுதிகளில் இருப்பின் மின் கம்பங்கள் மற்றும் மின்சாரக் கம்பிகளுக்கு அப்பால் இருக்க வேண்டும். மோட்டார் வாகனங்களில் பயணம் செய்து கொண்டிருந்தால் சுரங்கப் பாதைகளையோ, மேம் பாலங்களையோ விட்டு விலகிப் பாதுகாப்பான இடத்தினைத் தெரிவு செய்து இருத்தல் வேண்டும்.

தீவிபத்தைத் தவிர்க்க எரிவாயு அடுப்பு, மின்விளக்குகள், மெழுகுவர்த்திகள் மற்றும் ஏனைய விளக்குகளை அணைக்க வேண்டும்.

அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் வாழும் மக்கள் கட்டடங்களை விட்டு வெளியே செல்வதற்கு ஒருபோதும் மின் தூக்கியை (Lift) பயன்படுத்தக்கூடாது. அதற்குப் பதிலாகப் படிக்கட்டுகளைப் பயன்படுத்த வேண்டும்.

## எரிமலை வெடிப்புகள்

நிலநடுக்கம் போல அல்லாமல்



ஐஸ்லாந்து எரிமலை வெடிப்பினால் வெளியேறும் சாம்பல் திரள்

எரிமலை வெடிப்புகளை, அவை வெடிப்பதற்கு முன் அவற்றிலிருந்து வெளிவரும் புகை, வாயுக்கள் வெளியேற்றம், மாக்மா வழிதல் மற்றும் லேசான அதிர்வுகள் மூலமாக முன்னதாகவே நன்கு அறிந்து கொள்ள முடியும்.

எரிமலைகளின் வெடிப்பின் பொழுது லாவா புவியின் உள்ளிலிருந்து வெளியேறும். லாஹார்ஸ் எனப்படும் லாவாமண் குடியிருப்புகளையும், காடுகளையும் மற்றும் பயிர் நிலங்களையும் சேதப்படுத்தும். லாஹார்ஸ் என்பது எரிமலைகளிலிருந்து வெளியேறும் மண் மற்றும் சாம்பல். மழைநீருடன் கலப்பதாலோ அல்லது பனி ஆறு உருகும் போது மண் மற்றும் சாம்பல் கலப்பதினாலோ ஏற்படுவது ஆகும்.

எரிமலையிலிருந்து வெளிப்படும் புகையும், சாம்பல் மேகங்களும் பார்க்கும் தூரத்தை பாதிப்படைய செய்கிறது. அதனால் வான் போக்குவரத்து பாதிப்படைகிறது. தவிர வேளாண்மை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

எரிமலை வெடிப்புகள் பெரிய அழிவுகளை ஏற்படுத்துவது மட்டுமின்றி நல்ல தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது. அவை வெளியேற்றும் மண் மற்றும் சாம்பல் படிவுகள் மண்ணிற்கு ஊட்டச் சத்தைத் தருவதால் மண்ணின் உரத்தன்மை

மேம்படுகிறது. எரிமலையிலிருந்து வெளியேறும் எரிமலைப் பொருள்கள் தொழிற் சாலைகளுக்குப் பயனுடையதாக உள்ளது. லாவாவால் ஏற்படும் பாறைகள் சாலைகள் அமைக்க பயன்படுகிறது. எரிமலையிலிருந்து வெளியேறும் வெப்பநீர் மற்றும் நீராவி புவி வெப்ப சக்தி தயாரிக்கப் பயன்படுகிறது.

நவம்பர் 13, 1985 இல் கொலம்பியாவில் நெவாடா டெல் ருச் பகுதியில் (Nevada del Ruiz) ஏற்பட்ட எரிமலை வெடிப்பினால் 40,000 மக்கள் இறந்தனர். அவ்வெடிப்பினால் அர்மேரோ நகரம் முழுவதும் புதையுண்டு போனது அதேபோல் ஏப்ரல் 14, 2010ஆம் ஆண்டு ஐஸ்லாந்தில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு மிகப் பரந்த அளவில் சாம்பலுடன் புகையைக் கக்கியதால் (பனிப் பாறையிலிருந்து வெளியேறிய கற்குழம்பினால்) 20 க்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளின் விமான நிலையங்கள் மூடப்பட்டன.

## இடர் தணித்தல்

எரிமலையால் மக்கள் உயிர் இழப்பது அரிதாக இருப்பினும் எரிமலை பகுதிகளுக்கு அப்பால் மக்கள் வசிக்க வேண்டும்.

அனைத்து வகையான போக்குவரத்துகளும் தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக, எரிமலை பகுதிகளுக்கு அருகில் விமான போக்குவரத்து தவிர்க்கப்பட வேண்டும்.

எரிமலை வெடிப்புகளால் நிலநடுக்கம் ஏற்படலாம். ஆகவே, மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பனி படர்ந்த மலைப்பகுதிகளில் எரிமலை வெடிப்பின் காரணமாகப் பனி உருகுவதால் வெள்ளப் பெருக்குகள் ஏற்படலாம். எனவே வெள்ளத் தடுப்புச் சுவர்கள் கண்டிப்பாகக் கட்டப்பட வேண்டும்.

எரிமலைப் பரவலைப்பற்றி அறிந்து கொள்ளப் பயன்படும் சாய்வுமாணி (Tilt Meter) கருவியைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

## கடற்கோள்கள் (சுனாமி)

நிலநடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள் அல்லது கடலடி நிலச்சரிவினால் தோன்றும் மிகப்பெரிய அலைகள் அல்லது உயிர் கொல்லும் அலைகளே கடற்கோள்கள் (சுனாமி) ஆகும். இவ்வலைகள் 15 மீட்டர் அல்லது அதற்கு மேலும் உயரத்தைக் கொண்டிருக்கும். கடல் அல்லது பெருங்கடலில் நில நடுக்கம் ஏற்படும்போது அலைகள் பல மீட்டர்கள் வரை உயர்ந்து சில நிமிடங்களில் கடற்கரையை அடையலாம். மிகப்பெரிய நிலநடுக்கத்திற்குப் பிறகும் பல மணி நேரங்களுக்குச் சுனாமி (கடற்கோள்) தோன்றுவதற்கான அபாயம் இருக்கக்கூடும்.

**உங்களுக்குத் தெரியுமா ?**

கடற்கோளின் ஆங்கிலச்சொல் சுனாமி (Tsunami) இச்சொல் ஜப்பானிய மொழியிலிருந்து வந்தது 'Tsu' என்பதன் பொருள் Harbour (துறைமுகம்), 'Nami' என்பதன் பொருள் Waves (அலைகள்)

சுனாமி அலைகள் மணிக்கு 500 கி.மீ வேகத்தில் பயணிக்கும் ஆற்றல் கொண்டவை மற்றும் இவை கண்டங்களை நெருங்கும் போது வேகம் அதிகரிக்கும்.

**உங்களுக்குத் தெரியுமா ?**

இந்தியாவில் சுனாமி எச்சரிக்கை மையம் ஹைதராபாத்தில் நிறுவப்பட்டுள்ளது.

டிசம்பர் 26, 2004இல் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்ட சுனாமிகளின் தாக்கத்தினால் 1,50,000க்கும் மேற்பட்டோர் இறந்தனர்.



கடற்கோளின் சீற்றம்



கடற்கோளின் எழுச்சி



கடற்கோளின் அழிவு

இப்பேரிடரால் ஏற்பட்ட மனஅழுத்தம், பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் இழப்புகளின் அளவினை கணக்கிடமுடியாது. பல கிராமங்களின் வாழ்வாதாரங்கள் முற்றிலும் பாதிப்படைந்தன. கடந்த 40 ஆண்டுகளில் இதுவரை ஏற்பட்ட கடற்கோள்களில் இதுவே மிகப் பெரியதாகும். ஒரே இரவில் நிகழ்ந்த இந்தப் பேரிழப்பு எவராலும் நினைத்துப் பார்க்க இயலாத ஒன்று. மேலும் இது உலகம் முழுவதும் பாதிப்புகளை உணரவைத்தது.

## இடர் தணித்தல்

சுனாமி எச்சரிக்கை மையத்திலிருந்து வரும் தகவல்களைக் கேட்டு அறிய வேண்டும்.

கடற்கோள் குறித்த முன்னெச்சரிக்கையினைத் தொடர்ந்து உடனடியாக மக்கள் கடற்கரைப் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும்.

கடுமையாகப் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடியாக முதலுதவி செய்ய வேண்டும்.

மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லக் கூடாது.

முதலில் உருவான அலை மட்டுமே அபாயகரமானதாக இருக்கும் என்று எண்ணிவிடக்கூடாது. அதைத் தொடர்ந்து வரும் அலைகளும் அபாயகரமானவையாகவே இருக்கும்.

## நிலச்சரிவுகள்



நிலச்சரிவு

பெரும் பாறைகள், பாறைத் துகள்கள் முதலியன கீழ்நோக்கி நகர்வதே நிலச்சரிவு என வரையறுக்கப்படுகிறது. பாறைத் துகள்கள் மழை நீருடன் சேர்ந்து நகர்வதை சேறு வழிதல் (Debris Flow) அல்லது மண் வழிதல் என்கிறோம்.



நிலச்சரிவு

நிலச்சரிவுகளானது சரிவின் நிலையற்ற தன்மை, கனத்த மழைப் பொழிவு, நிலநடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள், காடுகள் அழிப்பு மற்றும் முறைகேடான கட்டிட அமைப்பு ஆகிய காரணங்களால் ஏற்படுகின்றன.

நிலச்சரிவினால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படுகின்றன, குடியிருப்புகள் அழிக்கப்படுகின்றன, சாலைகள் மற்றும் இருப்புப் பாதைகள் சேதமடைகின்றன இவைகளோடு நீரோடைகளின் போக்கு வேறு திசையில் மாற்றப்படுகின்றன.

### இடர் தணித்தல்

மிருதுவான மண் உள்ள பகுதிகளில் வீடுகள் கட்ட வேண்டியிருந்தால் நிலச்சரிவின் போது பாறைத் துகள்கள் விலகிச் செல்ல ஏதுவாக மாற்றுப் பாதைகள் உருவாக்கப்பட வேண்டும்.

நிலச்சரிவின்போதோ அல்லது மண்சரிவின்போதோ சாலைவழிகள் பாதிக்கப்படுமாயின் உடனடியாக வெளியேற மாற்றும் பாதைகள் திட்டமிடப்பட்டிருக்க வேண்டும்.

### பனிப்பாறை வீழ்ச்சி

ஒரு பெரிய பனித் தொகுதி அல்லது பனிப்பாறை மலைச் சரிவை நோக்கி நகர்வதே பனிப்பாறை வீழ்ச்சி என்று அழைக்கப்படுகிறது. இவை உயர் அட்சப்பகுதிகளிலும் மற்றும் உயரமான மலைப்பகுதிகளிலும் ஏற்படுகின்றன.

நிலநடுக்கங்கள், அதிக மழை வீழ்ச்சி, மனித செயல்களினால் உருவாக்கப்படக்கூடிய அதிக இரைச் சல், வேகமான பனிச்சறுக்கு விளையாட்டு, வெடிப் பொருட்களை வெடிப்பது ஆகிய காரணங்களால் பனிப்பாறை வீழ்ச்சிகள்



பனிப்பாறை வீழ்ச்சி



பனிப்பாறை வீழ்ச்சி

ஏற்படுகின்றன. பனிப்பாறை வீழ்ச்சிகள் ஏற்படும் பகுதிகளில் அதிக பனிப்பொழிவு ஏற்படும்போது அதன் தாக்கம் மேலும் தீவிரமாகிறது.

பனிப்பாறை வீழ்ச்சிகளினால் சாலைகள் துண்டிப்பு, சிறிய குடிசைகள், தாவரங்கள், காட்டு விலங்குகள் ஆகியன அழிக்கப்படுகின்றன.

### இடர் தணித்தல்

பனிப்பாறைகளின் வீழ்ச்சிகளை நிறுத்துவதோ தடுப்பதோ கடினமானது. ஆனால் பனிப்பாறை வீழ்ச்சியின் சக்தியைக் குறைப்பதன் மூலம் அதன் தாக்கத்தைக் குறைக்கலாம்.

பனிப்பாறை வீழ்ச்சிகள் ஏற்படும் கோடை வாழிடங்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள், சாலைகள் மற்றும் இருப்புப் பாதைகள் அமைப்பதைத் தவிர்க்கலாம்.

சமூக அறிவியல்

மக்கள் வெடிப்பொருள்களைப் பயன்படுத்தக்கூடாது என அறிவுறுத்தப் படல் வேண்டும்.

மலைச்சரிவுப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வீட்டைச் சுற்றிலும் மரங்களை வளர்க்க ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

பனிப்பாறை வீழ்ச்சிகள் ஏற்படும் பகுதிகளில் அனைத்துவிதமான போக்குவரத்துகளும் தவிர்க்கப்பட வேண்டும்.

## புயல்கள்

பிற பேரிடர்களை விடப் புயலால் தென்னிந்தியக் கடற்கரைப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகள் சிலவற்றில் (குறிப்பாக ஆந்திரப்பிரதேசம், ஒடிசாவில்) உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.



பெரும் புயல்

உலகில் புயலால் பாதிக்க கூடிய 6 முக்கிய பகுதிகளில் இந்தியக் கடற்கரைப்பகுதியும் ஒன்று.

தாழ்வழுத்தப் பகுதியில் வெப்ப மற்றும் குளிர் வளிமுகங்கள் சந்திப்பதால் உருவாகும் பலத்தக் காற்றையே புயல்கள் என்கிறோம். கடல் மற்றும் பேராழிகளில் அலைகள் தோன்றும் போது அவை தீவிரமடைகின்றன. அப்பகுதியில் புயல் காற்றினைத் தடைசெய்ய எவ்விதத் தடுப்பும் இல்லாததே இதற்குக் காரணமாகும்.

புயல் எப்பொழுதும் பலத்த காற்றுடனும் பெரும் மழையுடனும் சேர்ந்து வரும். வலுவானக் காற்றால் மரங்கள் வேருடன் சாய்தல், மின்சார கம்பங்கள் வீழ்தல் அதனால் போக்குவரத்து தடைபடுதல், கட்டடங்கள் சேதமடைதல் மற்றும் மின்சாரத் துண்டிப்புகள் போன்றவை ஏற்படும். தொடர்ந்து பெய்யும் மழையினால் நீர்தேக்கங்கள், வெள்ளம் போன்றவை மக்களின் அன்றாட வாழ்க்கையினை பாதிப்பிற்கு உட்படுத்தும். கனமழை பெய்யின் மண்அரிப்பு, பயிர் அழிவு போன்ற ஆபத்துக்கள், விளைவாக இருக்கும் மரங்கள் வீழ்வதாலும், கட்டடங்கள் சரிதல், வீடுகள் அடித்துச்செல்லப்படுதல் போன்ற நிகழ்வுக்களும், அதனால் உயிர்ச் சேதங்களும் ஏற்படும். மழைநீர் நெடுநாட்கள் தேங்குவதால் நீர் சம்பந்தப்பட்ட நோய்களாகிய காலரா, டைஃபாய்டு போன்றவை பரவ காரணமாகிறது.

**உங்களுக்குத் தெரியுமா ?**

1999 அக்டோபர் 29 இல் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழ் வழுத்தத்தினால் ஒடிஸாவில் மாபெரும் புயல் (Super Cyclone) மணிக்கு 260 கி.மீட்டர்களுக்கும் 300 கி.மீட்டர்களுக்கும் இடைப்பட்ட வேகத்தில் வீசியது ஒடிஸா கடற்கரை சுமார் 144 கி.மீ. தொலைவு வரை பதிக்கப்பட்டது. இப்புயலால் கடல் நீர்மட்டம் இயல்பை விட 12 மீட்டர் உயர்ந்தது. இந்த மாபெரும் புயல் உள்நாட்டுப் பகுதியில் 36 மணி நேரத்தில் 250 கி.மீட்டருக்கு மேல் பயணித்தது. இதனால் 20 மில்லியன் ஹெக்டேர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டன. மரங்கள் மற்றும்

தாவரங்கள் வேருடன் சாய்ந்தன. இப்புயல் பேரழிவை ஏற்படுத்திச் சென்றது. இந்த மாபெரும் புயல் ஒடிஸா மாநிலத்தின் வாழ்வாதாரங்களைச் சிதைத்தது. மேலும் ஆயிரக்கணக்கில் உயிரிழப்பும், பல மில்லியன் மதிப்புள்ள பொருள்சேதங்களும் ஏற்பட்டன.

## இடர் தணித்தல்

நீர் தேங்கும் பகுதிகளில் முன்னேற்பாடாக நீர் அகற்ற அல்லது வடிய தற்காலிக வழிகளை அமைத்திருத்தல் அவசியம்.

பழைய கட்டிடங்கள் வசிக்கும் மக்களை தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும்.

மக்களின் உடைமைகள், முக்கிய ஆவணங்கள், அணிகலன்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

மக்கள் அருகில் உள்ள மின்சாரக் கம்பங்களிலிருந்து கம்பிகள் அறுபட்டு மின் கசிவுகள் இருக்கின்றதா? எனக் கவனிக்க வேண்டும்.

மக்களை கொதிக்கவைத்த நீரை பருக அறிவுருத்த வேண்டும். அவ்வறிவுறையால் நீரினால் பரவும் நோய்கள் தடுக்கப்படுகின்றன.

வானொலி மற்றும் தொலைக் காட்சியில் அரசு அறிவிக்கும் புயல் பற்றிய செய்திகளையும் எச்சரிக்கைகளையும் பின்பற்றி நடக்க வேண்டும்.

## வெள்ளப் பெருக்குகள்

அளவுக்கு அதிகமாக வழிந்தோடும் நீரையே வெள்ளப் பெருக்குகள் என்கிறோம். மிக அதிக மழைப்பொழிவு, புயல், பனி உருகுதல், சுனாமி மற்றும் அணைக்கட்டுகள் உடைதல் ஆகிய காரணங்களால் வெள்ளப்பெருக்குகள் ஏற்படுகின்றன. வடகிழக்குப் பருவ காலங்களில் பெய்யும் பெரும் மழையினால் தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், ஒடிசா ஆகிய



வெள்ளம்

மாநிலங்களிலும் தென்மேற்குப் பருவ காலங்களில் மும்பைப் பகுதிகளிலும் வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன.

வெள்ளப் பெருக்கினால் கழிவுநீர் வடிகால் அமைப்பு அழிக்கப்படுதல், நீர் மாசுபடுதல், மண் அரிப்புகள், வண்டல்படிதல், நீர் தேங்குதல், வேளாண்மை நிலங்கள், கால்நடைகள் அழிக்கப்படுதல். மீன்பிடிச் சாதனங்கள் சேதப்படுதல் ஆகியவற்றோடு உயிர்ச் சேதங்களும் ஏற்படுகின்றன.

தென்னிந்திய நதிகளைக் காட்டிலும் வடஇந்திய நதிகளில் ஒவ்வொரு வருடமும் வெள்ளப் பெருக்குகள் ஏற்படுகின்றன ஏன்? சிந்திக்க!

வெள்ளப் பெருக்குகள், வறட்சிகள் ஆகிய இரண்டு இடர்களும் பருவ கால மாறுபாட்டினால் ஏற்படுகின்றன.

சமூக அறிவியல்

## இடர் தணித்தல் (Mitigation)

அரசாங்கப் பரிந்துரையின்படி தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும். நீர் வழிந்து ஓடுவதை தவிர்க்க வேளாண்மை பகுதிகளிலிருந்தும் தாழ்வான பகுதிகளிலிருந்தும் கால்வாய்கள் வெட்டி விடவேண்டும்.

❖ தாழ்வான பகுதியில் அமைந்துள்ள வீடுகளுக்கு முன்னால் நீர் உட்புகாமல் காக்க மணல் மூட்டைகளை வைக்க வேண்டும்.

❖ குளங்கள், ஏரிகள் ஆகியவற்றில் தூர் எடுத்தல் வேண்டும்.

❖ ஆறுகளின் கரைகளை உயர்த்துதல் வேண்டும்.

❖ பருவ மழைக்கு முன்பே ஆற்றுப் போக்குகளில் உள்ள படிவுகளை களைய வேண்டும்.

❖ நெடுங்காலத்திற்கு வெள்ள பாதிப்பை குறைக்க காடுகள் வளர்ப்பை ஊக்குவிக்கவும், மழை நீர் சேகரிப்பை செயல்படுத்தவும் வேண்டும்.

❖ வெள்ளப்பெருக்கின்போது மாணவர்கள், துணிமணிகள், உணவுப் பொட்டலங்கள் போன்றவற்றை சேகரித்து சமுதாயமீட்புப் பணிகளில் செயல்பாடுகளில் ஈடுபட்டு பாதிப்படைந்தோருக்கு சேவை செய்ய வேண்டும்.

## வறட்சி (Drought)

மழைப் பொழிவு பற்றாக்குறையினால் நீண்ட காலமாக நிலவும் வறண்ட வானிலையை வறட்சி என்கிறோம். வறட்சி எப்பொழுது ஆரம்பிக்கிறது, எப்பொழுது முடிகிறது என்பதைத் தெரிவிப்பது கடினமாகும். இந்திய வானிலைத் துறையின் கூற்றின்படி, நீண்ட காலமாக ஒரு நாட்டில் 10 சதவீதத்திற்கும் குறைவாக மழைப்பொழிவு இருக்குமேயானால் அந்நாட்டை வறட்சியால் பாதிக்கப்பட்ட நாடு எனலாம்.

பற்றாக்குறையான மழைப்பொழிவே வறட்சிக்கு முக்கிய காரணம். பற்றாக்குறையான மழைப்பொழிவிற்குப் பருவகாலம் பொய்த்துப் போவதால் உருவாகும் போதுமான மழைப்பொழிவின்மை, பருவகால மாறுபாடுகள், காடுகள் அழிவு, சுற்றுச்சூழல் சீர்கேடு, அதிக அளவு ஆவியாதல், மோசமான நில மேலாண்மை, தீவிர மேய்ச்சல் மற்றும் மண் அரிப்பு ஆகியன முக்கிய காரணங்களாகும்.


வறட்சி


வறட்சி

புன்செய் பயிர்கள் வறட்சியின் காரணமாக அதிகம் பாதிக்கப்படுகின்றன.

மற்ற விளைவுகளாவன 1. குடிநீர் பற்றாக்குறை, 2. உணவுப் பற்றாக்குறை, 3. கால்நடைகளுக்கு நீரின்மை, 4.ஊட்டச்சத்து குறைபாடு நோய்கள் 5. மண் அரிப்பு ஆகியன.

## இடர் தணித்தல் (Mitigation)

வறட்சியினால் ஏற்படும் இழப்பு மற்றும் பாதிப்பை பின்வரும் வழிகளால் குறைக்க முடியும்.

❖ திட்டமிட்ட நில மேம்பாடு, மாற்றுப் பயிர்முறை, சொட்டுநீர்ப்பாசனம் போன்றவை நிலத்திலிருந்து பெறப்படும் வெளிப்படு பொருளாகிய உற்பத்தியை அதிகமாக்குதல்.

❖ தானியங்களை சேமிக்கும் வசதிகள், மழைநீர் உபயோகம் வறட்சியை தணிக்கும் முறைகயை கையாளுதல்.

❖ வறட்சிகாலங்களில் மாட்டுத் தீவனங்கள் மற்றும் குடிநீரை கால்நடைகளுக்கு அளிப்பதை உறுதிப்படுத்துதல்.

❖ தாணியங்கள் மற்றும் மாட்டுத் தீவனங்கள் ஆகியவை வறட்சிப் பகுதிகளுக்கு தேவையான நேரங்களில் எடுத்துச் செல்லுதல்.

❖ வறட்சி நிவாரண பணிகளை வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதமாக செயல்படுத்த கிராம அளவிலேயே ஏற்படுத்த திட்டமிடுதல்.

## சூறைக்காற்றுகள் (Tornadoes)

சூறைக்காற்றுகள் என்பது மிகத்தீவிரமாக சுழலும் ஒரு காற்றுத் தொகுதி. புவியின் மேற்பரப்புப்பகுதியில் தொடர்புடையதாக உருவாகும். இக்காற்றுத் தொகுதி கார்திரள் மேகத்துடனும் இடியுடனும் இருக்கும்.

சூறைக்காற்றுகள் பலவித வடிவங்களாக உருவானாலும் ஒரு சூறைக்காற்றின் அடையாளம் புனல் வடிவமாகும். சூறைக்காற்றின் புனல் வடிவத்தில் குறுகியமுனை புவியின் மேற்பரப்பை தொட்டுக்கொண்டு இருக்கும்.

இக்காற்று சுழற்சியின் அகலம் சில மீட்டரிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்கு மேலாகவும், இதன் சுழற்சி வேகம் மணிக்கு 64 - 509 கி.மீ. இடைபட்டதாக இருக்கும்.

தீவிர தாழ்அழுத்தத்தின் காரணமாக இவை உருவாகின்றன. சுழல்காற்று துரிதமாக உருவாகின்றன. நிலத்தின் மீது உருவாகும்போது வேகமான சுழல் காற்றினைத் தோற்று விக்கின்றன. இவை வெப்ப மற்றும் குளிர் காற்றுகள் சந்திக்கும்போது உருவாகின்றன. புயலைப் போல இவை மிகப் பெரிய உயிர்ச் சேதங்களையும் பொருட் சேதங்களையும் ஏற்படுத்துகின்றன.

மார்ச் 24, 1998இல் மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசாவின் கிழக்குக் கடற்கரையோர மாவட்டங்களில் 20 கடற்கரையோரக் கிராமங்களைத் தீவிர சூறைக்காற்றுகள் தாக்கின. இக்காற்றினால் 160 பேர்கள் இறந்தனர்.



சூறைக்காற்று

2000 பேர்கள் காயம் அடைந்தனர். படகில் பயணம் செய்த 10 பேர்கள், சூறைகாற்றினால் ஏறத்தாழ 20 அடி உயரம் வரை தூக்கி எறியப்பட்டு இறந்தார்கள்.

ஒடிசாவில் பலசூர் மாவட்டத்திலுள்ள கோபுர்காட்டா என்ற ஊரில் சூறைக்காற்றினால்

பள்ளிக்கட்டடத்தின் கூரை இடிந்ததில் 35 பள்ளிச் சிறுவர்கள் நசுங்கி மாண்டனர். 15,000 வீடுகள் சேதமடைந்தன. மற்றும் 10,000 க்கும் மேலான மக்கள் வீடுகளை இழந்து தவித்தனர்.

**உங்களுக்குத் தெரியுமா ?**

சூறைக்காற்றினை அமெரிக்க ஐக்கிய நாட்டில் (USA) டுவிஸ்டர் (Twister) என அழைக்கின்றனர். ஏனெனில் சுருள் போல் சுழன்று புனல் வடிவ மேகத்தினை உருவாக்குவதால் இப்பெயர் வழங்கப்பட்டது.

### இடர் தணித்தல் (Mitigation)

சூறைக்காற்றின் தாக்கம் அறிந்தவுடன் தாழ்வான பகுதியிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர வேண்டும் அல்லது வீட்டிலோ பாதுகாப்பு மையத்திலோ இருக்க வேண்டும்.

சூறைக்காற்றின் போது நீங்கள் வீட்டிற்கு வெளியே இருக்க நேர்ந்தால் அங்கேயே இருக்க வேண்டும். சூறைக்காற்றின் தாக்கம் குறைந்து விட்டதென அரசுத் துறை அலுவலர்கள் கூறிய பின்பே வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

காயமடைந்த அல்லது காப்பாற்றப்பட்ட மக்களுக்கு உதவுதல் மற்றும் முதலுதவியை உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

### பொதுவான இடர் தணித்தல்

### பேரிடர் மேலாண்மை

பேரிடர் மேலாண்மை பலவகையான பேரிடர்களைப் பற்றிய விழிப்புணர்வையும், தயாராக இருத்தல், தடுத்தல், நிவாரணம், மீளுதல் ஆகியவற்றை விளக்குகிறது.

பேரிடர்களுக்கு எதிராக மக்களுக்கு முன் எச்சரிக்கை அளித்தும், தன்னையும் உடமைகளையும் பாதுகாக்கும் முறைகளை கற்றுத்தரவும் வேண்டும்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், அலுவலகங்களிலும் பேரிடர் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளை ஏற்படுத்துதல் வேண்டும். பொதுமக்களுக்கு வானொலி, நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சி மூலம் நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பாதிப்படைந்த மக்களுக்கு அரசாங்கம் துரிதமாகவும் சரியான நேரத்திலும் மீட்புப் பணிகளை செய்ய அனைத்து துறைகளிலும் திட்டமிட்டு செய்யப்பட வேண்டும்.

## பயிற்சி

**I) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக**

1. வறட்சி ஏற்பட முதன்மையான காரணம் ____________.

   அ) பற்றாக் குறைவான மழைப்பொழிவு   ஆ) சுற்றுச்சூழல் சீர்கேடு

   இ) காடுகளை வளர்த்தல்   ஈ) தொழிற்சாலைகள்

2. பொதுவாகச் சூறைக்காற்று ஏற்படுவது ____________.

   அ) இந்தியா   ஆ) பங்களாதேஷ்   இ) சீனா   ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

3. நிலச்சரிவுகள் அடிக்கடி ஏற்படுவது __________.

அ) பாலைவனப் பிரதேசம் ஆ) காட்டுப் பிரதேசம்

இ) ஆந்திரப் பிரதேசம் ஈ) மலைப் பிரதேசம்

4. சுனாமி என்ற சொல்__________மொழியிலிருந்து வந்தது.

அ) தமிழ் ஆ) பிரெஞ்ச் இ) ஜப்பான் ஈ) லத்தீன்

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளதில் எது இயற்கையான பேரிடர் இல்லை.

அ) அணுகுண்டு வெடிப்பு ஆ) காடுகள் அழிதல்.

இ) காட்டுத் தீ ஈ) மின்னல்

## II) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பேரிடர் என்பது ஒரு __________.
2. இந்தியா__________அதிர்வலை மண்டலங்களாகப் பிரிக்கப்படுகின்றன.
3. இந்தியாவில் சுனாமி எச்சரிக்கை மையம்__________ல் நிறுவப்பட்டுள்ளது.
4. பாறைத்துகள்கள் நீருடன் சேர்ந்து நகர்வதை__________என்கிறோம்.
5. பனிப்பாறை வீழ்ச்சிகள் உயர்__________மற்றும் உயரமாக__________ ஏற்படுகின்றன.

## III) பொருத்துக

| | |
|---|---|
| 1. சூறைக்காற்று | கனத்த மழைப்பொழிவு |
| 2. இறுகிய பாறைக்குழம்பு | காற்றின் சுழற்சி |
| 3. நிலச்சரிவு | எரிமலை வெடித்தல் |
| 4. வறட்சி | சுனாமி |
| 5. நிலநடுக்கம் | மழைப்பொழிவுப் பற்றாக்குறை |

## IV) கீழ்கண்ட வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளி

1. பேரிடர் என்றால் என்ன ?
2. இடர் தணித்தல் வரையறு.
3. நிலச்சரிவு என்றால் என்ன ?
4. வெள்ளம் மற்றும் வறட்சியினை வேறுபடுத்துக.
5. சூறைக்காற்று மற்றும் புயல் வேறுபடுத்துக.

## V) கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவாக விடையளி

1. பேரிடர் என்றால் என்ன ? இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரிடர்களை விளக்குக.
2. கடற்கோள்கள் மற்றும் அவற்றினால் ஏற்படும் தாக்கங்களையும் பற்றி எழுதுக.
3. வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட இடங்களில் கையாளும் இடர் தணித்தல் முறைகளை வரிசைப்படுத்தவும்.
4. நிலநடுக்கத்தின் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவை ?
5. இந்தியாவில் உள்ள அதிர்வலை மண்டலங்களைப் பற்றி எழுதுக.

## VI). வரைபடப் பயிற்சி

இந்தியாவின் அதிர்வலை மண்டலங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

## உருவாக்க மதிப்பீடு

1. கடந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட நில அதிர்வுகளைப் பற்றி ஓர் கட்டுரை வரைக.
2. கடந்த டிசம்பர் 26, 2004 இல் ஏற்பட்ட சுனாமி விளைவுகளையும் அங்கு மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளையும் தகுந்த படங்களுடன் ஓர் ஆய்வுக் கட்டுரை வரைக.
3. சமீபத்தில் ஏற்பட்ட தானே புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அதன் மீட்பு நடவடிக்கைகள் குறித்தும் ஒரு விவாதம் நடத்துக.
4. வறட்சிக் காலத்தின் விளைவுகளில் இருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள மழைநீர் சேகரிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வலியுறுத்தி சுவரொட்டி மாதிரிகள், விளம்பர அட்டைப்பட மாதிரிகள் தயாரிக்கவும்.
5. இந்தியாவின் அதிர்வலை மண்டலங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

# 2. பேராழியியல் ஓர் அறிமுகம்

பூமியில் நிலவும் நிலையான வாழ்விற்குப் பேராழிகளின் பங்களிப்பு மற்றும் காலநிலை மாற்றம் திறவுகோளாக இருக்கின்றது. பேராழி கனிம வளங்களின் கிடங்காக உள்ளது. கடலைச் சுற்றி பல பிரச்சினைகள் ஏற்படுவதை நாம் கண்கூடாக காண்கிறோம். குறிப்பாகக் கடற்கரை மறைந்து போவது, தீவு மூழ்குதல், நீர் மாசுபடுதல், மீன் வளம் அழிதல், கடல் நீர்மட்டம் உயர்தல், புவியின் வெப்பநிலை உயர்தல், கடல் நீரோட்டங்கள், சூறாவளிகள், பனிப் படலங்கள் உருகுதல் ஆகியன மனிதனை அச்சுறுத்துவதாக உள்ளன. ஆகவே, பேராழியின் அமைப்பினை நாம் புரிந்து கொண்டால் தான், வரும் நூற்றாண்டில் நிகழப்போகும் மாற்றங்களை அறிந்து முன்கூட்டியே தடுக்க முடியும். மிகக் குறுகிய காலத்தில் சரியான உற்றுநோக்குதல் மூலம் வரக் கூடிய பேரிடர்களான சூறாவளிகள், வெள்ளம், வறட்சி மற்றும் அவற்றின் பாதிப்புகளைத் தணிக்கும் வகையிலும் மக்களை இப்பாதிப்பிலிருந்து விடுபடவும் முன் அறிவிப்பு செய்ய முடியும்.

**உங்களுக்குத் தெரியுமா ?**

பேராழி என்பது ஒரு கிரேக்கச் சொல் "ஓகேனஸ்" பேராழிகள் என்பது ஓர் உவர் நீரின் பெரும் பகுதி மற்றும் நீர்க்கோளத்தின் முதன்மையான கூட்டமைப்பாகும்.

### பேராழியியல் (Oceanography) என்றால் என்ன ?

பேராழியியல் என்பது கடல் நீரின் இயற்கை மற்றும் வேதித்தன்மை, ஆழம், வெப்பநிலை, உவர்ப்பியம், கடல் நீரோட்டங்கள் மற்றும் கடலடி பகுதியில் காணப்படும் தாவர மற்றும் விலங்கினம் பற்றி படிக்கக்கூடிய ஒரு அறிவியலாகும்.


பேராழிகளானது பூமியின் மொத்தப்பரப்பில் 71 சதவீதம் மற்றும் பூமியின் மொத்த நீரில் 97 சதவீதம் கொண்டிருக்கின்றது. பெரும் பரப்பிலான நீரினால் சூழப்பட்டிருக்கும் பகுதியை பேராழி என அழைக்கின்றோம்.

பூமியானது நீர்க்கோளம் (Watery Planet) எனவும் அழைக்கப்படுகின்றது. சூரியக்குடும்பத்தில் பூமியின் பேராழிகளானது தனித்துவமானதாக உள்ளது. சூரியக் குடும்பத்தில் உள்ள மற்ற கோள்கள் நீரைக் கொண்டிருப்பதில்லை. (சமீப கால ஆய்வுகள் வியாழன் கோளானது நீரைக் கொண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கின்றன) புவியில் உயிரினமானது முதன் முதலில் கடலில் தோன்றியிருக்க கூடும் என நம்பப்படுகிறது.

புவியின் பல்வேறு இயக்கங்களுக்கு பேராழிகள் காரணமாகின்றன. குறிப்பாக வானிலை மற்றும் வெப்பநிலையினை பாதிக்கின்றன. சூரியக் கதிர் களை உட்கவருதல் மூலம் புவியின் வெப்பநிலையினை இவைகள் மாற்றியமைக்கின்றது. மேலும் உட்கவரப்பட்ட வெப்ப ஆற்றலை கடல் நீரோட்டங்கள் உலகம் முழுவதும் கடத்துகின்றன.

உலகில் உள்ள பேராழிகள் அனைத்தும் கடல்கள், வளைகுடாக்கள், நீர் சந்திப்புகள் மற்றும் கால்வாய்கள் மூலம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. பசிபிக், அட்லாண்டிக், இந்திய, ஆர்டிக் மற்றும் தென் பேராழி ஆகியவை உலகின் ஐந்து பேராழிகள் ஆகும்.

# உலகின் பேராழிகள் மற்றும் கடல்கள்



## பசிபிக் பேராழி

பசிபிக் பேராழியானது முக்கோண வடிவ அமைப்பைப் பெற்றுள்ளது அது புவியின் மொத்த மேற்பரப்பில் 33 சதவீதம் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் சராசரி ஆழம் 5,000 மீட்டர்கள் ஆகும். பசிபிக் பேராழியானது மிகப் பெரியதும், ஆழமான பேராழியும் ஆகும். இது மேற்கில் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா, கிழக்கில் வடஅமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா, தெற்கில் அண்டார்டிகாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

தென் பசிபிக்கில் உள்ள சேலஞ்சர் அகழியே (மரியானா அகழியே) உலகின் ஆழமான பகுதி ஆகும். இதன் ஆழம் 11,033 மீட்டர்கள் ஆகும். பசிபிக் பேராழியில் ஏறக்குறைய 20,000 தீவுகள் உள்ளன. நியூசிலாந்து இந்தோனேஷியா, ஜப்பான் மற்றும் ஹவாய் ஆகியன நன்கு அறியப்பட்ட தீவுகளாகும்.

## அட்லாண்டிக் பேராழி

அட்லாண்டிக் பேராழியானது நீண்ட 'S' வடிவத்தினைக் கொண்டது. இது புவியின் மொத்த பரப்பில் 16.5 சதவீதம் வரை பரவிக் காணப்படுகிறது. இதன் பரப்பு பசுபிக் பேராழியின் 50 சதவீதம் ஆகும். இது மேற்கே வட மற்றும் தென் அமெரிக்காவாலும், கிழக்கே ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்காவாலும் சூழப்பட்டுள்ளது. அட்லாண்டிக் பேராழியில் காணப்படும் முக்கியத் தீவுகளான கிரீன்லாந்து, பிரிட்டிஷ் தீவுகள், நியூபவுண்ட்லாந்து, மேற்கு இந்தியத் தீவுகள், வெர்டிமுனை மற்றும் கானரீஸ் ஆகும். அட்லாண்டிக் பேராழியின் வர்த்தக வழியானது உலகின் மிகவும் போக்குவரத்து நிறைந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

## இந்தியப் பேராழி

உலகில் உள்ள அனைத்து பேராழிகளின் மொத்தப் பரப்பில் 20 சதவீதம் இந்தியப் பேராழி கொண்டுள்ளது. வடக்கே இந்தியா, பாகிஸ்தான், கிழக்கே ஆஸ்திரேலியா, சுமத்ரா தீவுகள் மற்றும் மலேசியா, மேற்கில் அரேபியத் தீபகற்பம், ஆப்பிரிக்கா ஆகியன இதன் எல்லைகளாக அமைந்துள்ளது. இந்தியப் பேராழியானது ஆப்பிரிக்காவின் தென்முனையில் அட்லாண்டிக் பேராழியுடனும், கிழக்கு மற்றும் தென்கிழக்கில் பசிபிக் பேராழியுடனும் இணைகின்றது. இப்பேராழியின் சராசரி ஆழம் 4,000 மீட்டர்களாகும். அந்தமான், நிக்கோபர், மாலத்தீவு, மடகாஸ்கர், இலங்கை, சுமத்ரா, ஜாவா ஆகியன இந்தியப் பேராழியின் நன்கு அறிந்த தீவுகளாகும். இது ஒரு நாட்டின் பெயரினால் அழைக்கப்படும் பேராழி ஆகும். வரலாற்றுக் காலந்தொட்டே வணிகர்களின் பயன்பாட்டு வணிக வழியாக இருந்து வருகின்றது.

## தென் பேராழி (அண்டார்டிகா பேராழி)

இது நான்காவது பெரிய, குளிரான மற்றும் தென்கோடி முனையில் அண்டார்டிகா கண்டத்தினைச் சுற்றி அமைந்துள்ள பேராழி ஆகும். இது 'தென் பேராழி' எனவும் அழைக்கப்படுகின்றது. அலெக்ஸாண்டர் தீவுகள், பாலினித் தீவுகள் ரோஸ் தீவுகள் இந்தப் பேராழியில் உள்ள சில தீவுகளாகும். இதன் சராசரி ஆழம் 4,500 மீட்டர்களாகும். வெப்பநிலையானது $10^0$ செல்சியஸ் முதல் $-2^0$ செல்சியஸ் வரை வேறுபடுகிறது. குளிர்காலத்தில் இப்பேராழியின் மேல் பகுதியானது பாதிக்கும் மேல் பனிக்கட்டியாக உறைந்திருக்கும்.

## ஆர்டிக் பேராழி

ஆர்டிக் பேராழி ஏறக்குறைய வட்ட வடிவில் புவியின் வடதுருவத்தில் அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பு 14 மில்லியன் சதுர கிலோ மீட்டராகும். இதன் சராசரி ஆழம் 4,000 மீட்டராகும். இதன் முக்கிய தீவுகள், விக்டோரியா தீவுகள், எலிசபத் தீவுகள், ஐஸ்லாந்து ஸ்பிட்பெர்ஜென் மற்றும் நோவாகா சோமாலியா ஆகியனவாகும்.

## உலகத்தின் கடல்கள்


குறைந்த அளவு நீர் பரப்பினைக் கொண்ட நிலத்தினால் சூழப்பட்டுள்ள பகுதியைக் கடல்கள் என்கின்றோம். தென் சீனக்கடல், கரீபியன் கடல், மத்திய தரைக்கடல் ஆகியன உலகின் முக்கியமான கடல்களாகும்.

## பேராழியின் தரை அமைப்பு

நிலமும் கடலும் சந்திக்கின்ற இடத்தில் பேராழியின் தரையானது ஆரம்பிக்கின்றது. கடலோரப் பகுதியானது நிலையானது அன்று. ஒவ்வொரு அலைகள் மற்றும் ஓதங்களின் போதும் மாற்றி அமைக்கப்படுகின்றன. பேராழியின் தரை அமைப்பு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. அவை, (அ)கண்டத்திட்டு, (ஆ) கண்டச் சரிவு (இ) கடல்தரை ஆகும்.

## கண்டத் திட்டு

கடற்கரை ஓரத்தின் ஆழம் குறைந்த பகுதியாகும். இதன் ஆழம் 100 மீட்டர் ஆகும். இக்கண்டத்திட்டு பகுதியானது மிகச்சிறந்த மீன்பிடித்தளமாக விளங்குகின்றது. இங்கு மீன்களின் உணவான கடல்வாழ் நுண்ணுயிரிகள்(Plankton) அதிக அளவு கண்டத்திட்டுப் பகுதிகளில் நிறைந்து காணப்படுகின்றன. உதாரணமாக, நியூபவுண்ட்லாந்தில் உள்ள கிராண்ட்பேங், பிரிட்டனில் உள்ள டாகர் திட்டுக்களைக் கூறலாம். இக்கண்டத் திட்டுப்பகுதிகளில்




பேராழி தரை நிலத் தோற்றம்

பெட்ரோலிய ஆழ்குழாய்க் கிணறுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டு மும்பை ஹை (இந்தியா).

### கண்டச் சரிவு

செங்குத்துச் சரிவாகப் பேராழியின் தரையை அடைகின்றது. கண்டச்சரிவு மற்றும் கண்டத்திட்டுப் பகுதிகளைக் கண்ட விளிம்பு (Continental Margin) என அழைக்கின்றோம். இதன் சராசரி ஆழம் 155 மீட்டர் ஆகும்.

ஒழுங்கற்ற கடற்கரை மற்றும் ஆழமான சரிவுகள் ஆகியன இயற்கைத் துறைமுகம் அமைய அவசியமாகின்றது. உதாரணமாகக் கொச்சின் மற்றும் மும்பைத் துறைமுகங்கள். கண்டச் சரிவில் குறுகிய பள்ளத்தாக்கு, ஓங்கல், சேறு வழிதல் ஆகியன காணப்படுகின்றன.

கடலடிக் குன்றுகளைச் சுற்றிக் கீழ் மட்டத்தில் ஆழ்கடல் சமவெளி (Abyssal Plain) உள்ளது. இந்த ஆழ்கடல் சமவெளி உயிரினங்களின் அழுகிய கரிமப் பொருள்களால் மூடப்பட்டுள்ளது. நடுக்கடல் மலைத் தொடரானது (Ocean Ridge) கண்டத்திட்டு விசையினால் ஏற்படுகின்றன.

### கடல் மலைகள்

கடலின் அடிப்பகுதியில் உள்ள எரிமலை ஒவ்வொரு சீற்றத்தின் போதும்வளர்ந்து உருவாகிறது. இக்கடல் மலைகள் கடல் நீரின் மேற்பரப்பிற்கு மேல் தெரிவதைத் தீவு (Island) என அழைக்கிறோம். கடல் மட்டத்திற்கு மேல் உள்ள தீவுகள் அலை மற்றும் வானிலை செயல்களால் அரிக்கப்பட்டு கீழ்ப்பகுதிக்குச் சென்றிருந்தால் அவை கயாட் (Guyot) என அழைக்கப்படுகின்றது.

பேராழியின் அகழிகள் (Oceanic Trenches) என்பவை பேராழியின் ஆழமான பகுதியாகும். இரு கண்டத் திட்டுகள் ஒன்றோடு ஒன்று மோதும் போது அடர்த்தி அதிகமான தட்டின் அழுத்தத்தால் அடர்த்தி குறைவான தட்டிற்குக் கீழ் அடர்த்தி அதிகமான தட்டு செல்வதால் அகழிகள் உருவாகிறது. இவையே கடலின் மிக ஆழமான பகுதியாகும்.

### நீர் சுழற்சி




நீர்ச் சுழற்சி

நீர்ச்சுழற்சி என்பது நீர், நிலத்திலிருந்து வளிமண்டலத்தை அடைந்து மீண்டும் நிலத்தை அடையும் செயலாகும். புவியில் உள்ள பேராழிகள், ஏரிகள், ஆறுகளில் உள்ள நீரானது சூரியனின் வெப்ப ஆற்றலால் ஆவியாகின்றது. மேலும், தாவரங்கள் ஒளிச்சேர்க்கையின் மூலம் காற்றில் நீரினை இழக்கின்றன. இவை நீராவி–போக்கு எனப்படும். இந்நீராவியானது மிக நுண்ணிய நீர்த் திவலைகளாக மாறி மேகத்தை உருவாக்குகின்றன. இறுதியாகத் திரவமாகி மேகங்களில் மிகச் சிறிய நீர்த் திவலைகளாகின்றன. மேகங்கள் இறுதி நிலையை அடையும்போது மழைவீழ்ச்சி (மழை, ஆலங்கட்டி அல்லது பனி) தூண்டப்படுகிறது. மேலும் நீர் நிலப் பரப்பினையோ கடலையோ சென்றடைகின்றது. மழைநீரின்

ஒரு பகுதியானது நிலத்தால் உறிஞ்சப்பட்டு பாறை அல்லது களிமண் அடுக்கிற்கு இடையே தேங்குகிறது. இவை நிலத்தடி நீர் என அழைக்கப்படுகின்றது. ஆனால் பெருமளவு மழைநீரானது மலைச் சரிவில் இருந்து வேகமாக ஓடி சிறிதளவு உப்பு கலந்த நீராக இறுதியாகக் கடலை அடைகிறது.

கடல் நீரில் சோடியம் குளோரைடு, மெக்னீசியம் குளோரைடு, மெக்னீசியம் சல்பேட், கால்சியம் சல்பேட், பொட்டாசியம் சல்பேட், கால்சியம் கார்பனேட் மற்றும் மெக்னீசியம் புரோமைட் ஆகிய உப்புகள் பெருமளவு கலந்துள்ளன.

### பேராழிகள் உவர்ப்பது ஏன் ?

புவியில் உள்ள பாறை மற்றும் ஆற்று படுகையின் மண்களில் உள்ள உப்பானது மழைநீரினால் கரைக்கப்பட்டு ஆறுகளில் பாய்கின்றது. பேராழிகள் மற்றும் கடல்களில் சிறிதளவு உப்பு கலந்த நீராகக் கலக்கின்றது. ஆவியாதலின் செயலினால் கடல் நீர் ஆவியாவதுடன் உப்பு ஆவியாகாமல் தங்கிவிடுகிறது. எனவேதான் கடல் நீர் உப்புத் தன்மையுடன் காணப்படுகிறது.

**செயல்முறை**

நீங்கள் கடல் நீரைச் சுவைத்து இருக்கிறார்களா ? ஏன் உப்புத் தன்மையுடன் உள்ளது ?

### உவர்ப்பியம்

உவர்ப்பியம் என்பது கடல் நீரில் கரைந்துள்ள உப்பின் அளவினை குறிப்பதாகும். இதன் பொருள் பேராழியில் கரைந்துள்ள உப்பின் அளவே உவர்ப்பியம் ஆகும். உவர்ப்பியம் என்பது ஒரு லிட்டர் நீரில் எத்தனை கிராம் அளவு உப்பு கலந்துள்ளது என்பதை குறிப்பிடுவதாகும் (குறியீடு $^{0}/_{00}$). உலகில் உள்ள பேராழிகளின் சராசரி உவர்ப்பியம் 35 கிராம் ஆகும்.

**தெரிந்து கொள்வோம்**

பேராழிக்குப்பேராழி உவர்ப்பியம் வேறுபடுவது ஏன் ?

சாக்கடல், செங்கடல் மற்றும் பெர்சியன் வளைகுடாவின் உப்பளவு மிக அதிகமாகும். இங்கு உவர்ப்பியத்தின் அளவு 40 கிராம் ஆகும் (காரணம் மிக அதிகமாக நீராவியதாலும் மற்றும் குறைந்த அளவு நன்னீர் சேர்க்கையும் ஆகும்). கடல்களிலேயே சாக்கடலில் மிக அதிக அளவு உவர்ப்பியம் உள்ளது. துருவ பிரதேசங்களில் உள்ள கடல்களில் உவர்ப்பியம் மிக குறைவாக இருப்பதற்குப் பனி உருகுதலும் அதிக மழைப்பொழிவும் காரணமாகும்.

**தெரிந்து கொள்வோம்**

நிலத்தினால் சூழப்பட்டுள்ள கடல்களில் உவர்ப்பியத்தின் அளவு ஏன் அதிகமாக உள்ளது ?

### பேராழியின் வெப்பநிலை

பேராழியில் உள்ள உயிரினங்களின் பண்புகளை நிர்ணயிப்பதில் பேராழியின் வெப்பநிலை முக்கிய பங்கு வகிக்கின்றன. கடல் நீரின் வெப்பநிலை மாறுபாடே பேராழியில் நீரோட்டங்கள் உருவாகக் காரணமாய் அமைகிறது. பேராழிகள் சூரிய ஆற்றலைச் சேமித்து வைக்கும் திறன் கொண்டுள்ளதால் புவியின் வெப்பச் சமநிலையினைச் சீர் செய்வதில் முக்கிய பங்காற்றுகின்றன. நிலத்தின் மேற்பரப்பானது மிக விரைவாக வெப்பமடைந்து மிக விரைவாகக் குளிர்ச்சி அடைகிறது. ஆனால், நீர்ப் பரப்பானது மெதுவாக வெப்பமடைந்து மெதுவாகவே குளிர்ச்சி அடைகிறது. இவ்வாறான நிலம் மற்றும் நீரின்

வெப்பநிலை வேறுபட்டால் புவியின் மேற்பரப்பில் உள்ள பேராழி மற்றும் கண்டங்களில் பல்வேறு வகையான காலநிலை காணப்படுகின்றது.

பேராழியின் மேற்பரப்பு வெப்ப நிலையினைப் பல்வேறு காரணிகள் கட்டுப்படுத்துகின்றன. அவை, அட்சரேகைகள், பேராழி நீரோட்டங்கள், நிலவும் காற்றுகள் மற்றும் உள்ளூர் வானிலை ஆகியனவாகும்.

### அலைகள்

பேராழிகளில் நீரானது எப்பொழுதும் மேலும் கீழுமாக அசைகின்றன. இந்த நீரின் அசைவே அலைகள் என அழைக்கப்படுகிறது. அலைகள் உருவாவதற்கு முக்கிய காரணம் காற்றோட்டம் ஆகும். இயற்கையான அலைகள் பெரும்பாலும் காற்றோட்டத்தால் தோற்றுவிக்கப்படுகின்றன. அலைகள், சில குறிப்பிட்ட திசைகளில் பயணிக்கின்றன. ஆனால் நீரானது அலைகளோடு பயணிப்பதில்லை.

### பேராழி நீரோட்டங்கள்

பேராழி நீரோட்டங்கள் பொதுவாக ஒரு குறிப்பிட்ட திசையில் பெரிய பரப்பில் நகரும் நீரினைக் குறிக்கும்.

வேறு வகையில் கூறுவோமேயானால் பேராழி நீரோட்டமானது பேராழியில் இயல்பாக ஓடும் நீராகும். இப்பேராழி நீரோட்டங்கள் ஆறுகளைப் போல் குறிப்பிட்ட பாதை, வேகத்தில் பாய்கின்றன. பேராழி நீரோட்டங்கள் இரண்டு வகைப்படும். அவைகள், வெப்ப (Warm) மற்றும் குளிர் (Cold) நீரோட்டங்கள் ஆகும். வெப்ப நீரோட்டங்கள் தாழ் அட்சரேகையிலிருந்து உருவாகி துருவங்களை நோக்கி ஓடுகின்றன. இருப்பினும் குளிர் நீரோட்டங்கள் உயர் அட்சரேகை பகுதிகளில் உருவாகி பூமத்தியரேகையை நோக்கி ஓடுகின்றன.

### பேராழிகளில் உருவாகும் நீரோட்டங்களைப் பாதிக்கும் காரணிகள்

1. வெப்பநிலையில் வேறுபாடு,
2. பேராழி நீரின் அடர்த்தி (உவர்ப்பியம்),
3. காற்று மற்றும் வளிமண்டல அழுத்தம்,
4. புவியின் சுழற்சி விசை,
5. புவியீர்ப்பு விசை,
6. மழை வீழ்ச்சி மற்றும் ஆவியாதல் மற்றும்
7. பனி உருகுதல்

### ஓதங்கள்

சூரியன் மற்றும் சந்திரனின் ஈர்ப்பு விசையினால் ஒவ்வொரு நாளும் 6 மணி நேர இடைவெளியில் கடல் நீரின் மட்டம் உயர்ந்து தாழ்வதை ஓதம் என அழைக்கப்படுகின்றது. கடல் மட்டம் உயர்வதை உயர் ஓதம் (High Tide) என்றும் தாழ்வதைத் தாழ் ஓதம் (Low Tide) என்றும் அழைக்கப்படுகிறது.

மிகவை ஓதமானது(Spring tide) அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் ஏற்படுகிறது. இந்த நாட்களில் சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகியன ஒரே நேர்க்கோட்டில் இருக்கின்றன. அத்தகைய நாட்களில் சந்திரன் மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப் படுகின்றது. இக்காலங்களில் உயர் ஓதம் மிக உயர்ந்தும் மற்றும் தாழ் ஓதம் மிகத் தாழ்ந்தும் காணப்படும்.

தாழ்வை ஓதமானது (Neap tide)நிலவின் முதல் மற்றும் மூன்றாவது வளர்ச்சி நிலையில் ஏற்படுகின்றது.

இந்நிலையில் சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகியன செங்கோணத்தில் இருக்கின்றன. இதன் விளைவாக நிலவின் ஈர்ப்பு விசையில் இருந்து ஒன்றுக்கொன்று செங்கோணத்தில் அமைகின்றன. இந்நேரங்களில் உயர் ஓதம் மிகத் தாழ்ந்தும் மற்றும் தாழ் ஓதம் மிக உயர்ந்தும் காணப்படும்.

**செயல்முறை**

பேராழியின் வளங்களைப் பட்டியலிடுக.


### மனித வாழ்வில் பேராழிகளின் ஆதிக்கம்

பேராழிகள் மனிதனுடைய இயற்கைச் சூழ்நிலையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பேராழிகள் மனிதனைப் பல்வேறு வகைகளில் கட்டுப்படுத்துகின்றன. காலநிலையைக் கட்டுப்படுத்துவதிலும், ஆக்ஸிஜனைச் சுவாசிப்பதற்கும், அவன் உண்ணும் உணவு, பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் இராணுவ நிலையினையும் தீர்மானிக்கின்றன.

பேராழிகள் முக்கிய வளமான புரதச் சத்து மிகுந்த மீன் உணவினைக் கொண்டுள்ளன. கடல் மதிப்பு மிக்க பல்வேறு கனிமவளங்களை மிகுதியாகக் கொண்டுள்ளது. அவற்றில் தங்கம், வெள்ளி, மாங்கனிசு, பெட்ரோல், முத்து ஆகியனவாகும். இவற்றிற்கும் மேலாகக் கடல் நீரில் மெக்னீசியம், புரோமின் மற்றும் சோடியம் குளோரைடு (அல்லது) சாதாரண உப்பு ஆகிய தாது உப்புகளும் உள்ளன. கட்டுமானப் பணிகளுக்கான மணல், சரளைக்கல் மற்றும் சிப்பி ஓடுகள், வைரங்கள் மற்றும் சரளைக்கல் ஆகியன பேராழிகளின் தரைப்பகுதியில் காணப்படுகிறது.

கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள எண்ணெய் மற்றும் இயற்கை வாயு வளங்கள் உலகப் பெட்ரோலிய உற்பத்தியில் 17 சதவீதத்தை அளிக்கின்றன. மேலும் பேராழிகள் மாற்றுச் சக்தி வள ஆதாரமாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினையும் கொண்டிருக்கின்றன. கடல் சூரிய வெப்பத்தினை உட்கவருவதால் பேராழிகள் வெப்பப்படுத்தப்பட்டு நீரோட்டங்கள் ஏற்படுகின்றது. இதை மின்னாற்றலாக மாற்ற இயலும். இந்நிகழ்ச்சியானது பேராழியின் வெப்ப ஆற்றல் மாற்றம் (Ocean Thermal Energy Conversion - OTEC) என அழைக்கப்படுகிறது.

பேராழி நீரோட்டங்கள்



## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடு

1. கண்டங்களால் சூழப்பட்ட அகன்ற நீர் பரப்பு ______________ என அழைக்கப்படுகிறது.
   அ) பேராழி ஆ) கடல் இ) வளைகுடா ஈ) விரிகுடா
2. அட்லாண்டிக் பேராழி நீண்ட__________ வடிவம் கொண்டது.
   அ) 'L' ஆ) 'S' இ) 'U' ஈ) 'O'
3. கடல் நீரின் உயர்வு மற்றும் தாழ்வு __________ எனப்படும்.
   அ) ஓதங்கள் ஆ) பேராழி நீரோட்டங்கள் இ) சுனாமி ஈ) அலைகள்
4. நீரின் அடியில் உள்ள மலைகளின் உயரப் பகுதி__________.
   அ) கயாட் ஆ) ஆழ்கடல் சமவெளி இ) கடல் மலை ஈ) கடலடித்தொடர்
5. நீரியல் சுழற்சி இவ்வாறு அழைக்கப்படுகிறது.
   அ) ஹைட்ரஜன் சுழற்சி ஆ) ஆக்சிஜன் சுழற்சி
   இ) நீர் சுழற்சி ஈ) கார்பன் சுழற்சி

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. புவியின் மற்றொரு பெயரானது __________.
2. __________ தென் பசிபிக் பேராழியில் உள்ள ஆழமான அகழி (மடு)
3. நிலத்தினால் சூழப்பட்ட நீர்ப் பகுதி ________ எனப்படுகிறது.
4. கடலடி சமவெளியானது __________ சூழப்பட்டுள்ளது.
5. __________ காரணமாகக் கடலலைகள் உருவாக்கப்படுகின்றன.

### III) பின்வரும் வினாக்களுக்கு விடையளி

1. உவர்ப்பியத்தினை வரையறு.
2. பேராழி நீரோட்டங்கள் என்றால் என்ன ?
3. அலைகள் எவ்வாறு உருவாகின்றது ?
4. பேராழியியல் என்றால் என்ன ?
5. கடல் வளங்களின் பெயர்களைக் கூறுக.

### IV) பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி

1. இந்தியப் பேராழியைப் பற்றி விவரி ?
2. கண்டத்திட்டு மற்றும் கண்டச் சரிவு பற்றி எழுதுக ?
3. நீர்சுழற்சி என்றால் என்ன ? விவரி.
4. ஓதங்கள் என்றால் என்ன ? அதன் வகைகளை விவரி.
5. மனித வாழ்க்கையில் பேராழியின் ஆதிக்கங்களில் ஏதேனும் ஐந்தைப் பற்றி எழுதுக.
6. பேராழிகளின் உவர்ப்பியம் பற்றி ஒரு பத்தி அளவில் எழுதுக.

## V). வரைபடப் பயிற்சி

உலக வரைபடத்தில் பேராழிகள் மற்றும் கடல்களைக் குறிக்கவும்.

உலக வரைபடத்தில் வெப்ப மற்றும் குளிர் நீரோட்டங்களைக் குறிக்கவும்.

## உருவாக்க மதிப்பீடு

1. பேராழிகள் மற்றும் கடல்களை உலக வரைப்படத்தில் குறிக்கவும்.
2. நீண்ட கண்டத்திட்டுக்கள் ஒரு நாட்டில் காணப்படின் அதன் நன்மை தீமை குறித்து ஒரு பட்டிமன்றம் நடத்துக.
3. பேராழியின் தரை நிலத்தோற்றம் மற்றும் நீர்சுழற்சி பற்றிய மாதிரிகள் தயாரிக்கவும்.
4. மிகவை ஓதம் மற்றும் தாழ்வை ஓதம் ஆகியவற்றைக் காட்டும் ஒரு அட்டைப்படம் தயாரிக்கவும்.
5. உலகின் முக்கிய கடல் நீரோட்டங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.

# 1. ஐக்கிய நாடுகள் அவை

நமது உலகில் கி.பி.1939 முதல் கி.பி.1945ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற இரண்டாவது உலகப் போர், முதல் உலகப் போரை விட பெரும் அழிவை ஏற்படுத்தியது. இந்தப் போரில் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர். முதல் உலகப் போரின்முடிவில் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுக் கழகம் உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டாத காரணத்தினால் இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டது.

அமெரிக்கா, சோவியத்ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் உலகத்தில் உடனடியாக நிரந்தரமான அமைதி ஏற்படுத்த ஒரு புதிய அமைப்பு தேவை என உணர்ந்தன. அதன் விளைவாக ஐக்கிய நாடுகள் அவை உருவானது.

## ஐக்கிய நாடுகள் அவையின் தோற்றமும் தொடக்ககாலத் திட்டங்களும்

உலக அமைதியை நிலைநாட்ட உருவாக்கிய பன்னாட்டுநிறுவனத்தின் அடிப்படைத் திட்டங்கள், அமெரிக்காவின் ஆதரவுடன் 1939ஆம் ஆண்டு உருவாயின. உலக அமைதிக்காகச் செயலாற்றும் நட்பு நாடுகளைக் குறிப்பதற்காக “ஐக்கியநாடுகள்” என்ற பெயரை அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத்தலைவர் பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் உருவாக்கினார். ஜனவரி 1ஆம் நாள் 1942ஆம் ஆண்டு, 26 நாடுகள் சேர்ந்து அட்லாண்டிக் சாசனத்தில் வாஷிங்டனில் கையெழுத்திட்டன. அந்த சாசனத்தில் ‘ஐக்கிய நாடுகள்’ என்ற பெயர் முதன் முதலில் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது.

## அட்லாண்டிக் சாசனம்

இது உலகமக்களிடையே அமைதி மற்றும் பாதுகாப்பை உருவாக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு கொள்கை அமைப்பாகும். 1941 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் நாள், அமெரிக்கா அதிபர் பிராங்களின் டி ரூஸ்வெல்ட், இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அட்லாண்டிக் கடலில் ஹெச். எம். எஸ். வேல்ஸ் பிரின்ஸ் என்னும் கப்பலில் பயணம் செய்யும் போது இந்தச் சாசனத்தில் கையொப்பமிட்டனர். எனவே இது அட்லாண்டிக்சாசனம் என அழைக்கப்படுகிறது.

## ஐக்கிய நாடுகள் சாசனம்

பல்வேறு நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளின் முடிவில் ஐக்கியநாடுகள் அவை உருவானது. ஐக்கிய நாடுகள் அவையின் சாசனத்தை எழுதுவதற்குச் சான்ப்ரான்சிஸ்கோ நகரில் ஒரு மாநாடு ஏப்ரல் 25ஆம் நாள் 1945 ஆம் ஆண்டு கூட்டப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அவையின் இலக்குகள், நோக்கங்கள், விதிமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பே ஐக்கிய நாடுகள் அவை சாசனம் ஆகும். இச்சாசனத்தில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஜுன் 26ஆம் நாள் 1945 ஆம் ஆண்டு கையெழுத்திட்டனர். போலந்து மட்டும் பின்னர் கையெழுத்திட்டது. அக்டோபர் 24 ஆம் நாள் 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள்அவை தமது செயல்பாட்டைத் தொடங்கியது. எனவே அக்டோபர் 24ஆம் நாளை, ஐக்கிய நாடுகள் அவையின் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

ஐ.நா.அவையை உருவாக்குவதற்கு முன் கூட்டப்பட்ட மாநாடுகள்,

1943 அக்டோபர் 30 – மாஸ்கோ.

1943 டிசம்பர் 1 – டெஹ்ரான்

1944 செப்டம்பர் 21 – டம்பர்டன் ஓக்ஸ்.

1944 அக்டோபர் 7 – டம்பர்டன் ஓக்ஸ்.

1945 பிப்ரவரி 11 – யால்டா.

## ஐ.நா. உறுப்பினர்கள்

அமைதியை விரும்பும் நாடுகள் ஐ.நா.வின் உறுப்பினர் ஆகலாம். தற்போது 193 நாடுகள் இதில் உறுப்பினராக உள்ளன. இதன் தலைநகர் நியூயார்க்கில் "மன்ஹாட்டன்" பகுதியில் அமைந்துள்ளது.

## ஐ.நா சபையின் இலச்சினை, கொடி மற்றும் மொழிகள்

ஐந்து உள்வட்டங்களும், அதன்மீது வடதுருவத்திலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய வகையிலான உலகப்பட தோற்றமும், அதனைச் சூழ்ந்து ஆலிவ் இலைக்கொத்துகளும் கொண்ட படம் ஐ.நா.வின் இலச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது. உலக அமைதியை குறிக்கும் வண்ணம் ஆலிவ் இலைக்கொத்துகளும், உலக அமைதி மற்றும் பாதுகாப்பினை அடைவதே ஐ.நா.வின் முக்கிய இலக்கு என்பதை எடுத்துரைக்க உலகப்படம் ஐ.நா.வின் இலச்சினையாக உருவாக்கப்பட்டுள்ளது.



ஐ.நாவின் இலச்சினை

வெளிர்நீலநிறக் கொடியின் நடுவில் வெள்ளைநிறத்தில் ஐ.நா.வின் இலச்சினை பொறிக்கப்பட்ட கொடி, ஐ.நா.வின் கொடியாக அமைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ருஷியன், சீனமொழி மற்றும் அரேபியமொழி ஆகியவை ஐ.நா.வின் பொது மொழிகளாக இருக்கின்றன.

## ஐ.நா.வின் செயல்பாடுகள்

- அமைதியை நிலை நாட்டல்
- முரண்பாடுகளைக் களைதல்
- அகதிகளுக்குப் பாதுகாப்பு அளித்தல்
- தீவிரவாதம் தடுத்தல், படைவலிமைக் குறைப்பு.
- மக்களாட்சியை மேம்படுத்துதல்
- தொடர் வளர்ச்சி
- பன்னாட்டு மக்கள் மற்றும் குழந்தைகள்நலன் மேம்படுத்துதல்
- அம்மை நோயினால் ஏற்படும் இறப்பு விகிதத்தைக் குறைத்தல்
- போலியோ நோயை ஒழித்தல்
- மலேரியா நோய் இறப்புகளைத் தடுத்தல்
- உணவு உற்பத்தியைப் பெருக்குதல்.

## ஐ.நா. சபையின் நோக்கங்கள்

உறுப்புநாடுகளுக்கு இடையே ஏற்படும் வேறுபாடுகளுக்கு அமைதியான முறையில் தீர்வு காணுதல்.

உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நாட்டல்.

நாடுகளிடையே நட்புறவுகளை உருவாக்குதல்.

உலகப்பொருளாதாரம், சமூகப்பண்பாடு மற்றும் மனிதஇனம் சார்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஒத்துழைத்தல்.

சமூக முன்னேற்றம், தரமானவாழ்வு மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல் ஆகியன ஐ.நா. அவையின் நோக்கங்களாகும்.

### ஐ.நா. அவையின் 'ஆயிரம் ஆண்டு குறிக்கோள்'

இந்த ஆயிரம் ஆண்டில், கீழ்க்கண்ட குறிக்கோள்களை ஐ.நா. அவை வகுத்துள்ளது.

1. மிகுதியான ஏழ்மையையும், பட்டினியையும் நீக்குதல்.

2. அனைவருக்கும் தொடக்கக்கல்வி அளித்தல்.

3. பாலின சமத்துவத்தையும், பெண்களுக்கு அதிகாரமளித்தலையும் உருவாக்குதல்.

4. குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்தல்.

5. அன்னையர் உடல் நலம் பேணுதல்.

6. எய்ட்ஸ், ஹெச்.ஐ.வி, மலேரியா போன்ற நோய்களைக்களைய நடவடிக்கை எடுத்தல்.

7. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல்.

8. முன்னேற்றப்பணிகளுக்காக உலகளாவிய தோழமையை உருவாக்குதல்.

### ஐ.நா. அவையின் அமைப்புகள்

ஐ.நா. அவையானது, ஆறு முக்கிய அமைப்புகளைக் கொண்டு செயல்படுகிறது. அவையாவன

1. பொதுப்பேரவை.
2. பாதுகாப்புப் பேரவை.
3. பொருளாதார மற்றும் சமூகப்பேரவை.
4. பன்னாட்டுநீதிமன்றம்.
5. அறங்காவலர் பேரவை
6. பன்னாட்டுச் செயலகம்

### பொதுப்பேரவை

ஐ.நா.வின் அனைத்து அமைப்புகளில் மிகமுக்கியமான அங்கம் பொதுப்பேரவை ஆகும். இது மனிதஇனப் பாராளுமன்றம் என்று அழைக்கப்படுகிறது. பொதுப் பேரவையில் அனைத்து உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்கு உண்டு. ஒவ்வொரு உறுப்பு நாடும் ஐந்து பிரதிநிதிகளைப் பொதுப்பேரவைக்கு அனுப்பமுடியும். ஆண்டுக்கு ஒருமுறை பொதுக்குழு கூடும். பெரும்பாலும் செப்டம்பர் மாதத்தில் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும். பாதுகாப்புப் பேரவையின் வேண்டுகோளின்படி தேவைப்படும்போது அவசரக் கூட்டமும் நடைபெறும்.

பொதுப்பேரவையின் தலைவராக 1953ஆம்ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர், திருமதி.விஜயலட்சுமி பண்டிட் ஆவார்.

முக்கிய நடவடிக்கைகளான, அமைதி, பாதுகாப்பு, புதிய உறுப்புநாடுகளைச் சேர்த்தல், வரவு, செலவு திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கு 2/3 பங்கு உறுப்பினர்களின் ஆதரவுதேவை. மற்ற தீர்மானங்களுக்குச் சாதாரண பெரும்பான்மையே போதுமானது.

### பொதுப்பேரவையின் முக்கியச் செயல்பாடுகள்

1. தலைவரையும், 21 துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது.

2. பாதுகாப்புப்பேரவையின் நிரந்தர உறுப்பினரல்லாதவர்களையும், ஐ.நா. சபையின் பிற அமைப்புகளுக்கான உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பது.

3. ஆண்டு வரவு, செலவுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பது.

4. பாதுகாப்புப்பேரவையின் பரிந்துரையின்படி, பொதுச்செயலர் மற்றும் பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை நியமனம் செய்வது.

### பாதுகாப்புப் பேரவை

ஐ.நா. அவையின் இரண்டாவது முக்கிய அமைப்பு பாதுகாப்பு அவை ஆகும். இது ஐ.நா. அவையின் நிர்வாக அமைப்பாக விளங்குகிறது. பாதுகாப்பு பேரவையானது 5 நிரந்தர உறுப்பினர்களையும், 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி, மொத்தம் 15 பேரைக்கொண்டது. ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சீனா ஆகியவை நிரந்தர உறுப்பினர்கள். மற்ற நிரந்தரமற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகளாகும். இவர்கள் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர். பாதுகாப்புப்பேரவையின் உறுப்பினர்கள் மாதம் ஒருமுறை கூடி புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பர். 2/3 பங்கு உறுப்பினர்களின் ஆதரவின் அடிப்படையில் முடிவுகள் தீர்மானிக்கப்படும். நிரந்தர உறுப்புநாடுகளுக்குத் தடுப்புரிமை ஆணை (veto power) உண்டு. இதனைப்பயன்படுத்தி ஒரு நிரந்தர உறுப்புநாடு எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாமல் தடுக்க இயலும்.

> **2010 ஆம் ஆண்டில் இந்தியா, பாதுகாப்புப் பேரவையின் நிரந்தரமற்ற உறுப்பினராக 2 ஆண்டு காலத்திற்குத் தேர்வு செய்யப்பட்டது.**

### பாதுகாப்புப்பேரவையின் முக்கியச் செயல்பாடுகள்

1. உலக அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்துதல்.

2. உறுப்பு நாடுகளிடையே எழும்பிரச்சனைகளை அமைதிவழியில் தீர்வுகாணுதல்.

3. புதிய உறுப்பினர்களைச் சேர்க்கப் பரிந்துரைத்தல்.

4. பாதுகாப்புப் பேரவையின் பொதுச்செயலர் தேர்தலில் பங்கெடுத்தல்.

### பொருளாதார மற்றும் சமூகப்பேரவை

இப்பேரவை ஐ.நா.வின் பொருளாதார, சமூகச் செயல்பாடுகளையும் ஐ.நா. அவையின் சிறப்பு நிறுவனத்தின் பணிகளையும் ஒருங்கிணைக்கிறது. இதன் 54 உறுப்பினர்கள் ஒவ்வொரு மூன்றாம் ஆண்டும் பதவிவிலகுவர். பின்னர் அதில் புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பேரவை, தேவை ஏற்படும்போதெல்லாம் ஆண்டு முழுவதும் கூடும். இந்தப்பேரவையின் முக்கியக்கூட்டம் ஜூலை மாதம் நடைபெறும். இதில் பொருளாதாரப் பிரச்சனைகள், சமூக – மனிதாபிமானப் பிரச்சனைகளான, சமூக வளர்ச்சி, பெண்கள் நிலை, குற்றங்களைத்தடுத்தல், போதைமருந்துகள் ஆகியவை பற்றி விவாதிக்கப்படும்.

### அறங்காவலர் பேரவை

தன்னாட்சி அதிகாரம் பெறாத 11 நாடுகளை நிர்வகிக்க 7 உறுப்பினர் கொண்ட அறங்காவலர்பேரவை அமைக்கப்பட்டது. பேரவை மேற்பார்வைசெய்த நாடுகள் தன்னாட்சி பெற உதவியது. 1994ஆம் ஆண்டுக்குள் இந்நாடுகளனைத்தும் சுதந்திரம் அடைந்தன. இப்பணி தற்போது நிறைவுற்றதால், வருங்காலத்தில் தேவை ஏற்பட்டால் அறங்காவலர் பேரவை செயல்பட தொடங்கும் வகையில் அறங்காவலர் பேரவை மாற்றியமைக்கப்பட்டது.

### பன்னாட்டு நீதிமன்றம்

பன்னாட்டு நீதிமன்றம் 'உலக நீதிமன்றம்' என அழைக்கப்படுகிறது. இது ஐ.நா. அவையின் முக்கிய நீதி அமைப்பாகும். இந்நீதிமன்றத்துக்கான 15 நீதிபதிகள் பொதுக் குழுவாலும், பாதுகாப்புப் பேரவையாலும் தேர்ந்தெடுக்கப்படுவர். உறுப்பு நாடுகளிடையே எழும் பிரச்சினைகளை இந்நீதிமன்றம் தீர்த்துவைக்கும். மேலும், ஐ.நா. அவைக்கும், அதன்கீழ் செயல்படும் சிறப்பு நிறுவனங்களுக்கும் தேவையான அறிவுரைகளையும் இது வழங்கும். இது ஹாலந்து நாட்டில் உள்ள தி ஹேக் என்ற நகரில் அமைந்துள்ளது.

### செயலகம்

செயலகமானது ஐ.நா. அவையின் பொதுக்குழு, பாதுகாப்புப்பேரவை, மற்றும் பிற அமைப்புகளின் வழிகாட்டுதலின்படி நிர்வாகப்பணிகளைச் செய்கிறது. பொதுச் செயலரின் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் செயலகத்தின் நிர்வாகப்பணிகளானது நடைபெறுகின்றன. தென்கொரியாவைச்சேர்ந்த பான்கீமூன், ஐ.நாவின் தற்போதைய பொதுச்செயலர் ஆவார். இவர் 2007ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இச்செயலகத்தில் பல்வேறு துறைகளில் அலுவலர்கள், ஊழியர்கள் என 7500 பேர் பணிபுரிகிறார்கள். திறமை, நேர்மை, தகைமை ஆகிய உயர்ந்த பண்புகள் அடிப்படையிலேயே, இதன் அலுவலர்கள் தேர்வுசெய்யப்படுகிறார்கள்.

ஐ.நா. அவை மேலும் 30 சிறப்பு நிறுவனங்களின் துணையுடன் இலக்கினை அடைய அரும்பாடுபடுகிறது.

**ஐ.நா. அவையின் சிறப்பு நிறுவனங்கள்**

| | | |
|---|---|---|
| FAO | - | உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனம். (Food and Agricultural Organization ) |
| ILO | - | பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம். (International Labour Organization ). |
| IMF | - | உலக நிதி நிறுவனம். ( International Monetary Fund). |
| UNICEF | - | ஐ.நா. உலகநாடுகள் குழந்தைகள் நலநிதி. (United Nations International Children's Emergency Fund) |
| UNESCO | - | ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம். (United Nations Educational Scientific and Cultural Organization) |
| WHO | - | உலக சுகாதார நிறுவனம். (World Health Organisation ). |
| WTO | - | உலகளாவிய வர்த்தக நிறுவனம். (World Trade Organisation ). |

## ஐ.நா. அவையின் சாதனைகள்

உலக நாடுகளிடையே போரைத்தவிர்த்து, அமைதியையும், பாதுகாப்பையும் ஐ.நா. அவை உருவாக்கி வருகிறது. உறுப்புநாடுகளிடையே உள்ள சமூக, கலாசார, பொருளாதார, மனிதாபிமானப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது.

### ஐ.நா. அவையின் பெரும் சாதனைகள்

**1946** இல் ஈரானிலிருந்து ரஷ்யப் படைகளைத் திரும்பப்பெறவும், சிரியா, லெபனான் நாடுகளிலிருந்து பிரிட்டன், பிரான்ஸ் படைகளைத் திரும்பப்பெறவும் செய்தது.

**1947** இல் டச்சு நாட்டின் பிடியிலிருந்து இந்தோனேசியாவுக்கு விடுதலை வழங்கியது.

**1956** இல் சூயஸ் கால்வாய் பிரச்சனையை முடிவுக்குக் கொணர்ந்து அதை அனைத்து நாடுகளின் பயன்பாட்டிற்குப் பொதுவாக்கியது.

**1962, 1973** இல் எழுந்த, மத்திய கிழக்கு நாடுகள் பிரச்சனையையும், கியூபா ஏவுகணைப் பிரச்சனையையும் முடிவுக்கு கொண்டு வந்தது.

**1988** இல் ஏற்பட்ட ஈரான் – ஈராக் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

**1989**இல் ஆப்பானிஸ்தானிலிருந்து ரஷ்யப்படைகளைத் திரும்பப்பெற செய்தது.

**1990** இல் குவைத் நாட்டிற்கு மேலாண்மையினை பெற்றுத்தந்தது. கம்போடியா, எல் சால்வேடர், கௌட்டாமேலா, மொசாம்பிக் ஆகிய நாடுகளின் உள்நாட்டுப் போர்களை முடிவுக்குக் கொண்டுவந்தது.

ஐ.நா. அவையின் சிறப்பு அமைப்பான உலக சுகாதார நிறுவனம் (WHO) பெரியம்மையை முழுவதும் நீக்கியதுடன் போலியோ, மலேரியா, காசநோய் ஆகியவற்றை உலகிலிருந்து நீக்கவும் உறுதியேற்றுச் செயல்பட்டு வருகிறது.

அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் மேலாணையர் அலுவலகம் (UNCHR) அகதிகளுக்கு ஆற்றிய சேவைக்காக 1954 மற்றும் 1981ஆம் ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்றுள்ளது.

வருங்காலத் தலைமுறையினருக்கு அமைதியான, பாதுகாப்பான உலகை உருவாக்க ஐக்கிய நாடுகள் அவையும் அதன் பிற நிர்வாக அமைப்புகளும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

## பயிற்சி

I) சரியான விடையை எழுதுக.

1. ஐ.நா.சபையின் தலைமையகம் __________ நகரில் உள்ளது.
   அ) வாஷிங்டன் ஆ) தி ஹேக் இ) நியூயார்க்
2. __________ மனித இனப்பாராளுமன்றம் என்று அழைக்கப்படுகிறது.
   அ) அறங்காவலர் பேரவை ஆ) பொதுப்பேரவை
   இ) பொருளாதார மற்றும் சமூகப் பேரவை
3. ஐ.நா.வின் அலுவலக மொழிகளில் ஒன்று __________.
   அ) இந்தி ஆ) ஜெர்மனி இ) பிரெஞ்சு

4. ஐ.நா.வின் பாதுகாப்புப் பேரவை ________ நிரந்தர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அ) 4 ஆ) 5 இ) 10

5. ஐ.நா. வின் சிறப்பு அமைப்பான ___________ தனது செயல்திட்டங்களில் பெரியம்மையை முழுமையாக நீக்கியுள்ளது.

அ) உலக சுகாதார நிறுவனம் ஆ) பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் இ) ஐ.நா.கல்வி அறிவியல் மற்றும் பன்னாட்டு நிறுவனம்.

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஐக்கிய நாடுகள் என்ற பெயரை உருவாக்கியவர் _________.
2. ஐக்கிய நாடுகள் சாசனத்தில் ______ நாடுகள் ஜூன் 26 ஆம் நாள் 1945ஆம் ஆண்டு கையெழுத்திட்டனர்.
3. ஐ.நா. வின் நிர்வாக அமைப்பாக _________ விளங்குகிறது.
4. _________ ஆண்டுக்குள் அறங்காவலர் பேரவை மேற்பார்வை செய்த அனைத்து நாடுகளும் தன்னாட்சி பெற்றன.
5. பன்னாட்டு நீதிமன்றம் ஹாலந்து நாட்டில் ___________ நகரில் உள்ளது.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. ஐ.நா. அவை மாநாடு | அகதிகள் புனரமைப்பு. |
| 2. ஐ.நா. அவை | சான் பிரான்சிஸ்கோ |
| 3. பான் கீ மூன் | நியூயார்க் |
| 4. ஐ.நா.தலைமையகம் | 24 ஆம் நாள் அக்டோபர் 1945 |
| 5. யு.என்.சி.எச்.ஆர் | ஐ.நா.பொதுச்செயலாளர் |

## IV) சுருக்கமாக விடையளி.

1. ஐ.நா. அவையின் இலச்சினையைப் பற்றி எழுதுக.
2. ஐ.நா. அவையின் அலுவலக மொழிகள் யாவை ?
3. ஐ.நா. அவையின் சில சிறப்பு நிறுவனங்களை குறிப்பிடுக.
4. பாதுகாப்புப் பேரவையில் உள்ள நிரந்தர உறுப்பினர்கள் யாவர் ?
5. பன்னாட்டு நீதி மன்றத்தின் பணிகள் யாது ?

## V) விரிவான விடையளி.

1. ஐ.நா. அவையின் ஆயிர ஆண்டு வளர்ச்சிக் குறிக்கோள்'களைக் குறித்து விரிவாக எழுதவும்.
2. ஐ.நா. அவையின் முக்கிய அமைப்புகள் யாவை ? பொதுச்சவை மற்றும் பாதுகாப்புப் பேரவையின் பணிகளை விளக்கு.
3. ஐ.நா.வின் முக்கிய சாதனைகளை பட்டியலிடுக.

## உருவாக்க மதிப்பீடு:

1. தகவல் அட்டை தயாரிக்க:
ஐக்கிய நாடுகள் அவையின் பல்வேறு அமைப்புகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த தகவல் அட்டை தயாரிக்கவும்.

2. குழு விவாதம்:
ஐக்கிய நாடுகள் அவை தனது உறுப்பு நாடுகளின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சிக்கு எவ்வாறு உதவி வருகிறது ? என்பதைக் குழுவிவாதம் செய்க.

3. வினாடி வினா போட்டி:
ஐக்கிய நாடுகள் அவை மற்றும் சாதனைகள் பற்றிய வினாடி வினா போட்டி நடத்துக.

4. கண்டுபிடி:
ஐக்கிய நாடுகள் அவையின் சிறப்பு நிறுவனங்களில் ஏதேனும் பத்தினை அவற்றின் தலைமையகத்துடன் பட்டியலிடுக.

5. படத்தொகுப்பு தயாரிக்க:
ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலராகப் பதவி வகித்தவர்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்றைத் தயாரிக்க.

6. செய்ய வேண்டியவை:
இந்தியாவில் பெண்கள், குழந்தைகள் நலனுக்காக ஐக்கிய நாடுகள் அவை எவ்வாறு உதவி வருகிறது ? என்பது பற்றிய தகவல்களைத் திரட்டுக.

## 2. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான சட்டங்களும், நலத்திட்டங்களும்.

நமது இந்திய நாடு மக்கள் நல நாடாகும். நமது அரசு அனைத்துக் குடிமக்களின் நலனுக்காக முழுஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. குறிப்பாகக் குழந்தைகள், பெண்கள் நலனில் சிறப்புஅக்கறை கொண்டுள்ளது. எந்த ஒருநாடும் பெண் கல்வியைப் புறந்தள்ளிவிட்டு முன்னேற முடியாது. ஏனென்றால் தாயே குழந்தையின் முதல் ஆசிரியர். குழந்தைகளே நம் நாட்டின் வருங்காலத் தூண்கள். ஆகவே குழந்தைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்கு நமது நாடு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

### குழந்தைகளின் நலனுக்கான சட்டங்கள்

இந்திய அரசியல்அமைப்பின் நெறிகாட்டும் வழிமுறைகளில் சரத்து எண்.39(f) மற்றும் 45 ஆகியன குழந்தைகள் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் பற்றிக் கூறுகிறது.

சரத்து 24, குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப்பற்றியது ஆகும். இது குழந்தைத் தொழிலாளர்முறையிலிருந்து அவர்களைப் பாதுகாக்க உறுதிசெய்கிறது. 14 வயதிற்குட்பட்ட எந்தக்குழந்தையும் ஆலைகளில் வேலைசெய்யவும், சுரங்கங்கள் மற்றும் அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவதையும் தடைசெய்கிறது.

சரத்து 39(f), குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி, குழந்தைகள் மற்றும் இளையோர்மீது போதியகவனத்துடன் செயல்படுதல், சுரண்டலிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.

சரத்து 45, பதினான்கு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வழிவகுக்கிறது.

### பெண்கள், குழந்தைகளுக்கான அமைச்சரகம்

குழந்தைகள், பெண்களின் முழுமையான வளர்ச்சி, பாதுகாப்பு, வளமான வாழ்க்கை வாழ்தல் அவர்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி முழு குடிமக்களாக வாழச்செய்யும் நோக்கத்துடன் செயல்படுகிறது.

### கல்வி உரிமை

நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, சுதந்தரப்போராட்ட தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே, குழந்தைகளின் கல்வி உரிமையின் முக்கியத்துவத்தை ஆங்கிலேயர் காலத்திலேயே, சட்ட சபையில் எடுத்துரைத்து, அதனை பெறுவதற்காக அரும்பாடுபட்டார். அவரின் கனவு 2010, ஏப்ரல் 1ஆம் நாள் கொண்டுவரப்பட்ட கல்விஉரிமைச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 6முதல் 14வயது முடிய உள்ள குழந்தைகளுக்குக் கல்வி ஓர் அடிப்படை உரிமையாக ஆக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக இந்தியஅரசு இளைய சமுதாயத்தை நிறைவான கல்வி அறிவு படைத்தோர் சமுதாயமாக மாற்ற வழிவகுத்துள்ளது.

### இந்திய அரசால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்

குழந்தைகள் நலனுக்காகப் பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றுள் சில,

1. 1986 இல் நிறைவேற்றப்பட்டு, 2000 இல் மாற்றியமைத்து நடைமுறைபடுத்திய இளம் குற்றவாளிகள் நீதிச் சட்டம்.

2. தாய்ப்பாலுக்கு மாற்றாக, உணவுப்புட்டிகள் மற்றும் குழந்தை உணவு திட்டம் – 1992.

3. குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பாணைக் குழு சட்டம் 2005.

## குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள்

குழந்தைகள் முன்னேற்றம் மற்றும் நலனுக்காக மிகுதியான நலத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

1. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிதிட்டம் (ICDS) – 1975 : நோக்கங்கள்:

அ) ஆறு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களின் உடல்நலத்தைப் பாதுகாத்தல்.

ஆ) குழந்தை இறப்புவிகிதம், சத்துணவு குறைவு, பள்ளி இடைநிற்றல் போன்றவற்றின் விழுக்காடுகளைக் குறைத்தல்

2. பணிக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்காகக் குழந்தைகள் பேணி வளர்க்கும் ராஜீவ் காந்தி குழந்தைக் காப்பகத் திட்டம் 2006இல் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் வேலைக்குச் செல்லும் தாய்மார்களின், 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்காகக் குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்தி நடத்தி வருகின்றது.

3. வீதிகளில் வாழும் குழந்தைகளுக்கான திட்டம்: வீதிகளில் ஆதரவின்றிதிரியும் குழந்தைகளுக்கு உறைவிடம், ஊட்டச்சத்து, உடல்நலம் பேணல், கல்வி மற்றும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்த வழிசெய்தல் போன்ற ஒருங்கிணைப்பு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளைத் தவறாக பயன்படுத்துவதிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் இத்திட்டம் பாதுகாக்கிறது.

4. குழந்தை உதவிமையங்கள், இது பிரச்சனைகளிலிருக்கின்ற குழந்தைகளுக்கும், அவசரக் காலத்திலும் உதவிசெய்கின்றன. குழந்தைகளின் உடல்நலன், பாதுகாப்பு ஆகியவற்றிலும் சிறப்புக்கவனத்தைச் செலுத்துகின்றன.

5. ஒருங்கிணைந்த குழந்தைப்பாதுகாப்பு அமைப்பு: இது, நிறுவனம் சார்ந்த மற்றும் அமைப்புசாராக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு கிடைக்க உதவுகிறது.

6. வேலைக்குச் செல்லும் குழந்தைகளுக்கான கவனிப்பும், பாதுகாப்பும் (2005): இதனால் முறைச்சாராக் கல்வியும், தொழிற்கல்வியும், தொடர்கல்வியும், வேலைக்குச் சென்ற குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

## குழந்தைகள்தினம் கடைப்பிடித்தல்

ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 14 ஆம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அது அரசுக்கும், தன்னார்வ நிறுவனங்களுக்கும் குழந்தைகளின் வளர்ச்சித் திட்டங்களைத் திரும்பிப்பார்க்க வாய்ப்பளிக்கிறது. மேலும் பல்வேறு துறைகளில் அவர்கள் முன்னேற ஊக்கம் அளிக்கின்றது.

### அரசின் விருதுகள்

குழந்தைகளுக்கான கலை, இலக்கியம், கலாசாரம், விளையாட்டு, ஆகிய துறைகளில் முதன்மை பெற்று தனித்திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு அரசு முறையான ஏற்பு தந்து பல்வேறு விருதுகளை அளித்து வருகிறது.

1996இல் சாதனைக் குழந்தைகளுக்கான தேசிய விருது ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் குடியரசு தினத்தன்று 4 முதல் 15 வயதிற்குட்பட்ட, பாராட்டுக்குரிய குழந்தைகள், சிறப்பு விருதுகளினால் கௌரவிக்கப்படுகிறார்கள்.

குழந்தைகளுக்காகப் பல்வேறு சட்டங்களை உருவாக்கினாலும் குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற கொடுமைகள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு உருவாக்கப்பட வேண்டும். பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டுவர சரியான வழிகாட்டுதலையும், நெறிப்படுத்துதலையும், அணுகக்கூடியவகையில் அவர்களை உருவாக்க வேண்டும். குழந்தைகளுக்கு நடைபெறுகின்ற பல்வேறு கொடுமைகள், தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றை நீக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமுதாய நல நிறுவனங்கள் ஆகியவைகள் அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்.

### பெண்கள் முன்னேற்றமும், சட்டங்களும்

பழங்காலத்திலிருந்தே பெண்களின்நிலை மாறுபட்டே இருந்துவருகிறது. சில காலங்களில் பெண்கள் மிகஉயர்வாகக் கருதப்பட்டதும், சில காலங்களில் சொல்லமுடியாத அளவு துன்பங்கள் அனுபவித்ததும் வரலாற்று உண்மைகளாகும். சமூகத்தில் பெண்கள் நிலையை உயர்த்த இந்திய அரசு எண்ணற்ற உரிமைகளையும், சட்டங்களையும் நடைமுறைப் படுத்தியுள்ளது.

### பெண்களின் உரிமைகளும், சட்டங்களும்

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 23, பெண்களின் விடுதலை பற்றிக் கூறுகிறது.

பிரிவு 23, பெண்களை வியாபாரப் பொருளாகச் செயல்படுவதைத் தடைசெய்கிறது.

பெண்களைக் கட்டாய வேலைக்கு உட்படுத்துதல் குற்றமாகும்.

பெண்களை அடிமையாக விற்பது சட்டவிரோதமாகும்.

பெண்கள் சுரண்டப்பட்டு ஏமாற்றுதலை எதிர்ப்பதற்கான உரிமைகளும், சட்டங்களும் உள்ளன.

குடும்பச் சொத்துகளில் மகன்களோடு, மகள்களும் உரிமைகோர சட்டம் இடம் அளிக்கிறது. 1978 இல் உருவாக்கப்பட்ட குழந்தைத் திருமணத் தடைச் சட்டத் திருத்தம் பெண்களின் திருமணவயது 15 லிருந்து 18 ஆகவும், ஆணின் திருமண வயது 18 லிருந்து 21 ஆகவும் உயர்த்தியுள்ளது. இது குழந்தைத் திருமணத்தைத் தடை செய்கிறது.

1961இல் நடைமுறைக்கு வந்த வரதட்சணைத் தடைச்சட்டம், வரதட்சணைக் கொடுப்பதையும், வாங்குவதையும் தடைசெய்துள்ளது. 1986இல் கொண்டு வரப்பட்ட வரதட்சணைத் தடைச்சட்டத்திருத்தம், வரதட்சணை வாங்குபவர், வரதட்சணை தொடர்பாகப் பெண்களைக் கொடுமைப்படுத்துபவர் மீது கடுமையான தண்டனை கொடுக்க வழி வகுத்துள்ளது. இந்திய அரசியல்

அமைப்புச்சட்டம் மட்டுமல்லாமல் மத்திய, மாநில அரசுகள் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை நீக்கியும், சமூக அநீதி மற்றும் சுரண்டலிலிருந்து பாதுகாக்கவும், பல்வேறு சட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக தமிழ்நாடு அரசு 1997இல் (ஈவ்டீசிங்) பெண்களை இகழ்தல் தடைச் சட்டம் இயற்றியுள்ளது. 2002இல் உருவாக்கப்பட்ட இதன் திருத்தம் பெண்களுக்குத் தொல்லை கொடுப்பதைத்தடை செய்துள்ளது. அவ்வப்போது ஏற்படுத்தப்படுகின்ற அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்கள் குடிமக்களின் நலனுக்காகவே ஏற்படுத்தப்படுகின்றன. 73 ஆவது, 74 ஆவது அரசியல் சட்டத்திருத்தம் ஊராட்சி அமைப்புகளிலும், உள்ளூர் அமைப்புகளிலும், பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டைக் கொடுத்துள்ளது.

### பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

பெண்களைப் பாதுகாக்க, கல்வி அளிக்க, வாழ்வாதாரங்களை உயர்த்த, எண்ணற்ற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில;

1.வேலைக்கான பயிற்சித் திட்டம் (STEP) பணி மற்றும் பயிற்சி ஆதாரத்திட்டம்.

இத்திட்டம் 1996இல் ஆரம்பிக்கப்பட்டது. இது கைவேலைப்பாடுகள், கைத்தறிகள், காதி போன்ற கிராமத் தொழிற்சாலைகளில் வேலைவழங்க பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.

**2.** சுய உதவித் திட்டம். சுயம்ஸிதா : (சுயமுயற்சி)

இது பெண்களுக்குச் சுய உதவிக்குழுக்கள் போன்ற திட்டங்களின் வழியாகப் பெண்களின் அதிகாரக்குவிப்பு மற்றும் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது.

**3.**குறுகிய கால இல்லங்கள் (1996 ).

சமூக, பொருளாதார, மனஅழுத்தம் போன்ற பிரச்சனைகளில் துன்பப்படுகின்ற பெண்களுக்கு ஆற்றுப்படுத்தும் இடமாக இது உள்ளது.

4.குடும்ப ஆலோசனை மையங்கள்.

குடும்பங்களில் ஒத்துப்போக முடியாத சூழலினாலும், சமூக ஆக்கிரமிப்புகளாலும் பாதிக்கப்பட்டப் பெண்களுக்கு அறிவுரைவழங்கும் மையமாக இவை செயல்படுகின்றன.

5.பெண் கல்வித்திட்டங்கள்.

பல்வேறு காரணங்களினால் பள்ளிப்படிப்பைத் தொடரமுடியாத 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் கல்வி கற்கவும், திறன்களை வளர்க்கவும் வழி செய்கிறது. இதன் மூலம் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இது பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.

6.கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்கள்.

பெண்கள் தங்களின் உரிமைகளையும், வாய்ப்புகளையும் தெரிந்து கொள்ளாததால் எண்ணற்ற பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இந்தத் திட்டம் ஏழைப் பெண்களிடம் விழிப்புணர்வை உருவாக்கி அவர்கள் தங்கள் நிலைகளையும், உரிமைகளையும் தெரிந்து பல பிரச்சனைகளைத் தீர்க்க உதவுகிறது.

பெண்களின் சமூக வாழ்க்கை உயர்வு அரசின் சட்ட திட்டங்களில்

மட்டுமன்றி, ஏராளமான சமூக நல அமைப்புகளின் முயற்சியாலும் முன்னேற்றம் கண்டுள்ளது. இவற்றின் உதவியோடு எதிர்காலத்தில் பெண்கள் நிலை மேலும் உயர்வடையும் என உறுதியாகக் கூறலாம்.

## பயிற்சி

### I) சரியான விடையை எழுதுக.

1. __________ நம் நாட்டின் வருங்காலத் தூண்கள்.

   அ) முதியோர்கள் ஆ) இளைஞர்கள் இ) குழந்தைகள்

2. இந்திய அரசியலமைப்பின்__________ பிரிவு குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வாய்ப்பளிக்கிறது.

   அ) பிரிவு 39 (f) ஆ) பிரிவு 45 இ) பிரிவு 25

3. இந்திய அரசு, கல்வி உரிமைச்சட்டத்தை நடைமுறைப்படுத்திய நாள்__________

   அ) 15 ஆகஸ்ட் 1947 ஆ) 26 ஜனவரி 1950 இ) 1 ஏப்ரல் 2010

4. 73 ஆவது, 74 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் ஊராட்சி அமைப்புகளில் __________33 விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் கொடுத்துள்ளது.

   அ) ஆசிரியர்களுக்கு ஆ)பெண்களுக்கு இ) பட்டதாரிகளுக்கு

5. __________திட்டம், பெண்கள் சுயஉதவிக்குழுக்கள் போன்ற திட்டங்கள் வழியாகப் பெண்களின் அதிகாரக் குவிப்பு மற்றும் சமூகப் பொருளதார வளர்ச்சிக்கான வழிகாட்டுகிறது.

   அ) குறுகிய கால இல்லங்கள் ஆ) சுயம்ஸிதா

   இ) குடும்ப ஆலோசனை மையம்

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக

1. இளம் குற்றவாளிகள் நீதிச்சட்டம்__________ல் திருத்தியமைக்கப்பட்டது.
2. குழந்தைகளுக்கு உதவி சேவை மையங்கள்__________ துன்பங்கள் ஏற்படும் காலத்திலும், நெருக்கடி நிலையிலும் உதவி செய்கின்றன.
3. 1978 இல் உருவாக்கப்பட்ட குழந்தைத் திருமணத்தடைச் சட்டத் திருத்தம் பெண்களின் திருமண வயதை 15 இலிருந்து _______ ஆக உயர்த்தியுள்ளது.
4. தமிழ்நாடு அரசு__________ஆண்டில் 'ஈவ்டீசிங்' (பெண்களை இகழ்ச்சி செய்தல்) தடைச்சட்டம் இயற்றியுள்ளது.
5. சமூக அட்டூழியங்களினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு __________வழங்கும் மையமாகக், குடும்ப ஆலோசனை மையங்கள் செயல்படுகின்றன.

III ) பொருத்துக.

| | |
|---|---|
| 1. பிரிவு 45 | குழந்தை இறப்பு விகிதம் குறைத்தல் |
| 2. ஒருங்கிணைந்தகுழந்தை வளர்ச்சி திட்டம் | 1961 |
| 3. குழந்தைகள் தினம் | பெண்கள் மறு சீரமைப்பு இடம் |
| 4. வரதட்சணைத் தடைச்சட்டம் | 14 நவம்பர் |
| 5. குறுகிய கால இல்லங்கள் | இலவச மற்றும் கட்டாயக்கல்வி |

IV) குறுகிய விடையளி.

1. பிரிவு 24 குழந்தைகளுக்கு எவற்றை அளிக்கின்றது ?
2. குழந்தைகளின் நலன்கருதி நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் யாவை ?
3. இந்திய அரசினால் குடியரசுதினத்தன்று எத்தகைய குழந்தைகள் கௌரவிக்கப்படுகிறார்கள் ?
4. பிரிவு 23 எவ்வகையில் பெண்களுக்கு உதவுகிறது ?
5. வரதட்சணை தடைச் சட்டம் எதனைத் தடை செய்கிறது.

V) விரிவான விடையளி.

1. குழந்தைகளின் நலனிற்காகவும் உயர்கல்விக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள் யாவை ?
2. பெண்களின் பொருளாதார, அதிகாரக் குவிப்புத் திட்டங்களை விரிவாக எழுதவும்.

**உருவாக்க மதிப்பீடு:**

1. விவாதிக்கவும்:
   அரசியலமைப்புச் சட்டத்தின் 24ஆவது சரத்து எந்த அளவிற்குக் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் வெற்றி கண்டுள்ளது – விவாதி.
2. சுவரொட்டி தயாரிக்க:
   கல்வி உரிமைச் சட்டத்தின் சிறப்பம்சங்களைச் சுவரொட்டியாகத் தயாரிக்கவும்.
3. கலந்துரையாடுக:
   இடைநிற்றலைத் தவிர்க்க அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களை வகுப்பாசிரியர் துணையுடன் கலந்துரையாடு.
4. தெரிந்து கொள்க:
   பெண்கள், குழந்தைகள் முன்னேற்றத்திற்காக உனது பகுதியில் செயலாற்றும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகளைப் பற்றித் தெரிந்து கொள்க.
5. நடித்துக் காண்பி:
   "குழந்தைகள் நம் நாட்டின் வருங்காலத் தூண்கள்" என்ற கருத்தை மையப்படுத்தி நாடகம் ஒன்றை நடித்துக் காண்பிக்கவும்.

# 1. உற்பத்திக்காரணிகள்

பொருளியல் ஒரு சமூக அறிவியல். அது மனித விருப்பங்களைப் பற்றியும், அவை நிறைவு செய்யப்படுவது பற்றியும் விளக்குகிறது. பொருளியல் சமுதாயத்தின் பிரச்சனைகளாகிய வேலையின்மை, வறுமை, மருத்துவ உதவி, உற்பத்தி மற்றும் அரசின் கொள்கைகளைப் பற்றி விளக்குகிறது.


ஆடம் ஸ்மித்

ஆடம்ஸ்மித் பொருளியிலின் தந்தை என அழைக்கப்படுகிறார். அவர் பொருளியலின் இலக்கணத்தைக் கீழ்க்கண்டவாறு வரையறுத்துள்ளார். 'பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஒரு அறிவியல்'. அவருடைய 'நாடுகளின் செல்வம்' (An Enquiry into the nature and causes of wealth of Nations) என்ற புத்தக வெளியீட்டிற்கு பிறகே, பொருளியலை நாம் முறைப்படுத்தப்பட்ட அறிவியலாக அறிகிறோம்.

'இலயனல் ராபின்ஸ்' அவர்கள் பொருளியலுக்குக் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். "விருப்பங்களோடும், கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயிலுகின்ற அறிவியல் பொருளியலாகும்".


இலயனல் ராபின்ஸ்

## சமுதாயமும் பற்றாக்குறையான வளங்களும்

ஒரு சமுதாயம் தன்னிடம் உள்ள பற்றாக்குறையான வளங்களைப் பல்வேறு பயன்பாட்டிற்குப் பகிர்ந்தளிக்கிறது. பற்றாக்குறையாக உள்ள வளங்களைச் சிறந்த முறையில் பகிர்ந்தளிப்பதற்கான விதிமுறைகளைப் பொருளியல் உருவாக்கியுள்ளது.

இந்த நவீன உலகில் மக்கள் நிறைய பண்டங்களையும், பணிகளையும் தங்களது அன்றாட வாழ்க்கையில் நுகர விரும்புகிறார்கள். பணிகளும், பண்டங்களும் உற்பத்தி செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். உற்பத்தி என்பது மனிதன், வளங்களை மாற்றி அமைத்து மனிதத் தேவைகளை நிறைவு செய்யும் முறை ஆகும், பண்டங்கள், பணிகளின் உற்பத்தி அளவைப் பொறுத்தே ஒரு நாட்டின் நாட்டு வருமானம் அமையும். வளர்ந்த நாடுகள் பண்டங்களையும், பணிகளையும் அதிக அளவில் உற்பத்தி செய்வதால் நாட்டு வருமானம் உயர்ந்த அளவில் உள்ளது.

மூலதனமும் தொழிலமைப்பும் பெறப்பட்ட காரணிகளாகும்.

**அறிந்து கொள்வோம்**

உற்பத்தி என்பது பயன்பாட்டை உருவாக்குவதாகும்.

பயன்பாடு என்பது விருப்பங்களை நிறைவு செய்வதாகும்.

நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழிலமைப்பு ஆகியவை பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன. அவை உற்பத்திக் காரணிகள் எனப்படுகின்றன. எந்தப் பொருளையும், பணியையும் உற்பத்தி செய்ய இந்த நான்கு உள்ளீட்டுக் காரணிகளும் அவசியம். ஒவ்வொரு காரணியும் உற்பத்தியில் முக்கிய பங்களிக்கிறது. ஒரு காரணியின் உபயோகம் இல்லாவிட்டால் கூட உற்பத்தி இல்லை. ஆகவே உற்பத்தியாளர் எல்லா உற்பத்திக் காரணிகளையும் சரியான அளவில் இணைத்து உற்பத்தி செய்கிறார். உற்பத்தியாளரின் நோக்கம் குறைந்த செலவில் அதிக லாபம் பெற வேண்டும் என்பதே ஆகும். உற்பத்தி என்பது பண்டங்களை உற்பத்தி செய்வது மட்டுமின்றி, மருத்துவர், ஆசிரியர் போன்ற பல பணிகளையும் உள்ளடக்கியதாகும்.

**செய்முறை**

சமுதாயத்தின் பல்வேறு பொருள்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன ?




நிலம் மற்றும் உழைப்பு ஆகியவை உண்மைக் காரணிகள் அல்லது முதன்மைக் காரணிகள் எனக் குறிப்பிடப்படுகின்றன. முதலீடு மற்றும் நிறுவனம், முதன்மைக் காரணிகளிலிருந்து பெறப்பட்டவையாகும். ஒரு சிறு துண்டு சுண்ணக்கட்டி தயாரிக்க வேண்டுமெனில் மேற்கூறிய அனைத்துக் காரணிகளும் இணைந்து செயலாற்றினால் மட்டுமே இது சாத்தியமாகும்.

**உற்பத்திக் காரணிகளும் அதன் வெகுமதிகளும்**

| நிலம் (வாரம்) | உழைப்பு (கூலி) | மூலதனம் (வட்டி) | தொழிலமைப்பு (இலாபம்) |
|---|---|---|---|

## நிலம்

சாதாரணமாக நிலம் என்றால் (நிலப்பரப்பை) பூமியைக் குறிக்கும். ஆனால் பொருளியலில் மனிதனால் உருவாக்கப்படாத அனைத்துப் பொருள்களும் நிலம் என்றழைக்கப்படுகிறது. இயற்கையின் கொடைகள் அனைத்தும் நிலம் எனப்படும். காற்று, சூரிய ஒளி, பூமி, காடுகள், ஆறுகள் மற்றும் கனிம வளங்கள் ஆகிய அனைத்தும் நிலம் எனப்படும். உற்பத்திக் காரணியான நிலத்திற்கு அளிக்கப்படும் வெகுமதி வாரம் (வாடகை) எனப்படும். மற்ற காரணிகளிடம் காணப்படாத சில சிறப்பியல்புகளைக் கொண்டது நிலம்.

**அறிந்து கொள்வோம்**

நிலமும், உழைப்பும் உண்மைக் காரணிகள்

மூலதனமும், தொழிலமைப்பும் பெறப்பட்ட காரணிகள்

இயற்கையின் கொடையினை கீழே உள்ள படங்களில் காணலாம்.



நிலம்



காடுகள்



ஆறு



கனிமம்

## நிலத்தின் சிறப்பியல்புகள்

### 1. நிலம் இயற்கையின் கொடை ஆகும்

நிலம் மனிதனால் உருவாக்கப்பட்டதன்று. அது இயற்கையாக அமைந்தது.

### 2. நிலத்தின் அளிப்பு நிலையானது

நிலத்தின் மொத்தப் பரப்பளவை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியாது. மனிதன் நிலத்தின் பயன்பாட்டை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

### 3. நிலம் நிரந்தரமானது

நிலம் நிரந்தரமானது ஏனெனில், அதை மனிதனால் அழிக்க முடியாது.

### 4. நிலம் செழிப்புத்தன்மையில் மாறுபடும்

சில நிலங்கள் அதிக செழிப்புத் தன்மை கொண்டது. சில குறைந்த செழிப்புத் தன்மை கொண்டது. எந்த இரு நிலங்களும் செழிப்புத் தன்மையில் ஒன்றாக இருக்காது.

## 5. நிலம் செயப்பாட்டு உற்பத்திக் காரணி


நிலம் தானாக எதையும் உற்பத்தி செய்ய முடியாது. மனிதன் நிலத்தில் உழைத்துப் பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்கிறான்.

**செய்முறை**

உனது பகுதியில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் எங்கே வேலை செய்கிறார்கள் ?

### உழைப்பு

ஊதியத்தைப் பெறுவதற்குச் செய்யப்படும் எந்த வேலையும் உழைப்பு ஆகும். அந்த உழைப்பு உடல் உழைப்பாகவோ, மன உழைப்பாகவோ இருக்கலாம். ஒரு சமையல்காரரின் உழைப்பு உடல் உழைப்பு ஆகும். ஒரு ஆசிரியரின் உழைப்பு மன உழைப்பு ஆகும். இன்பத்திற்காகச் செய்யப்படும் எந்த வேலையும் உழைப்பாகாது. உற்பத்திக் காரணியான உழைப்பிற்கு அளிக்கப் படும் வெகுமதி கூலி ஆகு



உடல் உழைப்பு



மன உழைப்பு

### உழைப்பின் சிறப்பியல்புகள்

#### 1. உழைப்பு அழியக்கூடியது

உழைப்பைப் பண்டங்களைப் போல் சேமித்து வைக்க முடியாது. உழைப்பின் சக்தி ஒரு முறை அழிந்தால் திரும்பப் பெற இயலாது.

#### 2. உழைப்பு பிரிக்க இயலாதது

உழைப்பை உழைப்பாளியிடமிருந்து பிரிக்க இயலாது. உதாரணமாக நடனத்தை, நடனக் கலைஞரிடமிருந்து பிரிக்க இயலாது.

### 3. உழைப்பு மனிதனுக்கு மனிதன் மாறுபடும்

ஒரே மாதிரியான படிப்பும், பயிற்சியும் இருப்பினும் திறமை மாறுபடும். அந்த மாற்றத்தைப் பொறுத்து ஊதியம் அமையும்.

### 4. உழைப்பு இடம் பெயரக்கூடியது

மனிதன் குறைவான ஊதியம் பெறும் தொழிலிலிருந்து அதிக ஊதியம் பெறும் தொழிலுக்கு இடம் பெயர்கிறான்.

### 5. தனி உழைப்பாளிகளின் பேரம் பேசும் ஆற்றல் குறைவு

வளர்ந்து வரும் நாடுகளாகிய இந்தியா போன்ற நாட்டில் உழைப்பாளிகள் வேலை இல்லாமல் இருப்பதை விட குறைந்த ஊதியம் பெற வலியுறுத்தப்படுகின்றனர். தொழிற்சங்கங்களின் வருகை பேரம் பேசும் ஆற்றலை அதிகரித்திருக்கிறது.

## உழைப்பாளிகளின் திறமை

உழைப்பாளிகளின் திறமை என்பது உழைப்பாளிகளின் அதிக உழைப்புத் திறன். அதிக உழைப்புத்திறன் உள்ள உழைப்பாளிகள் உற்பத்தியை அதிகரித்து வளர்ச்சியைப் பெருக்க முடியும். உழைப்பாளிகளின் திறமை சில காரணிகளைப் பொருத்து அமையும்.

அ) தட்ப வெப்பநிலை

ஆ) பரம்பரைக் காரணிகள்

இ) வேலை செய்யும் இடத்தில் நல்ல சூழ்நிலை

ஈ) வேலையின் நேரம்

உ) இடர்ப்பாடு, விபத்து, வைப்பு நிதி போன்றவற்றிற்குக் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு முறைகள்

## வேலைப் பகுப்பு முறை

பொருளியலின் தந்தை ஆடம்ஸ்மித் வேலைப் பகுப்பு முறையைத் தனது "நாடுகளின் செல்வம்" என்ற நூலில் அறிமுகப்படுத்தியுள்ளார். குண்டூசி தயாரிப்பதை உதாரணமாகக் கூறியுள்ளார்.

## வேலைப் பகுப்பு முறையின் பொருள்

ஓர் உற்பத்தி முறையை வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவிடம் ஒப்படைத்தலே வேலைப் பகுப்பு முறை எனப்படும்.

ஆடம் ஸ்மித் குண்டூசி தயாரிப்பைத் தலைப்பகுதி ஒட்டவைத்தல், முனையைத் தீட்டுதல் என வரையறுக்கப்பட்ட 18 உட்பிரிவுகளாகப் பிரித்து விளக்கியுள்ளார். வேலைப் பகுப்பு முறையில் 10 மனிதர்கள் ஒரு நாளைக்கு 48,000 ஊசிகள் உற்பத்தி செய்ய முடியும். ஒரு தொழிலாளி ஒரு நாளில் 4,800 குண்டூசிகள் செய்ய முடியும். வேலைப் பகுப்பு முறையும், இயந்திரங்களும் இன்றி ஒரு தொழிலாளி ஒரு நாளில் ஒரு குண்டூசி மட்டுமே செய்ய முடியும்.

## நன்மைகள்

1. உற்பத்தி அதிகரிக்கின்றது.

2. திறமையில் முன்னேற்றம் காணமுடிகிறது.

3. பெருமளவு உற்பத்தி செய்ய முடிகிறது.

4. காலமும் மூலப்பொருட்களும் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

5. வேலைப் பகுப்பு முறையில் தகுதியான வேலைக்குத் தகுதியான ஆட்களை நியமிக்க முடிகிறது.

## தீமைகள்

1. ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்வதால் சுவையற்ற

(Monotonous) வேலைத்தன்மையை அடைகிறான்.

2. வேலைப் பகுப்பு முறை மனிதத் தன்மையை அழிக்கிறது.

3. கைவினைப் பொருட்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது.

4. ஒரு பொருளை முழுமையாக உற்பத்தி செய்தோம் என்ற மனநிறைவு தொழிலாளிக்கு இல்லாமல் போகிறது.

5. வேலையில் குறுகிய பயிற்சியை பெறுவதால் வேறு வேலை வாய்ப்பைத் தேடுவதற்கான வாய்ப்புகள் குறைகிறது.

## மூலதனம்

பொதுவாக மூலதனம் என்பது செல்வத்தைக் குறிக்கும். பொருளியலில் மூலதனம் என்பது செல்வத்தை மேலும் உற்பத்தி செய்திட மனித முயற்சிகளால் உருவாக்கப்பட்ட செல்வம் ஆகும். இயந்திரங்கள், கருவிகள் மற்றும் இடைப்பொருள்கள் மூலதனத்தில் அடங்கும். கட்டடம் தொழிற்சாலையாக இருந்தால் அது மூலதனம் ஆகும். வீட்டு உபயோகத்திற்காக இருந்தால் அது மூலதனம் ஆகாது. எல்லா மூலதனமும் செல்வம் ஆகும். உற்பத்திக் காரணியான மூலதனத்திற்கு அளிக்கப்படும் வெகுமதி வட்டி ஆகும்.

**செய்முறை**

ஓர் ஆடை நிறுவனம் தொடங்க தேவையான பண முதலீடு எவ்வளவு என்று உன்னால் கருத முடியுமா?

உன்னுடைய சொந்த மனித மூலதனத்தைப் பற்றி யோசி, உன்னிடம் உள்ள திறமைகள் என்னென்ன?








## மூலதனத்தின் வகைகள்

### 1. பருமப் பொருள் மூலதனம்

மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் மீதான மூலதனம் பருமப்பொருள் மூலதனம் என்று அழைக்கப்படுகிறது.

### 2. பண மூலதனம்

பண வடிவில் அல்லது பண மாற்றுப் பத்திரங்களாக உள்ள முதலீடுகள் பண மூலதனம் என்று அழைக்கப்படுகிறது.

### 3. மனித மூலதனம்

கல்வி, பயிற்சி மற்றும் உடல் நலத்திற்காகச் செய்யப்படும் முதலீடு மனித மூலதனம் என்று அழைக்கப்படுகிறது.

#### மூலதனத்தின் சிறப்பியல்புகள்

**1. மூலதனம் ஒரு செயலற்ற உற்பத்திக் காரணி**

நிலத்தைப் போலவே மூலதனமும் உழைப்பின்றி இயங்காது.

**2. மூலதனம் மனித முயற்சியால் உருவாக்கப்பட்டது**

நிலமும், உழைப்பும் உண்மைக் காரணிகள் மூலதனம் என்பது சேமிப்பிலிருந்து உருவானது.

**3. மூலதனம் ஆக்கமுடையது**

மூலதனம் ஆக்கமுடையது ஏனெனில் அது வருவாயைக் கொடுக்கிறது.

**4. மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்**

மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும். அது மறையாது பயனற்று இருந்த மூலதனத்தை மீண்டும் பயன்படுத்தலாம்.

**5. மூலதனம் அதிக இயங்கும் தன்மை கொண்டது**

நிலம் முற்றிலும் இயங்காத் தன்மை கொண்டது. உழைப்பு குறைவான இயங்கும் தன்மை கொண்டது. மூலதனம் இடத்தைப் பொறுத்தும், வேலையைப் பொறுத்தும் இயங்கும்.

#### தொழிலமைப்பு

உற்பத்தி என்பது நிலம், உழைப்பு மற்றும் மூலதனத்தைப் பொருத்தது. அக்காரணிகளைச் சரியான அளவில் இணைத்து, உற்பத்தி முறையை ஒருங்கிணைத்து இடர்ப்பாடுகளை



ஏற்க ஒரு காரணி இருக்க வேண்டும். அக்காரணி 'தொழிலமைப்பு' எனப்படுகிறது.

> **செய்முறை**
>
> ஒரு சிறந்த தொழில் முனைவோருக்குத் தேவையான குணங்களை வரையறு.
>
> ஏதேனும் ஒரு தொழில் முனைவரோடு கலந்துரையாடி அவரின் வெற்றிக்கான காரணங்களை ஆய்க.

தொழில் முனைவோர் என்பவர் பல வகையான உற்பத்திக் காரணிகளைச் சரியான அளவில் இணைத்து உற்பத்தியைத் தொடங்கி, இடர்ப்பாடுகளையும் உறுதியின்மையும் எதிர் கொள்பவர் ஆவார். தொழில் முனைவோர் 'சமுதாய மாற்றம் காணும் முகவர்' என அழைக்கப்படுகிறார்.

#### தொழில் முனைவோரின் பணிகள்

1. இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளைக் காணுதல்

2. உற்பத்தி அலகின் இடத்தைத் தேர்ந்தெடுத்தல்

3. புத்தாக்கப் பணி

4. இடர்ப்பாடுகளை ஏற்றல்

5. உறுதியின்மையை எதிர் கொள்ளுதல்


## சமுதாயத்தின் பலவகைத் துறைகள்

மனிதனின் பல வகையான தொழில்களை மூன்று துறைகளாகப் பிரிக்கலாம்.அவை முதன்மைத்துறை, இரண்டாம் துறை மற்றும் சார்புத்துறை, பண்ணைத் தொழிலாளர்கள் வயலில் வேலை செய்கிறார்கள்.



தொழில் அமைப்பு

தொழிற்சாலைப் பணியாளர்கள் பண்டங்களை உற்பத்தி செய்கிறார்கள். மருத்துவர்கள், ஆசிரியர்கள், வங்கிப் பணியாளர்கள், போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் தங்கள் பணிகளைச் செய்கிறார்கள். பொருளாதார நடவடிக்கையின் சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது. இவ்வாறு பண்டங்கள் பணிகளின் இயக்கம் முதன்மை, இரண்டாம் மற்றும் சார்புத்துறை மூலமாகச் செயல்படுவது **'உற்பத்திச் சங்கிலி'** எனப்படுகிறது.




## முதன்மைத் துறை (Primary Sector)

ஒரு சமுதாயத்தின் முதன்மைத் துறை இயற்கைப்பொருள்களை முதன்மைப் பொருள்களாக மாற்றுகின்றன. இந்தத் துறை உணவு உற்பத்தி மற்றும் மூலப்பொருள்களைக் கொண்டதால் முதன்மை உற்பத்தி எனப்படுகிறது. பெரும்பாலான பொருள்கள் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்களாக விளங்குகின்றன. விவசாயம், மீன்பிடித்தல், வனத்துறை, சுரங்கத்தொழில், கல் உடைத்தல் போன்ற தொழில்கள் இந்தத் துறையைச் சார்ந்தவை. இந்தியாவின் பெரும்பாலான மக்கள் இந்தத் துறையைச் சார்ந்துள்ளனர். பல வளர்ந்த நாடுகளில் கூடுதலான மூலதனம் இந்தத் துறையில் முதலீடு செய்யப்படுகிறது. விவசாயத் தொழில் இந்தியாவின் மிக அதிகமானதாகவும், முக்கியமான தொழிலாகவும் விளங்குகிறது.

## இரண்டாம் துறை (Secondary Sector)

இரண்டாம் துறை முதன்மை உற்பத்தியாளர்களின் மூலப்பொருள்களை உபயோகிக்கத்தக்க பொருள்களாக மாற்றுகிறது. இந்தத் துறை


உற்பத்தித்துறை எனவும் அழைக்கப்படுகிறது. மூலப்பொருள்கள் இறுதி நிலைப் பொருளாகவும் அரை இறுதி நிலைப் பொருளாகவும் மாற்றப்படுகிறது. இந்தத் துறையில் பெரிய அளவிலான உற்பத்தித் தொழிற்சாலைகள் சிறு உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் குடிசைத் தொழில்கள் அடங்கும். உலோகத் தொழில், உருக்காலைகள், நெசவுத் துறை, இரசாயன மற்றும் பொறியியல் தொழிற்சாலைகள், கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் முதலியவை இந்தத் துறையைச் சார்ந்த தொழில்கள்.

## சார்புத்துறை (Tertiary Sector)

ஒரு சமுதாயத்தின் சார்புத்துறை சேவைத்துறை ஆகும். இந்தத் துறை பொது மக்களுக்கும், வணிகத் துறைக்கும் சேவைகளை வழங்குகிறது. காப்பீடு, வங்கித்துறை, உடல் நலம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு சில்லரை மற்றும் மொத்த வியாபாரம், கேளிக்கை ஆகியவை இத்துறையைச் சார்ந்தவை.

நம் நாட்டில் சேவைத்துறையில் கவர்ந்திழுக்கும் வகையில் வேலை வாய்ப்பு விரிவாக்கம் உள்ளது. பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் அதிக சதவிகித தொழிலாளர்கள் சார்புத்துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அமெரிக்காவில் 80 சதவிகித மக்கள் சார்புத்துறை தொழிலாளர்கள். உலக நாடுகளில் மிகவும் முக்கியமான துறையாகச் சார்புத்துறை விளங்குகிறது.

பொருளாதாரத்தில் துறைகளின் பங்களிப்பு




பொருளாதாரத்தின் மூன்று துறைகளும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. பொருளாதாரம் என்பது ______________ அறிவியல் ஆகும்.
   அ) சமூக ஆ) அரசியல் இ) நீதி
2. உற்பத்திக் காரணிகள் ____________ வகைப்படும்.
   அ) இரண்டு ஆ) நான்கு இ) ஐந்து
3. உழைப்பை ______________ இருந்து பிரிக்க முடியாது.
   அ) உழைப்பாளரிடம் ஆ) லாபம் இ) மூலதனம்
4. பொதுவாக மூலதனம் என்பது ________________.
   அ) கட்டடங்கள் ஆ) இயந்திரங்கள் இ) பணம்
5. தொழில் முனைவோர் எப்போதும் செய்வது _______________.
   அ) புத்தாக்கப்பணி ஆ) மரபு இ) இடர்ப்பாடுகள்
6. முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம் _______________.
   அ) வாரம் ஆ) கூலி இ) வட்டி
7. கல்வியில் செய்யப்படும் முதலீடு ___________ மூலதனம் எனப்படும்
   அ) பருமப்பொருள் ஆ) மனித இ) பண
8. உற்பத்திக் காரணியான உழைப்பிற்கு அளிக்கப்படும் வெகுமதி ___________ ஆகும்.
   அ) வாரம் ஆ) கூலி இ) இலாபம்
9. அமெரிக்காவில் ___________க்கு அதிகமான உழைப்பாளர்கள் சார்புத்துறையைச் சேர்ந்தவர்கள்.
   அ) 60% ஆ) 40% இ) 80%
10. வேளாண்மை _______________ துறையைச் சார்ந்தது.
    அ) முதன்மை ஆ) இரண்டாம் இ) சார்பு

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. உற்பத்தி என்பது ___________________ உருவாக்குவதாகும்.
2. _____________ என்பது விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் சக்தி.
3. _____________ மற்றும் __________ உண்மைக் காரணிகள் என்று அழைக்கப்படுகின்றன.

4. ____________ என்பது இயற்கையின் கொடையாகும்.

5. மூலதனமும், தொழில் அமைப்பும் ___________ காரணிகள் ஆகும்.

6. வேலைப் பகுப்பு முறை என்பதை அறிமுகப்படுத்தியவர் ___________

7. ___________ என்பவர் சமுதாய மாற்றம் காணும் முகவர்.

8. இரண்டாம் துறை __________ என்றும் அழைக்கப்படுகிறது.

9. சமுதாயத்தின் பொருளாதார சார்புத் துறை என்பது _________ துறை ஆகும்.

10. "நாடுகளின் செல்வமும் அவற்றின் இயல்புகளும் ஓர் ஆய்வு "என்ற நூலை எழுதியவர் _______________.

## III) சுருக்கமான விடையளி

1. லயனல் ராபின்ஸின் பொருளியல் இலக்கணத்தை கூறுக.
2. ஒரு நாட்டின் மூன்று துறைகள் யாவை ?
3. வேலைப் பகுப்பு முறை என்றால் என்ன ?
4. மூலதனத்தின் மூன்று வடிவங்கள் யாவை ?
5. உற்பத்திக் காரணிகளையும் அதன் வெகுமதிகளையும் குறிப்பிடுக.

## IV) ஒரு பத்தியில் விடையளி.

1. நிலத்தின் சிறப்பு இயல்புகளை விளக்குக.
2. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?

## V) விரிவான விடையளி

1. வேலை பகுப்பு முறையின் நன்மை தீமைகள் யாவை ?
2. சார்புத்துறையைப் பற்றி விளக்குக.

## உருவாக்க மதிப்பீடு:

1. பல வகையான தொழில் புரிவோரின் படங்களைச் சேகரி.
2. பலவகைத் தொழில் புரிவோரையும், அவர்களது வருமானம் பற்றியும் கணக்கெடு.
3. ஓர் வங்கி மாதிரியைத் தயார் செய்க.
4. உன்னிடம் உள்ள திறமைகளைப் பட்டியலிடு.
5. கிராமப்புற மக்கள் செய்யும் வேலைகளைப் படமாக வரையவும்.
6. உன் நகரத்தில் உள்ள வங்கிகளின் எண்ணிக்கையைப் பற்றிய பட்டியல் தயார் செய்க.
7. சார்புத் துறையிலுள்ள பணிகளைப் பட்டியலிடுக.
8. ஒரு தொழில் முனைவோர் தொழில் தொடங்கச் செய்ய வேண்டிய பணிகளைக் கூறுக.
9. பல நாடுகளின் நாணயங்களை பற்றி எழுதுக.
10. உடல் உழைப்பு, மன உழைப்பு பற்றி படங்களைச் சேகரி.

# 2. வரியும் அதன் முக்கியத்துவமும்


**கற்றல் நோக்கங்கள்:**

- வரி மற்றும் அதன் வகைகள்
- நேர்முக மற்றும் மறைமுக வரி வேறுபாடுகள்
- நேர்முக மற்றும் மறைமுக வரிகளின் வகைகளைப் பட்டியலிடுவது
- வரி செலுத்துவதின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்
- VAT, TDS, CENVAT போன்றவற்றை வரையறுக்க மாணவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்

வரி என்பது தொழிலாளர்களின் வருமானம் மற்றும் வியாபார இலாபத்தின்மீது அரசாங்கம் விதிக்கும் தொகை அல்லது சில பொருள்கள் , சேவைகள் மற்றும் பரிமாற்றங்கள் தொடர்பான செலவில் சேர்க்கப்பட்ட கட்டண வரி என்பதாகும். 'டாக்ஸோ' என்ற லத்தீன் வார்த்தைக்கு 'விகிதம்' என்பது பொருள். வரி என்பது, அரசால் அல்லது அரசு சார்ந்த துறையால் விதிக்கப்படும் கட்டணம் ஆகும். இது அரசின் பல்வேறு செலவினங்களுக்காக வரி செலுத்துபவரிடமிருந்து பெறப்படும் வருவாய் ஆகும். வரியை நேர்முக வரி மற்றும் மறைமுக வரி என இரு முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம்.

வரி நாகரிகத்தின் கட்டடத்தொகுதி (Building Block of Civilization) என்று அழைக்கப்படுகிறது. வரி பண்டைய சுமேரியாவில் வழக்கத்திலிருந்ததாகச் சொல்லப்படுகிறது. சுமேரியா ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முதல் சமூகமாகும். வரி பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமப்பேரரசின் ஓர் அடிப்படைப் பகுதியாக இருந்தது. தமிழகத்தின் உத்திரமேரூர் கல்வெட்டிலும் வரி விதிப்பு பற்றிய குறிப்புகளைக் காண முடிகிறது.

வரிகள் மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பார்ப்போம்.




## I. நேர்முக வரி

மக்கள், நிறுவனங்களின் வருமானம் மற்றும் சொத்தின்மீது ஓர் அரசு தீர்வை விதிக்கிறது. நேரடி வரியைச் செலுத்துகிற நிறுவனமே அதை முற்றிலும் ஏற்க வேண்டியுள்ளது. நேரடி வரி செலுத்துபவர்கள் மத்திய அரசுக்கு நேரடியாக வரியைச் செலுத்துவதால், இதை நேர்முக வரி என அழைக்கிறோம்.

**உங்களுக்கு தெரியுமா ?**

TDS இன் விரிவாக்கம் – Tax Deduction at Source.

நேர்முக வரிகளின் வகைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**1. வருமானவரி**

தனிநபர் வருமானம், பெரிய நிறுவனம், வரி விதிப்பிற்குட்பட்ட தொழில், முதலீடுகள் மற்றும் சொத்துத்தொடர்பான இலாபத்தின்மீது விதிக்கப்படும் கட்டணத்தீர்வையையே வருமானவரி என்கிறோம். பரிந்துரைக்கப்பட்ட வரிவிலக்கு வரம்புக்குமேல் வருமானம் உள்ளவர்கள் வருமான வரி செலுத்தவேண்டும்.

> **உங்களுக்கு தெரியுமா ?**
>
> இறந்தவரின் சொத்தின்மீது செலுத்தும் வரி எஸ்டேட் வரி ஆகும். இது தற்போது நீக்கப்பட்டுவிட்டது.

**2. நிறுவன வரி**

நிறுவன இலாபத்தின்மீது அரசாங்கம் விதிக்கும் வரி நிறுவன வரி என்றழைக்கப்படுகிறது. இந்தியாவில் செயல்படும் இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த வரியைச் செலுத்த வேண்டும். இந்த வரி அரசாங்க வருமானத்தின் ஒரு முக்கியப் பகுதியாகும்.

**3. பரிசு வரி**

ரூ.50,000/–க்கு மேல் பரிசாகப் பெறுபவர்கள் அன்பளிப்பு வரி செலுத்த வேண்டும். எனினும் உறவினர்கள் மூலம் பெறப்படும் பணம், திருமணப் பரிசு மற்றும் பூர்வீகச் சொத்தாகப் பெறும் பொருள்கள் மற்றும் பணத்திற்குப் பரிசு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.




**4. சொத்துவரி**

சொத்துவரி என்பது, உள்ளாட்சிப் பகுதிகளில் உள்ள ஒரு நில உரிமையாளர் செலுத்தும் ஆண்டுத்தீர்வையாகும். நிலம் மற்றும் வீட்டுமனை விற்பனைச் சொத்து, வீடு, அலுவலகக் கட்டடம் மற்றும் வாடகைக்கு விடும் சொத்து என அனைத்தும் இதில் அடங்கும். ஒரு சொத்தின் அமைவிடம், கட்டுமானம், அளவு மற்றும் கட்டடம் போன்றவற்றைப் பொருத்தே வரித்தொகை நிருணயிக்கப்படுகிறது. வசூலிக்கப் பட்ட வரிக் கட்டணம் பள்ளிகள், கட்டடங்கள், சுகாதார வசதிகள் போன்ற கட்டுமானப்பணிகளைப் புனரமைக்க சொத்துவரி பயன்படுத்தப்படுகிறது. சொத்துவரி மின்சாரம், குடிநீர் மற்றும் வடிகால் வரிகளைக் கொண்டுள்ளது.

**II. மறைமுக வரிகள்**

நுகர்வு, செலவு மற்றும் சிறப்பு உரிமைமீது மத்திய மற்றும் மாநில அரசு விதிக்கும் வரி மறைமுக வரி ஆகும். விற்பனைவரி , இறக்குமதி வரி, கலால் வரி மற்றும் சுங்க வரி ஆகியன மறைமுக வரிகளுக்கு உதாரணங்களாகும். இது தனிநபர் வருமானத்தின்மீது நேரடியாக விதிக்கப்படாததால், மறைமுக வரி என அழைக்கப்படுகிறது.



### 1. விற்பனை வரி

நகரும் பொருள்களை ஒரு நாட்டிற்குள் விற்கவோ வாங்கவோ செய்யும்போது விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இது தற்போது மதிப்புக் கூட்டு வரி (VAT) என அழைக்கப்படுகிறது. உங்கள் பெற்றோர் சந்தையில் வாங்கியப் பொருள்களின் பற்றுச்சீட்டில் VAT என்னும் சொல்லைப் பார்த்திருக்கிறீர்களா ?




### 2. சேவை வரி

சேவைவரி என்பது, குறிப்பிட்ட சேவை மாற்றங்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மீது மத்திய அரசு விதிக்கும் வரி ஆகும். ஆனால், சேவைவரியை உண்மையில் வாடிக்கையாளர்கள்தாம் ஏற்கவேண்டி இருக்கிறது. இது மறைமுக வரியின்கீழ் உள்ளது. சேவைவரி தொடர்பான நிதிச் சட்டம் 1994ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இந்தியாவில் சேவை வழங்குநர்கள் இந்த வரியைச் செலுத்துகிறார்கள். குத்தகை, இணையம், போக்குவரத்துப் போன்ற சேவைகள் இதில் உட்படுத்தப் படுகின்றன.

### 3. சுங்க வரி

சுங்கவரி ஒரு நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள்மீது விதிக்கப்படுகிறது. உதாரணமாக, வெளிநாட்டிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்யும்போது துறைமுகம், விமான நிலையம் போன்ற இடங்களில் சுங்கவரி செலுத்தப்படுகிறது.

### 4. கலால் வரி

ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களின் மீது அந்நாட்டிலேயே விதிக்கப்படும் வரி கலால் வரி எனப்படும். இது மைய மதிப்புக்கூட்டு வரி (CENVAT). கலால் வரி மற்றும் சுங்கவரிக்கு இடையே உள்ள வேறுபாட்டை உன்னால் வெளிக்கொணர முடியுமா ?

### வரி செலுத்துவதன் முக்கியத்துவம்

நாம் அனைவரும் ஏதேனும் ஒரு வகையில் அரசாங்கத்திற்கு வரி செலுத்துகின்றோம். அரசு பல்வேறு நிலைகளில் அதாவது மத்திய, மாநில, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அளவில் வரியை சேகரிக்கிறது. வரி செலுத்துவதன் முக்கியத்துவத்தை பின்வருமாறு கூறலாம்.

1. வரி என்பது அரசு வருமானத்தின் மிக முக்கியப் பகுதியாகும்.
2. வரி செலுத்துவது நமது அடிப்படைக் கடமை ஆகும்.
3. அரசு கட்டடம், போக்குவரத்து, பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் போன்ற உள்கட்டமைப்பு வளர்ச்சி மேம்பட வரி பயன்படுகிறது.
4. பல சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவது என்பது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வரியின் அடிப்படையில்தான் சாத்தியமாகிறது.
5. மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வரியின் அடிப்படையில் தான் நிதிநிலை அறிக்கை தயார் செய்து செயல்படுத்தப்படுகிறது.
6. வரிகள் சர்வதேசக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இந்தியாவில் செயல்படும் நிறுவனங்கள் செலுத்தும் வரி
   அ) செல்வ வரி ஆ) நிறுவன வரி இ) பரிசு வரி ஈ) சுங்க வரி
2. ஒருவர் அரசாங்கத்திற்கு நேரடியாகச் செலுத்தும் வரி
   அ) மறைமுக வரி ஆ) விற்பனை வரி இ) நேர்முக வரி ஈ) சேவை வரி
3. பின்வருவனவற்றில் எது மறைமுக வரி ?
   அ) சேவை வரி ஆ) வருமான வரி இ) நிறுவன வரி ஈ) பரிசு வரி
4. பின்வருவனவற்றில் எது நேரடி வரி ?
   அ) பரிசு வரி ஆ) சுங்க வரி இ) சேவை வரி ஈ) விற்பனை வரி
5. உள்நாட்டிலேயே உற்பத்தியாகும் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரி
   அ) விற்பனை வரி ஆ) சேவை வரி இ) சுங்க வரி ஈ) கலால் வரி

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. __________________ என்பது அரசாங்கத்திற்கு நாம் செலுத்தும் கட்டணத்தீர்வை ஆகும்.
2. அரசால் பரிந்துரைக்கப்பட்ட வரிவிலக்கு வரம்புக்குமேல் வருமானமுள்ளவர்கள் செலுத்துவது __________________ வரியாகும்.
3. நகரும் பொருள்களை உள்நாட்டிற்குள் விற்பது அல்லது வாங்கும்பொழுது __________________ வரி விதிக்கப்படுகிறது.

### III. குறுகிய வினாக்கள்

1. வரியின் இரு முக்கிய வகைகள் யாவை ?
2. மறைமுக வரிவகைகளைப் பட்டியலிடுக.
3. விற்பனை வரி மற்றும் சேவைவரி– வேறுபடுத்துக.
4. அன்பளிப்பு (பரிசு) வரி– வரையறு.
5. மதிப்புக் கூட்டுவரி (VAT) என்றால் என்ன ?

### IV. விரிவான விடையளிக்க.

1. வரி செலுத்துவதன் முக்கியத்துவத்தைப் பற்றி விவரிக்க.
2. நேர்முக வரிவகைகளை விவரிக்க.

## உருவாக்க மதிப்பீடு:

1. கீழுள்ளவற்றை ஒரு வரைபடத் தாளில் தயார் செய்து வகுப்பறையில் மற்ற மாணவர்களுடன் பகிர்ந்து கொள்க.
   அ) அரசால் பரிந்துரைக்கப்பட்ட தனிநபர் வருமான வரிவிலக்கு வரம்பு
   ஆ) VAT இன் சதவீதம்.
   இ) இறக்குமதிப் பொருள்கள் மீதான வரி விலக்கிற்கான குறைந்தபட்சத்தொகை.
2. ஐந்து பெரிய நிறுவனங்களின் பெயர்களைப் பட்டியலிட்டு, அவற்றின் ஆண்டு வருமானம் மற்றும் அவை செலுத்திய வரித்தொகையைக் கண்டறிக.

## 'என்னால் முடியும், நான் செய்தேன்'

('I can, I did')

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ. எண் | நாள் | பாட எண் | பாடத் தலைப்பு | செயல்பாடுகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |